# தமிழரசு

1.5.1976 50 காசு



# வளமான வாழ்விற்கு....





நாடு நலம் பெற
வீடு வளம் பெற

அரிய பெரிய திட்டங்கள்
அரசு நிதம் தீட்டுகிறது.

திட்டங்களின் இனிய பலன்
எட்டிடவே எல்லோர்க்கும்

அளவான குடும்பம்
அமைவதுதான் சிறப்பாகும்!

**பிறந்ததைக் காப்போம்!**
**பிறப்பதைத் தவிர்ப்போம்!!**

குடும்ப நலத்துறை
தமிழ்நாடு அரசு.



# காந்தியடிகளும் திருக்குறளும்

**கா**ந்தியடிகளிடம் ஓர் அன்பர் திருக்குறள் குறித்துக் கீழ்க் கண்ட வினாவைக் கேட்டார்.

''குறளை நீங்கள் அறிவீர்கள். அந்தத் தமிழ் இலக்கியத் தின் ஆசிரியர்,

''பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான் ''

என்னும் குறளின் மூலம் பிறப்பால் சாதியில்லை என்று கூறியிருப்பதை நீங்கள் அறிவீர்களா ? ''

வினாத் தொடுத்த அன்பருக்குக் காந்தியடிகள் தமது 'யங் இந்தியா' பத்திரிகையின் வாயிலாக மறுமொழி அளித்தார். அது இது :

''மிகைபடக் கூறும் தற்போதைய நிலைக்கு விடை யாகவே அவர் அவ்விதம் கூறியுள்ளார். எந்த வர்ண மாவது உயர்வுக்கு உரிமை கொண்டாடிய போது, அவர் அதை எதிர்த்துத் தமது குரலை எழுப்ப வேண்டி யிருந்தது. பிறப்பினால் வர்ணம் என்ற கொள்கையின் வேரை அது அறுத்து விடவில்லை. அது சமத்துவ மின்மைக் கொள்கையின் வேரை அறுக்க வேண்டு மென்ற சீர்திருத்தவாதியின் முயற்சியேயாகும்.''

அண்ணல் அளித்த மறுமொழி, அவர் திருக்குறளை நுணுகிப் பயின்றிருக்கிறார் என்பதை எடுத்துரைக்கிற தல்லவா ?

ஆதாரம்: மகாத்மா காந்தி நூல்கள்-7.

தமிழரசு

மலர்- 6 * 1-5-1976 * இதழ் - 21



# வள்ளுவர் காட்டிய வழி நடப்போம்!

"உலகப் பொது நோக்குக் கொண்ட மனிதனுக்கு அறவுரைப் பாடலை அருளிய அமரகவியான திருவள்ளுவரின் நினைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், வரலாற்றுச் சிறப்பு மிக்க இச்சென்னை மாநகரில் எழுப்பப்பட்டுள்ள எழில் தவழும் இந்த வள்ளுவர் கோட்டத்தைத் திறந்து வைக்கும் பேற்றினை எனக்கு வழங்கியதற்காக ஆளுநர் திரு. கே. கே. ஷா அவர்களுக்கும் தமிழக மக்களுக்கும் நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். எக்காலத்திற்கும், எல்லா மாந்தர்க்கும் ஏற்ற வகையில் நடைமுறைக்குப் பொருந்தும் அறக் கருவூலமாக ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேலாக திருவள்ளுவரின் ஒரே படைப்பான திருக் திருக்குறள் போற்றப்பட்டுள்ளது. வள்ளுவர் வழங்கிய வாய்மொழி அவர் காலத்திற்கு எவ்வளவு ஏற்றதாக இருந்ததோ, அதே அளவிலும் நிலையிலும் இன்றைய சூழ்நிலைக்கும் ஏற்புடையதாக இலங்குகிறது. அறிவும் ஆராய்ச்சியும் வழிகாட்டிகளாய் அமைந்து, மனிதனின் மனப்பான்மை விரிந்து, பெருகி, முற்போக்கு அடைந்துவரும் இன்றைய உலகப் போக்குக்கு இசைவாகவும், இயைந்ததாகவும், திருக்குறளின் கருத்து வளம் மேன்மேலும் கவர்ச்சியும் வளர்ச்சியும் பெற்று விளங்குகிறது.

**எக்காலத்திற்கும் எந்நாட்டவர்க்கும் ஏற்றது!**

"எடுப்பான வடிவழகும் ஒலிநயமும் அமைந்து இனிக்கின்ற குறட்பாக்கள், எக்காலத்திற்கும் எந்நாட்டவர்க்கும் பொருத்தமாகவும், இன்றைய சூழலுக்கு ஏற்றதாகவும் விளங்குவதோடு, தமிழக மக்களால் பரவலாகப் பயிலப் பெற்று, பெரிதும் போற்றப் பெறுகின்றன. இந்நிலையில் திருக்குறளின் மாட்சியினை நான் உங்களுக்கு எடுத்துரைக்க வேண்டுமென்பதில்லை.

"உயர் பேரறிவில் உதித்த ஒளிமணிகளின் அறக்களஞ்சியமாகத் திகழும் திருக்குறள் போலப் பிறிதொரு நூலை உலக அரங்கில் காண இயலாது" என அறிஞர் 'ஆல்பர்டு சுவைட்சர்' சூட்டிய புகழுரையைவிடச் சிறந்த பாராட்டாக வேறொன்றை உரைக்க இயலாது.

**இந்தியப் பண்பாட்டை உருவாக்குவதில் தமிழர்களின் தொண்டு!**

"ஆங்கிலத்தில் திருக்குறளின் மொழி பெயர்ப்பை நான் படித்தபோது, பொதுமையான இந்தியப் பண்பாடு என்ற உன்னத கலாச்சார அடித்தளத்தை உருவாக்குவதற்கு, தொன்றுதொட்டே தமிழர்கள் நிலையான தொண்டாற்றி வந்துள்ளதைக் கண்டு, நான் வியந்து மகிழ்ந்தேன். அறிவும் விஞ்ஞானமும் மனிதனின் எண்ணங்களை ஆட்கொண்டு வழி காட்டி வருகின்ற இன்றைய அணுயுகத்தில் பொதுவான அற மேம்பாட்டையும் பொருளாதார உயர்வினையும் குறிக்கோளாகவும், அறிவு அன்பு அருள் ஆகியவற்றை அடிப்படையாகவும் கொண்ட ஒரு சமுதாய வாழ்க்கை நெறியையும், நடைமுறைச் செயலாக்கத்தையும் இணைத்து உணர்த்துகின்ற திருக்குறள், காலத்திற்கேற்ற எழுச்சியையும், ஏற்றத்தையும் ஊட்டி வருகின்றது. நமது தாய்நாட்டின் தலைநகரமான டெல்லியில் சென்ற ஆண்டு திருவள்ளுவரின் திருவுருவச் சிலையைத் திறந்து வைக்கும் நல்வாய்ப்பினை நான் பெற்ற போதும் இந்த அறநெறிக் கவிஞர் அறிவுறுத்தியுள்ள இப்பொதுமை நோக்கினையே அங்கும் நான் வலியுறுத்தியுள்ளேன். இந்தியாவின் பல்வேறு கலாச்சாரத் தொகுதிகள் வளர்ந்து வளமடையும் நேரத்தில், பாரத நாட்டின் பொதுமைப் பண்பாட்டையும், சமுதாயக்

# குடியரசுத்தலைவர் உரை

கலாச்சார மலர்ச்சியையும், உணர்வில் ஊன்றிய ஒருமைப் பாட்டினையும் உறுதிப்படுத்த ஒன்று கூடி விரைவாகச் செயல்படுத்துவதன் அவசியத்தை நான் அந்த உரையிலே வலியுறுத்தினேன்.

### சமுதாயம் சிறப்புப் பெற......

''வள்ளுவரின் தனித்த தத்துவச்சிந்தனைக்கு மனிதன்தான் மையம். தனி மனிதன் வாழ்வில் வளம் பெற்று நிறைவு அடைவதற்கும்; உலகம் முழுவதுமே உயர்ந்த இன்ப நிலையை எய்துவதற்கும், உறுதுணையாகும் சமூக நெறிக் கோட்பாடுகளாக, ''அறம், பொருள், இன்பம் என்ற முப்பெரும் கோட்பாடுகளைத் தம் நூலில் வள்ளுவர் வலியுறுத்தியுள்ளார். தனி மனிதனுக்கு அறிவும் அறநெறியும் புகட்டுவதில் தொடங்கி, அறத்தில் சிறக்கும் அத்தனி மனிதரால் உருவாகும் சமுதாயம், சீரும் சிறப்பும் பெற்று ஒளிர அவர் வழி வகுத்தார்.

### பொன்னான நடுநிலைப் பாதை.

''மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற''

என்ற குறட்பாவின் மூலம் தனி மனிதனின் மனத்தூய்மையை வலியுறுத்திய திருவள்ளுவர், அறநெறிக் கவிஞர்களில் தலையாய இடம் பெற்று, ஈடில்லாத் தீர்க்க தரிசியாகத் திகழ்கிறார். இலட்சிய உணர்வு என்ற எட்டாத வானத்தைத் தொட்டுப் பிடிக்கமுயலும் அறக் கவிஞர்கள் சிலர். உலகியல் நடைமுறையை அனுசரித்து உலகோடு ஒத்துப்போகும் உசித நெறியை உணர்த்தும் அறக் கவிஞர்கள் சிலர். ஆனால், திருவள்ளுவரோ இவை இரண்டுக்கும் இடையே பொன்னான நடுநிலைப் புதுப் பாதையை வகுத்துள்ளார். இம்மா முனிவர் செய்துள்ள அற்புதச் செய்யுள் நெசவிலே உலக நெறி பாவாகவும், இலட்சிய நெறி ஊடாகவும் பின்னப்பட்டுள்ளன.

### அரசு அமைப்பிற்கு இலக்கணம் வகுத்தவர்

''புதிய மனிதனைப் பற்றி இன்று தத்துவ அறிஞர்கள் பேசுகின்றார்கள். இன்று அவர்கள் எடுத்துரைக்கும் கோட்பாடு, திருக்குறளின் அறத்துப்பால் அதிகாரங்களில் எதிரொலிக்கக் காணலாம். ஈராயிரம் ஆண்டுகளுக்குப் பின்பும் அவர் கண்ட கோட்பாட்டின் சிறப்பினை விஞ்சுவது அரிதாக உள்ளது. பொதுமை நோக்கில் ஊன்றிய வள்ளுவர் நீதிக்கும் நேர்மைக்கும் நிலைக் களனாய் நிலவும் அரசு அமைப்பிற்கும் இலக்கணம் வகுத்துள்ளார். அரசியல் மெய் அறிஞர்கள் பலர் அறிவுறுத்தியுள்ளது போல், நவயுக மனிதன், நீதி நிலவும் சமுதாய அமைப்பு, என்ற இரண்டு கோட்பாடுகளும் இணைந்து கைகோர்த்துச் செல்பவை. குடிமக்களின் கடமைகள், நேர்மையை அடிப்படையாகக் கொண்ட அரசின் நெறிகள், இரண்டும் ஒன்றுக்கொன்று ஊட்டம் ஊட்டி, உறவு கொண்டு வளர்வது பற்றி இன்று பேசப்படுகிறது. நேர்மையான சமுதாய அமைப்புப் பற்றி வள்ளுவர் ஆக்கியுள்ள பொதுப்பால் அதிகாரங்களில், ஆட்சியாளரின் கடமைகள், அமைச்சர்க்கும் அதிகாரிகளுக்கும் தேவையான பண்பு நெறிகள், ஓர் இலட்சிய அரசின் எல்லைக்கோடுகள் ஆகியவற்றைத் தெளிய எடுத்துக் காட்டியுள்ளார்.

இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. பக்ருதின் அலி அகமது அவர்கள், தமிழக ஆளுநர் திரு. கே. கே. ஷா அவர்கள் தலைமையில் 15-4-'76 அன்று மாலை சென்னையில் வள்ளுவர் கோட்டத்தைத் திறந்து வைத்தார்.



### சமதர்மம் என்பது புதியதொரு கோட்பாடல்ல!

''சமதர்மச் சமுதாய அமைப்பின் மூலமாக வறுமை, பிணி, அறியாமை ஆகியவற்றைப் போக்க நாம் உறுதியான போராட்டத்தில் முனைந்துள்ளோம். சமதர்மம் என்பது புதியதொரு கோட்பாடல்ல. 1964-ஆம் ஆண்டு மார்ச் திங்களில் சென்னை சட்டமன்றத்தில் திருவள்ளுவரின் திரு உருவப் படத்தைத் திறந்து டாக்டர் ஜாகிர் உசேன் நிகழ்த்திய உரையை உங்களுக்கு நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

''நாட்டின் செல்வத்தை உற்பத்தி செய்தல் (இயற்றல்)
வசதிகளைத் திரட்டி சேமித்தல் (ஈட்டல்)
நேரிய முறையில் செல்வப் பகிர்வும் பங்கீடும் செய்தல் (வகுத்தல்)

ஆகிய மூன்றும் ஆட்சியாளர்களின் கடமைகள் என்று, ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே-ஆழ்ந்த சிந்தனை செறிந்த அற்புத குறட்பா நடையிலே - எடுத்துக் காட்டியுள்ளார், திருவள்ளுவர். தமிழ் நாட்டின் தலையாய இந்த ஞானியைவிடச் சிறந்த சமதர்மவாதி வேறு எவரும் இருக்க முடியாது'' என்று டாக்டர் ஜாகிர் உசேன் உளம் நெகிழ உரையாற்றினர்.

### சமவாய்ப்பு அளிக்கும் பொருளாதார அமைப்பு!

''வறுமையை ஒழிப்பதே சமதர்மத்தின் அடிப்படைக் குறிக்கோள். வள்ளுவரின் விரிந்த நோக்கும், கூரிய பார்வையும் இன்றைய சமுதாய அமைப்பின் சீர்கேட்டினைக் கூடத் தெளிவாகச் சுட்டிக் காட்ட உதவுகின்றன. வறுமை என்பது ஆண்டவனல் ஆக்கப்பட்டதல்ல; மனிதனல் உருவாக்கப்பட்டது தான், என்பது வள்ளுவர் வலியுறுத்தியுள்ள உண்மை. சமுதாயத்தின் பொருளாதார வளங்களும் வசதிகளும் ஒருசிலரின் ஏகபோகத்தில் சிக்கவிடாமல் பலரும் பரவலாகப் பகிர்ந்து கொள்ளவும், ஒவ்வொரு குடிமகனும் சமவாய்ப்புப் பெறவும், வகைசெய்யும் வண்ணம் பொருளாதார அமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்று அவர் உணர்த்தினர்.

### வள்ளுவரின் இலட்சியக் கனவுகளை நனவாக்குவோம்!

''ஞானிகள், அறிஞர்கள் ஆகியோரின் நினைவைப் பசுமையாகப் போற்றிப் பாராட்ட நினைவாலயங்களும், சின்னங்களும் எழுப்புவது பாரதநாடு பின்பற்றிவரும் பாரம்பரியமாகும். அவர்கள் பொன்னன நினைவைப் போற்றவும், அவர்கள் உணர்த்திய உண்மைகளையும் உபதேசங்களையும் நினைவுபடுத்தி, நெஞ்சில் நிலை நிறுத்திடவும், மக்கள் அவற்றைக் கடைப்பிடிக்க வகை செய்யவும்தான், இந்த நினைவுச் சின்னங்கள் நிறுவப்படுகின்றன. இச்சின்னங்களின் சிறப்பு, கட்டடங்களின் கம்பீரத்திலும் கவர்ச்சியிலும் அடங்கியதல்ல; அவற்றின் அடிப்படையாக உள்ள இலட்சிய அறிவுரைகளில் அடங்கியது ஆகும். திருக்குறளின் உயர்ந்த எண்ணங்களையும் கோட்பாடுகளையும் கவர்ச்சிமிக்க வெறும் கோஷங்களாகக் கருதி விடாமல், அவற்றைச் செயல்படுத்தி அந்த இலட்சியக் கனவுகளை நனவாக்க முயலவேண்டும். திருவள்ளுவரின் அறநெறிக் கோட்பாடு



களைக் கடைப்பிடித்து, அவருடைய அழியாத படைப்பு நமக்கு விடுக்கும் அழைப்பினை ஏற்று, ஊக்கத்தில் உறுதியும் நோக்கில் தெளிவும் கொண்டு, அயராத உழைப்புக்கு நம்மை அர்ப்பணம் செய்வதே அவருக்கு நாம் செலுத்தக் கூடிய சிறந்த அஞ்சலியாகும்.

### வள்ளுவர் கோட்டம் ஒரு கலங்கரை விளக்கம்!

''இச்சொற்களால் திருவள்ளுவர்க்கு என் அஞ்சலியைச் செலுத்தி, வள்ளுவர் கோட்டத்தைத் திறந்து வைப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். அறிவுப் பணிகளுக்கும் கலாச்சாரப் பணிகளுக்கும் கேந்திரமாகவும் இந்த நிலையம் மலர்ந்து, வளர்ந்து, உயிர்த் துடிப்புடன் செயலாற்றும் என்று நம்புகிறேன்.

''ஓங்கி நிற்கும் இந்த நினைவுச் சின்னம், இந்த தலைமுறையினருக்கு மட்டுமல்லாமல், இனி வரும் தலைமுறையினருக்கும் கலங்கரை விளக்கமாக விளங்கும் என்பதில் எனக்கு ஐயமில்லை. இந்த அரிய வாய்ப்பினை எனக்கு வழங்கிச் சிறப்பித்ததற்குத் தமிழக மக்களுக்கு நான் மீண்டும் என்னுடைய நன்றியைக் காணிக்கை ஆக்குகிறேன்.

''வணக்கம், ஜெய்ஹிந்த்.''

**[1976-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15-ஆம் நாள் மாலை 6-30 மணிக்கு, சென்னை, நுங்கம்பாக்கம் ஏரிக்கரைப் பகுதியில் அமைந்துள்ள வள்ளுவர் கோட்டத்தினைத் திறந்து வைத்து இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. பக்ருதீன் அலி அகமது அவர்கள் ஆற்றிய ஆங்கில உரையினைத் தமிழ்நாடு அரசின் உணவுத் துறைச் செயலாளர் திரு. க. திரவியம், ஐ.ஏ.எஸ்., அவர்கள் தமிழாக்கம் செய்தார்.]**

# உணர்வுகளைத் தூண்டும் ஒப்பற்ற திருக்குறள்



## ஆளுநர் உரை

"மனித இனத்தின் மிக உயர்ந்த விருப்பங்களை விளக்கும் உருவமாகவும், சமுதாயத்தின் பல்வேறு பகுதியினருக்கும் இடையே ஒருங்கிணைந்த ஒற்றுமையை ஏற்படுத்தும் தூதுவனாகவும் விளங்கிய திருவள்ளுவரின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள இந்த நினைவுச் சின்னத்தைத் திறந்து வைத்திட நமது பெருமதிப்பிற்குரிய குடியரசுத்தலைவர் அவர்கள் நம்மிடையே இருப்பதால், நாம் அதிர்ஷ்டக்காரர்களாவோம். திருவள்ளுவரின் கருத்து, காலத்தின் கோலத்தால் விளையும் கொடுமைகளை வென்றுள்ளது; அறிவியல் வளர்ந்து, மாபெரும் உண்மைகளைப் புலப்படுத்தி வந்த போதிலும், அதனாலும் அழியாமல் நிலைத்து நிற்கிறது.

"குடியரசுத் தலைவர் அவர்களே! தாங்கள் பல்வேறு கலாச்சாரங்களையும் இந்தியாவின் அடிப்படை ஒற்றுமையையும் வளர்க்கும் பண்பாளராக விளங்குவதோடு மட்டுமல்லாமல், பெரும் நாட்டுப் பற்றுள்ளவராகவும், தேசிய வீரராகவும், நமது நாகரிகம், கலாச்சாரம் ஆகியவற்றின் பிரதிநிதியாகவும் விளங்குவதால், உங்களிடம் நாட்டின் பெருமதிப்பிற்குரிய தலைவரின் சிறப்புகள் அமைந்திருப்பதைக்காண்கிறோம். திருவள்ளுவரின் கருத்துக்கள் உலகம் முழுவதற்கும் ஏற்றவை ஆகும். அவை எல்லாக் காலத்திற்கும் ஏற்றதாகவும் விளங்குகின்றன. எனவே, கால வெள்ளத்தால் அழியாத தமிழ் வேதத்தினை அருளிய — சாகாவரம் பெற்ற — திருவள்ளுவரின் புகழ், பெருமை ஆகியவற்றின் சின்னமாக விளங்கும் இந்நினைவாலயத்தைத் தாங்கள் திறந்து வைத்து நாட்டுக்கு வழங்குவது மிகுந்த பொருத்தமுடையதாகும். தங்கள் ஆட்சியின் கீழ் உள்ள இம்மாநிலத்திற்குத் தாங்கள் வருகை தந்தது இதுவே முதல் தடவை என்பதால், தங்கள் வருகை இத்திறப்பு விழாவிற்குச் சிறப்பு அளித்துள்ளது.

"தமிழ் மிகவும் தொன்மை வாய்ந்த மொழியாகும்; பல்லாயிரம்ஆண்டுக்கு முற்பட்டதாகும். சிறந்த பல்வேறு இலக்கியங்களைக் கொண்டதாகும். திருக்குறள், தமிழ் மொழியின் ஒளி விடும் அணிகலன்களில் ஒன்றாக விளங்குகிறது. திருவள்ளுவரைப் பாராட்டும்போது, அமரகவி சுப்பிரமணிய பாரதியார், "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு" என்று மிகவும் பொருத்தமாகப் பாராட்டியுள்ளார். இந்தியாவின் பழங்கால அறிவு நுட்பம், திருக்குறள் போன்ற நூல்களிலேயே உண்மையாக விளங்குகிறது......

"திருவள்ளுவர் சமுதாயத்திற்கு நீதி அடிப்படையை வழங்கி, மனித இனத்தின் மதிப்பினை நிலை நிறுத்துகிறார். திருவள்ளுவர், மக்களை விரும்புகிறவர்—சாதாரணச் சுவையையே நாடுபவர், அடக்கத்தைப் பிரதிபலிப்பவர், தீவிரக் கொள்கையுடையவர், அளவிட முடியாத அறிவுக் கூர்மையுள்ளவர், தெளிவான நீதிக் கருத்துக்களைக் கொண்டவர், விருப்பு வெறுப்பற்ற மனம் உடையவர் என்பதெல்லாம் திருக்குறளிலிருந்து தெரியவருகிறது. திருக்குறள் அவருடைய உலகளந்த அறிவு நுட்பத்தையும், மனிதன் மற்றும் பொருள்களில் அவர் கொண்டு

இருந்த தெள்ளிய நோக்கையும் தெளிவுபடுத்துகின்றது.

''திருக்குறள்—அல்லது நாம் பரவலாகக் குறிப்பிடுவது போல் குறள் — வெறும் தத்துவங்களின் கண்டுபிடிப்பல்ல. அது, வாழ்க்கையின் எல்லாப் பகுதிகளையும் பற்றி மதி நுட்பத்துடன் ஆய்ந்த கருத்துக்களடங்கிய அறிவுக் களஞ்சியமாகும். அது, மனித வாழ்வின் மிகச் சிக்கலான பிரச்சினைகளைப் பற்றிய சிறந்த கருத்துக்களை, குறைந்த வார்த்தைகளுடனும், சிறந்த கவி நயத்துடனும் விளக்குகிறது. முழுமையானதாகவும், பயனுடையதாகவும், சிறந்ததாகவும், குறிக்கோளுடன் கூடியதாகவும், அன்பு நிறைந்ததாகவும், அனைவருக்கும் தொண்டு செய்யக்கூடிய வகையிலும், வாழ்வாங்கு வாழ்வது எப்படி என்பதைத் திருவள்ளுவர் நமக்குத் தெரிவிக்கிறார். அவர் கூறிய தெய்வத்தையே, நமது தேசத்தின் தந்தையான மகாத்மா காந்தியடிகளும் வணங்கினார்; வாய்மை, அகிம்சை ஆகியவற்றையே தெய்வமாக அவர் வலியுறுத்தினார்.

''ஜனநாயகம் ஆரோக்கியமான முறையில் வளர இப்பொழுது தேவைப்படுவது கட்டுப்பாட்டு உணர்ச்சியே ஆகும். கட்டுப்பாடு இல்லாவிட்டால் அல்லது தற்புலனடக்கம் இல்லாவிட்டால், ஜனநாயகத்தை ஒரு வாழ்க்கை முறையாக அமைக்க முடியாது. இந்த உலகத்தில் காணப்படும் எல்லாத் தகராறுகளும், தற்புலனடக்கம் இன்மையால் ஏற்பட்டவையேயாகும். கட்டுப்பாட்டிற்கும், ஒற்றுமைக்கும் தற்புலனடக்கமே மிகவும் இன்றியமையாதது ஆகும்.

''திருவள்ளுவர் எவ்வளவு மதிநுட்பத்துடன் அடக்கத்தின் அவசியத்தை வலியுறுத்துகிறார் என்று கவனியுங்கள்.

**''அடக்கம் அமரருள்**
**உய்க்கும் அடங்காமை**
**ஆரிருள் உய்த்து விடும்''**

நாம் தற்புலனடக்கத்தையும் மேற்கொள்ள வேண்டும் என்பதை அவர்,

**''காக்க பொருளா**
**அடக்கத்தை; ஆக்கம்**
**அதனினூஉங் கில்லை உயிர்க்கு''**

**''நிலையில் திரியாது**
**அடங்கியான் தோற்றம்**
**மலையிலும் மாணப் பெரிது''**

என்னும் குறள்களின் மூலம் வலியுறுத்தியுள்ளார்.

தன்னலமற்ற சேவையே வாழ்க்கையைச் சிறந்ததாக ஆக்குகிறது. இதை விளக்க,

**''கைம்மாறு வேண்டா**
**கடப்பாடு மாரிமாட்டு**
**என்னாற்றும் கொல்லோ உலகு?''**

என்ற குறளில் சிறந்த உவமையைக் காட்டுகிறார்!

நமது கடமையைச் செய்யும் போது,

**''எண்ணித் துணிக**
**கருமம்; துணிந்தபின்**
**எண்ணுவம் என்பது இழுக்கு.''**

என்று திருவள்ளுவர் கூறிய எச்சரிக்கையை நாம் மனத்தில் கொள்வது நல்லது.

**''நன்றாற்றல் உள்ளும்**
**தவறுண்டு; அவரவர்**
**பண்பறிந்து ஆற்றாக் கடை''.**

என்ற குறளில் அவருக்குள்ள நடைமுறை அறிவின் ஆழம் தெளிவாகிறது.

''திருக்குறளில் உள்ள ஒவ்வொரு வார்த்தையும் பொருள் பொதிந்ததாகும். எண்ண உணர்வுகளை என்றென்றும் தூண்டக்கூடிய நிலையான ஆதாரமாகவும் திருக்குறள் விளங்குகிறது.

''சொந்த அல்லது பொது வாழ்வு சம்பந்தப்பட்ட எந்த ஒரு சிக்கலான பிரச்சினைக்கும் தீர்வு காண விரும்பியபோது மகாத்மா காந்தியடிகள் பகவத் கீதையை நாடினார். அதுபோல அன்றாட வாழ்க்கையில் தோன்றும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணத் திருக்குறளை நீங்கள் நாடலாம்.

''தற்பொழுது கட்டி முடிக்கப்பட்டுள்ள இக்கோட்டத்தின் இடைத்தள மாடத்தின் தாழ்வாரங்களில் 1,330 அருங்குறள்களும் மூன்று வெவ்வேறு வண்ணக் கருங்கற்களிலான பலகைகளில் பொறித்து வைக்கப்பட்டுள்ளன. தற்செயலாக வரும் பார்வையாளருக்கும், திருவள்ளுவர் கூறிய புகழ்மிக்க செய்திகளை அக்குறள்கள் அறிவிக்கும்; அத்துடன் சிறந்த முறையில் வாழவும், சமுதாய வாழ்வில் நல்லிணக்கத்தோடு வாழவும் அவர்களைத் தூண்டும். திருக்குறளை வெறும் ஸ்லோகங்களாக ஆக்கிவிடாமல், அன்றாட வாழ்க்கையின் நடைமுறை வழிகாட்டி என்ற நிலைக்குப் பயன்படுத்துவது நம் அனைவருடைய கடமையுமாகும்.

''இந்த ஒப்பற்ற நூல், திருவள்ளுவர் புகழ்ந்து கூறிய அரும் பெரும் தூய கருத்துக்களையும், அரும் பெரும் நோக்கங்களின் அடிப்படையில் இந்தியா நிற்கிறது என்பதையும் இந்தியா மற்றும் உலக மக்கள் அனைவரின் உள்ளத்திலும் நிலைநிறுத்தும் என்று நம்புகின்றேன்.

''அன்பு, வாய்மை, அகிம்சை ஆகியவை தழைத்து ஓங்க, இந்த நினைவாலயத்தை நாட்டுக்கு வழங்கும்படிக் குடியரசுத் தலைவர்களைக் கேட்டுக் கொள்வது என்னுடைய கடமையாகும்.

''வணக்கம். ஜெய் ஹிந்த்.''

**(வள்ளுவர் கோட்டத் திறப்பு விழாவில் தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் ஆற்றிய தலைமை உரையின் சில பகுதிகளின் தமிழாக்கம்).**

## வள்ளுவர் கோட்டம் திறப்பு விழா....

உலகுக்கே பொதுவாக உள்ளதொரு மாமறையை-திருக்குறளை-அளித்த திருவள்ளுவரின் நினைவாக 75 இலட்சம் ரூபாய்ச் செலவில் கட்டப்பட்ட, காலத்தால் அழியாத கருங்கல் கோட்டத்தை, 15-4-1976 அன்று மாலை நடைபெற்ற எழில்மிக்க விழாவில் இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் திறந்து வைத்து உரையாற்றினார்.

''அகரமுதல எழுத்தெல்லாம்'' என்ற குறளுடன் தொடங்கி, திரு. சீர்காழி எஸ். கோவிந்தராஜன் அவர்கள் பாடினார்.

தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு. வி. கார்த்திகேயன் அவர்கள் நன்றி கூறினார்.

நாட்டு வாழ்த்துடன் வள்ளுவர் கோட்டத் திறப்பு விழா இனிது முடிந்தது.

# நாட்டின் முன்னேற்றத்தில் மகளிர் பங்கு



''தமிழ்நாடு மகளிர் சுயசேவை இயக்கத்தின் நான்காவது ஆண்டு நிறைவு விழாக் கூட்டத்தில் கலந்து கொள்வதிலும், நான்காவது ஆண்டறிக்கை அடங்கிய விழா மலரை வெளியிடுவதிலும் மகிழ்ச்சியடைகிறேன். நமது பிரதம மந்திரியின் தலைமையில் துவக்கப்பட்ட உங்கள் நிறுவனம் சமூகச் சேவையின் பல்வேறு துறைகளிலும் உபயோகமான பணிகளுடன் நான்கு ஆண்டுகளை பூர்த்தி செய்துள்ளது. பல மாவட்டங்களில் உங்கள் நிறுவனத்தின் மாவட்டக் கிளைகளை நீங்கள் அமைத்து வருவதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன். இந்த மாநிலம் முழுவதிலும் விரைவில் அத்தகைய கிளைகளை நிறுவி விடுவீர்கள் என்று நம்புகிறேன்.

''தேசிய முயற்சிக்கான பல்வேறு துறைகளிலும் துரிதமான முன்னேற்றத்துக்கு நம் நாடு இன்று தயாராக உள்ளது. நமது நாட்டின் சீரான முன்னேற்றச் சகாப்தத்தை உருவாக்குவதில் பெண்களாகிய நாம் நமது பங்கைச் செலுத்த வேண்டும். கடினமான, அர்ப்பணித்த உழைப்பைத் தவிர, செழிப்பான நிலையை அடைவதற்கு எந்தக் குறுக்கு வழியும் கிடையாது. காலம் முக்கியமானது; காலத்தை இழப்பதற்கு நமக்கு நேரமில்லை. கல்வியறிவும், செல்வமும் பெற்ற பெண்கள், தங்களைவிடக் குறைவான அந்தஸ்து கொண்ட சகோதரிகளுக்குச் சேவை புரிய முன்வர வேண்டும். நமது சமுதாயத்தின் நலிவடைந்த பிரிவினர்களின் சமூக, பொருளாதார நிலைமைகளை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் தன்னாலியன்ற அளவு செயல்பட்டு வருவது உண்மை.

''நமது நாட்டை எதிர்கொண்ட பிரச்சினைகள் பல; அவை பல வகைப்பட்டவை. சமூகநலத் துறையில் மிகச் சிறப்பாகப் பணியாற்றுவதற்கு சுயசேவை நிறுவனங்களுக்குப் பெரும் வாய்ப்பு உள்ளது. பணம் அல்லது வேறு வகையிலான உதவி ஆகியவற்றைக் காட்டிலும், சமத்துவமான மதசார்பற்ற சமுதாயத்தின் வளர்ச்சிக்கு ஏதுவாக உள்ள ஒரு சூழ்நிலையை உருவாக்குவதே மிக முக்கியமான தேவையாகும். இந் நோக்கத்திற்காக, நமது பெண்களின் எண்ணம், செயல் ஆகியவற்றில் ஒரு மாற்றத்தை நாம் கொண்டு வர வேண்டும்.

''இளம் வயதில் திருமணம், ஜாதி வேறுபாடு, வரதட்சிணை, தீண்டாமை, இனவெறி போன்ற பல சமூகத் தீமைகளுடன் நாம் போராட வேண்டும். இத் தீமைகளை ஒழிப்பதற்கு நாம் சட்டமியற்றலாம்; ஆனால் சட்டத்தினால் மட்டுமே இத்தகைய கொடிய பழக்கங்களைச் சமுதாயத்திலிருந்து விடுவிக்க நம்மால் இயலாது. இத்தீமைகளை ஒழிப்பதற்கு முடிவற்ற போராட்டத்தில் நாம் ஈடுபட வேண்டும்.

''நம்முடைய இப்பரந்த பூமியில் பெண்களின் தேவைகளைக் கவனிக்கும் வேலைக்கு, உங்களுடைய நிறுவனத்தைப் போன்ற சுயசேவை நிறுவனங்களின் மகத்தான முயற்சி வேண்டியுள்ளது. இப்பெரும் முயற்சியை மேற்கொள்வதற்குப் போதுமான செல்வ வளம் நம்மிடம் இல்லாமலிருக்கலாம்; ஆனால் நமது சுயநலமில்லாத பணியும், ஊக்கமுமே அவற்றுக்கு ஈடாகும். மனித குலத்துக்குப் பயனளிக்கும் அர்ப்பணித்த சேவையே, நாம் வாழும் சுற்றுப்புறத்தை மேம்படுத்துவதற்கு உதவும் உபயோகமான சில பணிகளைச் செய்யும் திருப்தியை அளிக்கிறது.

''நமது நாட்டின் மக்கள் தொகையில் பாதிப்பேர் பின்தங்கிய நிலையிலும் அறியாமை, மூடநம்பிக்கை, மற்ற சமூகத் தீமைகள் ஆகியவற்றுக்குப் பலியாகியும் இருந்தால், நமது நாடு எந்தவித முன்னேற்றத்தையும் அடைய முடியாது என்பதை நாம் உணர வேண்டும். உங்கள் நிறுவனம் ஒரு நல்ல துவக்கத்தைச் செய்துள்ளது; ஆனால் இன்னும் பெரும்பணி ஆற்ற வேண்டியுள்ளது. இந்தியாவின் ஒவ்வொரு மூலை முடுக்குகளிலும் சமூகச் சேவைச் செய்தியைப் பரப்பும் ஊக்கமிக்க - அர்ப்பணித்த-சமூக ஊழியர்களைப் பெறுவதே இப்பொழுதுள்ள முதலாவது முக்கியத் தேவையாகும்.

''உங்கள் நிறுவனத்தின் முன்னேற்றத்தை நான் கூர்ந்து கவனித்து வருவேன். உங்கள் அனைவரையும் சந்திப்பதற்கான வாய்ப்பை அளித்ததற்காக மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.''

''ஜெய் ஹிந்த்.''

**— இவ்வாறு இந்தியக் குடியரசுத் தலைவரின் துணைவியார் திருமதி பேகம் அபிதா அகமது அவர்கள் 16-4-76 அன்று சென்னை எத்திராஜ் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற தமிழ்நாடு மகளிர் சுயசேவை இயக்கத்தின் நான்காவது ஆண்டு விழாக் கூட்டத்தில் கூறினார்.**

மகளிர் அரங்கம்



# நெஞ்சில் குறளிருந்தால் நிம்மதிக்குப் பஞ்சமில்லை!



— திருமதி சௌந்தரா கைலாசம்

கட்டுக் கடங்காத கடவுளினை நடுமனத்தில்
இட்டுத் தொழுது எனதுரையைத் துவக்குகின்றேன்.
வெள்ளமெனத் திரண்டிருக்கும் எல்லோரும் வந்திடுக!
உள்ளமெலாம் பூரித்தேன்! உவகைமலர் சொரிகின்றேன்!
அரைத்தெடுத்த சந்தனத்தின் அருமை மணமெடுத்து
நிறைத்ததொரு கிண்ணமெனும் நெஞ்சமுடன் நிற்கின்றேன்!

பனிமலரில் தேனெடுத்து பைந்தமிழின் சொல்தொடுத்துக்
கனிவுடனே வரவேற்கக் கைகூப்பி நிற்கின்றேன்!

குறள்தந்த வள்ளுவரைத் தன்மகவாய்ப் பெற்றதனல்
தனியான புகழுண்டு தமிழ்த்தாய்க்குத் தரணியிலே!
காலத்தை நீந்திக் கடந்து கரையேறி
ஞாலத்தில் ஒளிர்கிறது, ஞானக் குறளமுதம்!
மனிதமனக் கோணல்களை மாற்றிச் சுகமருளும்
தனிப்பெருமை வாய்ந்த தமிழ்மருந்தே குறளாகும்!
எதுவரைக்கும் கெடாமல் இருக்குமெனச் சொல்வதெலாம்
பொதுமறைக்குக் கிடையாது! புத்தமுதாய்த் தித்திக்கும்!
என்றைக்கும் யாருக்கும் ஏற்ற மருந்ததுவே!
வாழத் தெரியாமல் வாழ்ந்திந்த உலகத்தில்
நீளத் துயர்பட்டு நித்திரையும் கெட்டலையும்
மக்களுக்கு வாழ்வாங்கு வாழ வழிகாட்டத்
தக்கதொரு நூலாகத் தமிழில் குறள்கொடுத்தார்!
நெறிகெட்டு வாழ்வதனல் நெஞ்சு முறிபட்டுக்
கறைபட்டுப் போகாமல் காக்கக் குறள்கொடுத்தார்!
புதிரிந்த வாழ்க்கையெனப் புரியாது தடுமாறிக்
கதறுகையில் விடைதந்தார்; கையில் குறள்கொடுத்தார்!
வழுக்கும் நிலமான வாழ்க்கையிலே கால்சிறிதும்
சறுக்காமல் காப்பாற்றத் தக்கதொரு கோல்கொடுத்தார்!
குருட்டுக் கிழமனிதன் கோலை எறிந்துவிட்டு
இருட்டில் தடுமாறி ஏங்கி யழுகின்றன்!
நெஞ்சத்துக் கோணல் நிமிர்கிறதோ' தீங்குறளை
வஞ்சித்துப் பொய்மனம்தான் வாழப் படிக்கிறதோ!
நெஞ்சில் குறளிருந்தால் நிம்மதிக்குப் பஞ்சமில்லை!
'கல்' என்றும் 'தேர்' என்றும் காண்பவர்க்குச் சொல்வதுபோல
கல்லிலொரு பெருந்தேரைக் கலைவாணர் படைத்துள்ளார்!

மண்ணில் இதையமைத்த மகிமையினை எண்ணுகையில்
கண்ணிரண்டும் போதாவே கண்டிங்கே மகிழ்வதற்கே.
வார்த்தையில்லை இதனழகை வருணிக்க; இதுபோலப்
பார்த்ததில்லை என்றாலும் பாராட்டுக் கேதுஎல்லை?
ஈரடியில் பாரதத்தை எழுப்பியநல் வள்ளுவரின்
தேரதனைப் பாரதத்துத் திருத்தலைவர் திறக்கின்றார்!
பேருக்குத் தலைவரெனப் பிழைப்பவரா? மக்கள்மன
ஊருக்குத் தலைவரென உயர்ந்துள்ள ஒருமனிதர்!
புறப்பட்டு வந்தவெள்ளைப் புயலை எதிர்த்ததனல்
சிறைப்பட்டு வெளிவந்த சிங்க மறவரிவர்!
அரியணையில் கொலுவிருக்கும் ஐந்தாம் தலைவரினை
எதுவரினும் எதிரேற்கும் ஈடில்லாப் பெருமகனை
தமிழகத்தின் சார்பினிலே தலைவணங்கி வரவேற்பேன்!

*(வள்ளுவர் கோட்டத் திறப்பு விழா வரவேற்புக் கவிதையின் சில பகுதிகள்)*

# சோமங்கலம் அழைக்கிறது!



"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" எனும் தீர்க்க தரிசியின் கவிதைக்கு வடிவமைப்பு கொடுக்க,

''மக்கள் நகரங்களை விடுத்து, கிராமங்களில் வாழப் பழகிக் கொள்ள வேண்டும். பெரிய மாளிகைகளை விடுத்து குடிசைகளில் வசிக்கப் பழகிக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் இந்தியா மட்டுமின்றி, இந்தியா மூலம் உலகமே உண்மையான விடுதலை பெற்றதாக நான் திருப்தியடைவேன்'' என்று உணர்த்திய பாரதத் தந்தை மகாத்மா காந்தியடிகளின் ''வாழும் நெறிமுறை''களுக்குச் செயல் வடிவம் தந்திட,

''வள்ளுவர் உரைத்த, 'சமன்செய்து சீர் தூக்கும் கோல்போல்', பாரத மக்கள் அனைவரையும் ஒரே நோக்கோடு பார்த்து அனைவர்க்கும் நியாயம் கிட்ட, பாரதப் பிரதமரால் உருவாக்கப்பட்டுள்ள 20 அம்சத் திட்டம் எனும் ஒரு மாபெரும் திட்டத்தின் குறிக்கோள்களைச் சிறிய அளவில் ஒரு மாதிரித் திட்டமாக நடத்திக் காட்டிட,

சோமங்கலம் பகுதியில் **''ஊரகச் சீரமைப்புத் திட்டம்''** தமிழ் நாடு ஆளுநர் அவர்களால் உருவாக்கப்பட்டுள்ளது.

**திட்டப் பகுதியைப் பற்றி—**

சென்னை நகரிலிருந்து 30 கிலோ மீட்டர் தூரத்தில் செங்கற்பட்டு மாவட்டத்தின், குன்றத்தூர் வட்டாரத்தில், குன்றத்தூரிலிருந்து 6 கிலோ மீட்டர் தூரத்தில் சோமங்கலம் உள்ளது. சோமங்கலம் கிராமத்தில் ஒரு ஆரம்பப் பள்ளியும், ஒரு உயர்நிலைப் பள்ளியும், ஒரு வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கமும் உள்ளது.

சோமங்கலத்தை மையமாகக் கொண்டு, அதைச் சுற்றியுள்ள மற்றும் 9 கிராமங்களைச் சேர்த்து இத்திட்டப் பகுதி உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டப் பகுதியில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் 6,000 பேரைச் சேர்த்து மொத்தம் 11,026 மக்கள் வாழ்கிறார்கள். இப்பகுதியில் மொத்தமாக 6,300 ஏக்கர் சாகுபடி செய்யக் கூடிய நிலம் உள்ளது.

டி. கே. ஏ. திவான் முகமது ஐ.ஏ.எஸ்.,
செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர்.

**திட்டத்தின் நோக்கம்**

இப்பகுதியை உறைவிடமாகக் கொண்டுள்ள ஒவ்வொரு குடும்பத்தினரின் பிரச்சனைகளையும் ஆய்ந்து, இரண்டு ஆண்டு முதல் மூன்றாண்டுகளுக்குள் இத்திட்டப் பகுதியில் நவீன முறையில் விவசாயத்தை மேம்படுத்தி, அதன் மூலம் இங்குள்ள மக்களின் பொருளாதாரத்தை உயர்த்தி, அவர்கள் நலம் பெற, வளம் காண, கல்வி பெற வழி வகைகள் செய்து தருவதும், திட்டத்தின் சீரிய பயன்கள் இப்பகுதியிலுள்ள ஒவ்வொருவரையும் சென்றடையச் செய்வதும் திட்டத்தின் நோக்கமாகும்.

**இலக்கு**

இச்சீரமைப்புத் திட்டம், 10 அம்சங்களாக மலர்ந்து இப்பகுதியில் செயற்பட்டு வருகிறது.

1. 2,597 ஏக்கர் நன்செய் நிலம், மற்றும் 2,032 ஏக்கர் நன்செய்—புன்செய் கலப்பு மற்றும் புன்செய் நிலங்களை 'அமோக விளைச்சல்' திட்டத்தின் கீழ் கொண்டுவந்து விவசாயத்தை வளப்படுத்துதல்.

2. 4,000 ஏக்கர் நன்செய் நிலத்துக்குப் பாசன வசதிகளை அளித்து வரும் 19 நீர்நிலைகளை வளப்படுத்துதல்.

3. கிணறுகளையும், பம்பு செட்டுகளையும் நிறுவி, நீர்ப் பாசனத்தை அதிகரித்து இப்பகுதியில் உள்ள மொத்த சாகுபடி நிலத்தையும் இரண்டாவது, மூன்றாவது போகம் பயிரிடத் தகுதியுள்ளவையாக மாற்றுதல்.

4. விவசாயிகளுக்கு வாடகைக்கு 'ட்ராக்டர்' மற்றும் விவசாயக் கருவிகளைக் கொடுத்து விவசாயப் பொறியியல் பணி வசதிகளைச் செய்து தருதல்.

5. வேளாண்மை விளைபொருட்களைச் சேமித்தல் மற்றும் அவற்றின் விற்பனைக்கு வழி வகை செய்தல்.

6. கலப்பினக் கால்நடைகள் மற்றும், செயற்கை முறை கருத்தரிப்பு ஆகியவற்றின் மூலம் இப்பகுதியில் கால்நடை இன அபிவிருத்தி செய்தல்.

7. பால் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவுதல்.

8. குழந்தைகள் நலத்தை மேம்படுத்த ''பால்வாடி''களை ஏற்படுத்துதல்.

9. பண்ணை நிர்வாகம், அதைச் சார்ந்த நடவடிக்கைகள், மற்றும் கால்நடைப் பராமரிப்பு, பாற்பண்ணை நிறுவுதல் ஆகியவற்றில் பயிற்சி தருதல்.

10. திட்டப் பகுதியில் உறைபவர் அனைவர்க்கும் சுகாதார வசதிகள் செய்து தருதல்.

**திட்டம் செயலாகும் முறை**

திட்டத்தின் குறிக்கோள்களை அடைய ஏற்கனவே இயங்கிவரும் கூட்டுறவு மத்திய வங்கி, நிலவள வங்கிகள் மற்றும் அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள் ஆகியவற்றின் பணிகளைப் பயன்படுத்தததிட்டமிடப்பட்டுள்ளது. மற்றும் சிறு விவசாயிகள் மேம்பாட்டுக் கழகம், விவசாய பொறியியல் பணி நிலையம் மற்றும் பால் வள நிறுவனம் ஆகியவற்றின் பணிகள் இத்திட்டப் பகுதியில் விரிவுபடுத்தப்படும். ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் நடைபெற்றுவரும் 'பால்வாடிகள்' முதியோர் கல்வி முதலியவையும் பயன்படுத்திக் கொள்ளப்படும்.

திட்டப் பகுதியில் வளர்ச்சிப் பணிகளை நடைமுறைப்படுத்த விவசாயத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, கூட்டுறவுத் துறை, பால்வள நிறுவனம், தொழில் துறை ஆகிய அரசுத் துறைகள் கூட்டாகச் செயற்படும். தங்கள் துறைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள திட்ட ஒதுக்கீடுகளை, முடிந்த அளவு இப்பகுதியின் வளர்ச்சி நடவடிக்கைகளுக்காக இத்துறைகள் பயன்படுத்திக் கொள்ளும்.

**'ராம ராஜ்யம்' காண்போம்!**

இது ஒரு முன்னோடித் திட்டமாகும். இப்பகுதியில் இத்திட்டத்தின் நடவடிக்கைகள் கூர்ந்து கவனிக்கப்படும். தேவைப்படும் போது தொடர் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

15—2—1976 அன்று பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் இப்பகுதிக்கு வருகை தந்து இத்திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

இத்திட்டத்தை இப்பகுதியில் பரீட்சார்த்தமாகச் செயற்படுத்துவதின் மூலம் பெறப் போகும் புதிய அனுபவங்கள், மாநிலத்தின் மற்றப் பகுதிகளில் இம்மாதிரித் திட்டங்களைச் செயல்படுத்தும்போது பெரிதும் பயன்படும்.

**''கிராமங்களில் புனர் நிர்மாணப்பணியில் ஈடுபடுவோம்—கிராமங்கள் தன்னிறைவில் 'ராம ராஜ்யம்' காண்போம்''** என்ற அண்ணாவின் சொல்லை நிறைவேற்ற சோமங்கலம் அழைக்கிறது.



# ஏழைக்கு உதவும் கரம்

திருச்சிராப்பள்ளிக்கு அருகே கீழவாளடி கிராமத்தில் பச்சைமுத்து என்பவர், தெரு ஓரத்தில் ஒரு சிறிய பெட்டிக் கடை வைத்திருக்கிறார். சிகரெட், பீடி, வெற்றிலை, மிட்டாய்கள் போன்ற சிறு சிறு பொருட்களை அவர் விற்பனை செய்கிறார். ஓராண்டுக்கு முன்பு அவருடைய நிகர இலாபம் நாள் ஒன்றுக்கு இரண்டு ரூபாயாகத்தான் இருந்தது. அவருக்கு, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் ஒன்றான இந்தியன் பாங்கின் உள்ளூர் கிளை தன்னுடைய ஏழைக்கு உதவும் கரத்தை நீட்டியது; சென்ற ஆண்டு 300 ரூபாய் கடன் கொடுத்து உதவியது. அக்கடன் தொகையைக்கொண்டு தேவையான பொருட்களை வாங்கி விற்பனை செய்து வருகிறார். இப்பொழுது அவருக்கு, நாள் ஒன்றுக்கு நான்கு ரூபாய் நிகர இலாபம் கிடைக்கிறது. நாள்தோறும் 15 ரூபாயிலிருந்து 25 ரூபாய் வரையில் அவருக்கு வியாபாரம் நடக்கிறது. பச்சைமுத்துப்பிள்ளை, தாம் வாங்கியிருந்த கடனில் மூன்றில் ஒரு பங்கைத் திருப்பிச் செலுத்திவிட்டார். அவரது வியாபாரம் மேலும் பெருகும் என்று அவர் நம்பிக்கை கொண்டிருக்கிறார்.

# தொழில் புரட்சிக்கு எழுச்சி தரும் 'இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ்'

சென்னை மாநகரின் தெற்கு எல்லைக்கும் தூயதாமஸ் மலைக் குன்றுக்கும் (St. Thoms mount) இடைப்பட்ட கிண்டிப் பகுதியில் ஜி.எஸ்.டி. நெடுஞ் சாலையை விட்டுச் சற்றுத் தள்ளி மேற்குப் புறமாக நம் பார்வையைக் கொஞ்சம் திருப்பினாலே போதும்.

''Hindustan Teleprinters (இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ்) என்னும் ஆங்கில எழுத்துக்கள் நம் கண்களைக் கவர்ந்து இழுக்கும்.

அவற்றை நெற்றித்திலகமாகப் பூண்டது போலத்தான் நேர்த்தியாகக் காட்சியளிக்கிறது-மைய அரசின் இந்த மாபெரும் நிறுவனம்.

விடுதலை பெற்ற பிறகும் எல்லாவற்றிற்கும் வெளிநாடுகளையே எதிர்பார்த்து ஏங்கக் கூடாது என்னும் விழுமிய நோக்கத்துடன் மைய அரசு நிறுவனங்கள் (Central Government Undertakings) எத்தனை எத்தனையோ நாள்தோறும் எழுந்த வண்ணம் இருக்கின்றன. அவற்றுள் ஒன்றே இந்த 'இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ்' நிறுவனம்.

நம்முடைய இந்தியப் பேரரசு கடந்த கால்நூற்றாண்டுக் காலமாகவே எத்தகைய ஆர்வத்தோடும், ஆற்றலோடும் ஓர் 'அமைதியான தொழிற்புரட்சிக்கு' வழி வகுத்து வந்திருக்கிறது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாக இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் நிறுவனம் விளங்குகிறது.

இந்த நிறுவனத்தின் தோற்றம் வளர்ச்சி, சாதனைகள், தனிச் சிறப்புகள், வெளிநாடுகளிலும் விரிந்து பரவும் இதன் ஒளிமிகுந்த செல்வாக்குகள்- ஆகியவைகளைப் பற்றி அறிந்து கொள்வதற்காக மேலாளர் திரு. ஏ. எம். யூசுப் அவர்களிடம் பேட்டி காணப் பட்டது. அவரிடம் கேட்ட வினாக்களும் அவ்வினாக்களுக்கு அவர் கூறிய விடைகளும் தொகுத்து வழங்கப்பட்டுள்ளன.

வினா: இந்த 'இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ்' நிறுவனம் முதன் முதலில் எப்போது-எங்கே தொடங்கப் பெற்றது என்று சொல்ல முடியுமா?

விடை: 1960-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் சென்னையில் தான் ஏற்படுத்தப் பெற்றது.

வினா: இந்தியாவில் தொழில் வளர்ச்சிக்குரிய எத்தனையோ பெரிய பெரிய நகரங்கள் எல்லாம் இருக்கும்பொழுது இந்நிறுவனம் சென்னையில் அமைந்ததற்குத் தனிச் சிறப்பான காரணம் ஏதேனும் உண்டா?

விடை: நாட்டின் மற்றப் பகுதிகளைப் போலவே, சென்னையும் தொழில் வளர்ச்சியில் முன்னுக்கு வர வேண்டும் என்பது நம் இந்தியப் பேரரசின் எண்ணமாகும். அத்துடன், தமிழ் நாட்டைச் சார்ந்த டாக்டர் சுப்பராயன் அவர்கள் அப்போது மத்திய அரசில் அஞ்சல்-தந்தித் துறை உள்ளடங்கிய தகவல் துறை அமைச்சராக இருந்தார். இப்படியொரு மைய அரசு நிறுவனத்தை இங்கே அமைக்க வேண்டும் என்பதில் அவர் தணியாத ஆர்வம் காட்டினார். இதற்கு தேவையான பரந்த நிலப்பரப்பு எங்கே கிடைக்கும் என்று சிந்தித்துக் கொண்டிருந்த வேளையில் மாநில அரசின் சார்பில் இலவசமாகவே நிலம் வழங்குவதற்கு முன்வந்தார்-அப்போது தமிழக முதல்வராக இருந்த திரு கு. காமராஜ் அவர்கள். அவருடைய ஒத்துழைப்பு, டாக்டர் சுப்பராயன் அவர்களின் இடையறாத முயற்சி-இவையே இந்த நிறுவனம் சென்னையில் ஏற்படுவதற்குப் பெருந்துணை புரிந்தன.

வினா: முதலில் வெளிநாட்டு நிறுவனங்களின் தொழில்நுட்பத் துணையோடுதான் இது அமைக்கப் பெற்றது இல்லையா?

விடை: ஆமாம்; இத்தாலி நாட்டு-மெசர்ஸ் ஒளிவெட்டி (M/s Olivetti of Italy) என்னும் டெலிபிரிண்டர்கள்' உற்பத்தி நிறுவனத்தின் தொழில் நுட்ப ஒத்துழைப்போடுதான்இது தொடங்கப் பெற்றது. ஆனால் நம்முடைய இந்திய அரசு தான் இதற்கு முழு முதலீடும் செய்து வருகிறது.

வினா: இதனுடைய அனுமதிக் கப்பட்ட முதலீட்டுத் தொகை எவ்வளவு?

விடை: மூன்று கோடி ரூபாய்.

வினா: இதற்கென்று கிளைகள் இருக்கின்றனவா? எங்கெங்கே?

விடை: இந்தத் தொழிற்சாலைக்குக் கிளைகள் என்று சொல்லத்தக்க அளவில் எவையும் இல்லை. எனினும், இங்கிருந்து 'டெலிபிரிண்டர்' கருவிகளை வாங்கியுள்ள சிலர் அவற்றைத் தாங்களே பழுது பார்த்துக் கொள்ள வசதியில்லாமல் அவதிப்படகூடும். அவர்களுக்கு உதவுகின்ற நோக்குடன்-சென்னை, டெல்லி, கல்கத்தா, பம்பாய் ஆகிய பெரிய நகரங்களில் பழுது பார்க்கும் நிலையங்களை (Service Centres) நடத்தி வருகிறோம். இந்தியா முழுவதிலும் அதாவது காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரி வரையில் எங்கே 'டெலிபிரிண்டர்' கருவிகள் பழுதுபட்டாலும் அந்தந்த இடங்களுக்கு அருகில் உள்ள நிலையங்களிலிருந்து தொழில்நுட்பப் பயிற்சியாளர்களைப் பழுது பார்ப்பதற்காக அனுப்புவதற்கும் ஏற்பாடு செய்திருக்கிறோம்.

வினா: இந்தத் தொழிற்சாலை முதன் முதலாக எப்போது செயல்படத் தொடங்கியது?

விடை: 1961-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் இறக்குமதி செய்யப்பட்ட கருவிகளைக் கொண்டு 'டெலிபிரிண்டரை' முழுமையான வடிவத்தில் உருவாக்கும் பணியினை இது முதன் முதலில் தொடங்கியது.

வினா: இந்தத் தொழிற்சாலை எந்த நோக்கத்துடன் ஏற்படுத்தப்பெற்றது என்று கூறமுடியுமா?

விடை: அந்த நாளில் இந்தியாவின் தந்தித் துறை வளர்ச்சி வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி



இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி 'எலெக்ட்ரிக் டைப்ரைட்டரைப்' பெற்றுக்கொள்கிறார்.




ஆகும் கருவிகளையே முழுக்க முழுக்க நம்பிக் கொண்டிருக்க வேண்டிய நிலைமை இருந்தது. இதனால், அதிக விரைவாகத் தந்தி மூலம் தகவல் அனுப்புவதில் நம்முடைய வளர்ச்சிக்கான முயற்சிகள் ஆமைவேகத்திலேயே ஊர்ந்தவண்ணம் இருந்தன. அத்தகைய தாமதப் போக்கைத் தவிர்த்து நம்முடைய வளர்ச்சியை மென்மேலும் முடுக்கிவிடுவதற்கு, நமக்குத் தேவையான கருவிகளை நாமே உற்பத்தி செய்து கொள்வதே உகந்த வழி என்று மைய அரசு எண்ணியது. அந்த உயரிய நோக்கத்துடன் தான் இந்த நிறுவனமும் உருவாக்கப் பெற்றது.

வினா: 'டெலிபிரிண்டர்' என்பதைப் பொதுமக்களுக்குப் புரியும்படியாக எவ்வாறு கூறலாம்?

விடை: சாமுவேல் மோர்ஸ் என்பவரின் கண்டுபிடிப்பை ஒட்டியே தந்தி அடிக்கும் முறை நம் நாட்டில் மேற்கொள்ளப் பட்டு வந்தது. அதன்படி, ஆங்கில எழுத்துக்களைப் புரிந்து கொள்ளும் வகையில் சில குறியீட்டு ஒலிகளை மின்சக்தி கொண்ட ஒரு கட்டையில் விரல்களால் தட்டி எழுப்புவார்கள். ஒரு முனையில் தட்டி எழுப்பப்படும் அந்தக் குறியீட்டு ஒலிகளை (சிக்னல்களை) மறுமுனையில் உள்ள கட்டையின் அசைவுகளால் காது மூலம் கேட்டு அந்தக் குறியீட்டு ஒலிகள் இன்ன எழுத்துக்களைத் தான் குறிக்கும் என்பதை அதிலே பயிற்சி பெற்றவர்கள் புரிந்து கொண்டு எழுதிக் கொள்வார்கள். இதற்கு மனித மூளை மிகவும் நுணுக்கமாக வேலை செய்ய வேண்டியுள்ளது. அந்த வேலையை இன்று அச்சு யந்திரமே செய்கிறது. தட்டெழுத்துப் பொறியில் அதாவது 'டைப் ரைட்டரில்' எழுத்துக்களைத் தட்டி பதிய வைப்பது போலவே தந்தியடிக்க வேண்டிய எழுத்துக்களின் ஒலிக்குறிகளை ஓர் அச்சுப் பொறியில் தட்டினால் அந்த ஒலிக்குறிகளுக்குரிய எழுத்துக்களை மறுமுனையில் உள்ள ஓர் யந்திரம் அச்சடித்து வாங்கி விடுகிறது. இவ்வாறு, தந்தியடிக்க வேண்டிய செய்தியை மிக விரைவாக அச்சடித்துக் கொடுக்கின்ற 'மின்சார மெக்கானிகல் கருவியே' (Electro Mechanical Instrument) 'டெலிபிரிண்டர் ஆகும். சுருங்கச் சொன்னால் மோர்ஸ் தந்தியின், வளர்ச்சி பெற்ற, அச்சுப்பொறியே 'டெலிபிரிண்டர்' ஆகும்.

வினா: 'டெலிபிரிண்டர்' வேலை செய்யும் விதம்- அதன் வகைகள் ஆகியவற்றைப் பற்றி விளக்கம் தரமுடியுமா?

விடை: முன்பு சொன்னதைப் போலத் தட்டெழுத்துப் பொறியில் உள்ளவாறே 'டெலிபிரிண்டர்' அச்சுப் பொறியிலும் எழுத்துக் குமிழ்கள் (Keys) இருக்கின்றன. அவற்றை அழுத்தும் பொழுது அந்தந்த எழுத்துகளுக்குரிய குறி-ஒலிகள் 'டெலிபிரிண்டரில்' செருகப்பட்டுள்ள துளையிடத்தக்க நாடாவில் பதிவாகின்றன. அவ்வாறு துளையிடப்பட்ட நாடா... (Perforated Tapes) பின்னர் செய்தியனுப்பும் யந்திரம் ஒன்றில் செருகப்படுகிறது. மின்விசை மூலம் அங்கிருந்து விரைவான முறையில் சேர வேண்டிய முனையில் ஒலிக்குறிகள் போய்ச் சேருகின்றன. அவற்றையெல்லாம் தந்தி வாங்கும் இடத்தில் உள்ள இன்னோர் யந்திரம் அச்சு வடிவில் பதிவு செய்து கொண்டு விடுகின்றது. இந்த முறையை 'அச்சு தந்தி மூலம் நடக்கும் உரையாடல்' (Conversation by Telegraph Printing) என்று கூடச் சொல்லலாம்.

''டெலிபிரிண்டர் வேலை செய்வதில் நான்கு வகைகள் இருக்கின்றன. ஒன்று ஒருமுனையும், மறுமுனையும் மட்டுமே பேசக் கூடியதாகும். 'Point to Point Service' என இது அழைக்கப்படுகிறது. தொழிற்சாலையிலிருந்து நேரடியாக அலுவலகத்துக்குச் செய்தி அனுப்புவது ஓர் எடுத்துக் காட்டாகும். இரண்டாவது 'ஸ்விட்ச் போர்டு' மூலம் இணைப்பை ஏற்படுத்திச் செய்தி அனுப்புவதாகும்.

மூன்றாவது 'டெலக்ஸ் (Telex) முறையாகும்; 'டெலிபிரிண்டர் எக்சேஞ்சின் சுருக்கமான செய்தி வடிவமே 'டெலக்ஸ்' என்பதாகும். தொலைபேசிக்கு எவ்வாறு இணைப்பகம் (Exchange) உண்டோ அவ்வாறே, 'டெலக்ஸ்' செய்தி அனுப்பும் முறைக்கும் டெலி பிரிண்டர் இணைப்பகம் (Teleprinter Exchange) உண்டு.

நான்காவதாக வெளிநாட்டுச் செய்திகளைக் கடல் கடந்து வாங்கவும் அனுப்பவும் கையாளப்படும் 'டெலக்ஸ்' செய்தி முறையாகும்.

பொதுவாகத் தந்தி மூலம் செய்தி அனுப்புவதற்கு இரண்டு வடிவங்கள் உண்டு. ஒன்று தாள், மற்றது நாடா. இந்த நாடா வழித் தந்திச் செய்திக்கே 'டெலிபிரிண்டர்' கருவி வேலை செய்கிறது. இதிலும் செய்தி அனுப்புதல்-செய்தி வாங்குதல் ஆகிய இருவேறு பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. 'அனுப்பி வாங்குதல் முறை' (Sent Receive Model) என இது அழைக்கப்படுகின்றது. 'சமாச்சார்' செய்தி நிறுவனம் செய்திகளை ''டெலிபிரிண்டர்' மூலம் அனுப்புகின்றது; 'இந்து', 'டைம்ஸ் ஆப் இந்தியா' முதலான நாளேடுகள் 'டெலி பிரிண்டர்' மூலம் செய்திகளை வாங்கிக் கொள்கின்றன.



வினா: இப்படி 'டெலிபிரிண்டர்' மூலம் செய்திகள் அனுப்புவதால் வேகத்தில் ஏதேனும் மாறுதல் இருக்கிறதா?

விடை: ஓ! தாராளமாக! மிக மிகக் குறுகிய காலத்தில் விரைவாகச் செய்தி எட்டிவிட வேண்டும் என்பதுதானே, 'டெலிபிரிண்டர்' கருவியைப் பயன்படுத்துவதன் நோக்கம்! சாதாரணமாக ஒரு நிமிடத்தில் 600 எழுத்துக்கள் வரை இந்த அச்சுத் தந்தி மூலம் செய்தி செல்கிறது. இதையே ஒரு நிமிடத்தில் 1,000 எழுத்துக்களை அச்சாகிச் செல்லுமாறும் மாற்றியமைக்கலாம். நிமிடத்திற்கு 600 எழுத்துக்கள் வேகத்தை 50-பாட்ஸ் (50-Bauds) என்றும், நிமிடத்திற்கு 1,000 எழுத்துக்கள் வேகத்தை 75-பாட்ஸ் (75-Bauds) என்றும் கூறுவது உண்டு. அகில உலக வேகமாக 50-பாட்ஸ் வேகந்தான் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் விமானப் போக்குவரத்து, கடல் கடந்த நாடுகளுக்கான செய்திப் போக்குவரத்து போன்ற சில தனிப்பட்ட துறைகளில் 75-பாட்ஸ் வேகம் பயன்படுத்தப்படுகிறது. பொதுவாக 50-பாட்ஸ் வேகமே போதுமானதாகும். ஒன்றைமட்டும் உள்ளத்தில் நன்றாகப் பதிவைத்துக் கொள்ள வேண்டும். செய்தியை அனுப்புவதற்கு எந்த வேக அளவு எடுத்துக் கொள்ளப்படுகிறதோ அதே வேக அளவுதான் செய்தியை வாங்குவதற்கும் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

வினா: என்னென்ன மொழிகளின் வரி வடிவங்களில் 'டெலிபிரிண்டர்' மூலம் செய்திகள் அனுப்புவதற்குரிய வசதிகள் இப்போது இருக்கின்றன?

விடை: ஆங்கிலம் முதலான ஐரோப்பிய மொழிகளின் வரி வடிவமான இலத்தீன் வரி வடிவமே (Latin Script) தொடக்கத்திலிருந்து பயன்படுத்தப்பெற்று வருகிறது. இந்தி மொழிக்குரிய தேவநாகரி வரிவடிவமும் இப்போது பயன்படுத்தப்படுகிறது. அதனைத் தொடர்ந்து அராபிக் வரிவடிவமும், பெர்சியன் வரிவடிவமும் பயன்படுத்தப் பெற்று வருகின்றன.

வினா: தமிழ் வரிவடிவம் மூலம் 'டெலிபிரிண்டரில்' செய்தி அனுப்ப இயலுமா?

விடை: இப்போது அந்த வசதி இல்லை.

வினா: அதற்கு என்ன காரணம் என்று கூற முடியுமா?

விடை: தமிழ் வரிவடிவம் ஆனாலும் தேவநாகரி அல்லாத வேறு வரிவடிவம் ஆனாலும் புதிதாக அந்தந்த வரிவடிவங்களுக்கேற்ப 'டெலிபிரிண்டர்' கருவிகளை உருவாக்கும்பொழுது அவற்றுக்கான உற்பத்திச் செலவு மிகுதியாக ஆகக்கூடும். அத்தகைய செலவுகளை ஈடுகட்டத் தக்க அளவுக்குத் தமிழ் 'டெலிபிரிண்டர்'களுக்குக் கோரிக்கைகள் (Demands) வரவில்லை. அப்படி நாம் புதிதாக ஒரு வரிவடிவத்திற்கென்று 'டெலிபிரிண்டரை' உருவாக்கும் போது குறைந்தது 200-300 கருவிகளையாவது சேர்ந்தாற்போல் உற்பத்தி செய்ய வேண்டும். அதற்கு ஏறத்தாழ 35 முதல் 40 இலட்சம் ரூபாய் வரை செலவு செய்யநேரலாம். அதற்கு ஏற்றபடி 'டெலிபிரிண்டர்கள்' விற்பனை ஆகிவிடக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டால், தமிழிலும் 'டெலிபிரிண்டர்கள்' கொண்டு வருவதில் தொல்லை ஏதும் இல்லை. சில ஆண்டுகளுக்கு முன்பு கருநாடக மொழியில் 'டெலிபிரிண்டர்கள்' தேவை என்கிற கோரிக்கை எழுப்பப்பட்டது. இப்போது நான் சொன்ன காரணங்களால் தான் அந்தக் கோரிக்கையையும் நிறைவேற்ற முடியாமல் போய் விட்டது.

வினா: இங்கே 'டெலிபிரிண்டர்' மட்டுந்தான் உற்பத்தி ஆகின்றதா? அதனோடு இணைந்து வேறு சில கருவிகளும் உருவாக்கப்படுகின்றனவா?

விடை: 'டெலிபிரிண்டர்கள்' மட்டுமின்றி மின்சாரத் தட்டெழுத்துப் பொறிகள் (Electric & Typewriters) அஞ்சல் தலைகள், உறைகள், அட்டைகள் ஆகியவற்றின் மதிப்பை நீக்குவதற்காக அஞ்சல் நிலையங்களில் பயன்படுத்தப் பெறும் முத்திரை குத்தும் கருவிகள் (Stamp Cacelling Machines) தொலைபேசி இணைப்பகத்தில் பயனாகும் மின்னாற்றல் யந்திரங்கள், 'கம்ப்யூட்டருக்குத்' தேவையான கருவிகள் ஆகியவையும் இங்கே செய்யப்படுகின்றன. இவற்றுள் 'எலெக்ட்ரிக் டைப்ரைட்டர்கள்' முதன் முதலில் இந்தியாவில் மட்டுமே, இங்குள்ள வல்லுநர்களின் தொழில் நுட்பத் திறமையால் மட்டுமே உருவாக்கப்பட்டு வருகின்றன.

வினா: இவ்வளவு சிறப்புக்குரிய இந்தியாவில் மட்டுமே செய்யப்படுகின்ற இந்த 'எலெக்ட்ரிக் டைப்ரைட்டர்' முதன் முதலில் எப்போது உற்பத்தி ஆயிற்று என்று கூறமுடியுமா?

விடை: 1975 மே-மாதத்தில் அது கொண்டு வரப்பட்டது. முதல் 'எலெக்ட்ரிக் டைப்ரைட்டரை' அந்த ஆண்டு மே மாதம் ஒன்பதாம் நாள் நம்முடைய இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்களிடமே அளித்தோம்.

வினா: மிகவும் பெருமிதப்படக் கூடிய நிகழ்ச்சிதான் அது. பொதுவாக, இந்த 'இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ்' நிறுவனத்தில் உற்பத்தியாகும் கருவிகளினால் என்னென்ன தேவைகள் நிறைவேற்றப்படுகின்றன என்று கூற முடியுமா?

விடை: அஞ்சல்-தந்தித் துறைக்குத் தேவையான அச்சுத் தந்தி,



மற்றும் ''டெலக்ஸ்'' கருவிகள் அத்தனையும் எங்கள் நிறுவனத்தின் மூலமே வழங்கப்படுகின்றன. பாதுகாப்புத் துறைகளுக்குத் தேவையான 'டெலிபிரிண்டர்' கருவிகளையும் நாங்களே வழங்குகிறோம். விமானப் போக்குவரத்துத் துறை, காவல் துறை, இரயில்வே துறை, ஓவர்சீஸ் கம்யூனிகேஷன்ஸ் துறை, பருவநிலை ஆராய்ச்சித் துறை முதலான அரசுத்துறைகள் பல வற்றுக்கும் இங்கு உற்பத்தியாகும் 'டெலிபிரிண்டர்' பயன்படுகின்றது. தனியார்களின் வணிக நிலையங்களும், தொழிற்சாலைகளும் இங்கிருந்துதான் அவற்றைப் பெறுகின்றன. 'நியூஸ் ஏஜென்சீஸ்' என அழைக்கப்பெறும் செய்தி நிறுவனங்கள், செய்தி ஏடுகள் ஆகியவையும் இங்கு உருவாகும் கருவிகளையே வாங்கிக் கொள்கின்றன.

வினா: இங்கிருந்து வெளிநாடுகளுக்கும் 'டெலிபிரிண்டர்' கருவிகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றனவா?

விடை: நிறைய ஏற்றுமதி ஆகின்றன. வெளிநாடுகளில் குவையத் நாடு (KUWAIT) நம்முடைய டெலிபிரிண்டர்களை' ஏராளமாக வாங்கிக் கொள்கிறது. உலகில் அந்த நாட்டின் தூதுவர் அலுவலகங்கள் எங்கெங்கே உள்ளனவோ அங்கெல்லாம்கூட 'இந்துஸ்தான் டெலிபிரிண்டர்களே' பயன்படுத்தப்படுகின்றன. எண்ணெய் வளம் மிகுந்த அந்த நாட்டுக்கு மட்டுமின்றி இங்கிலாந்து, பெல்ஜியம், கொரியா, சிங்கப்பூர், தாய்லாந்து, லெபனன், ஜோர்டான், மொரீஷியஸ், ஈராக் முதலிய நாடுகளுக்கும் நமது 'டெலிபிரிண்டர்'கள் ஏற்றுமதி ஆகின்றன. அண்மையில்கூட எங்கள் நிறுவனத்தின் நிருவாகக் குழுத் தலைவரும் மேலாண்மை இயக்குநருமான திரு. ஜி. யு. மேனன் அவர்கள் ஆப்கானிஸ்தானம் சென்று அந்நாட்டிற்குத் தேவையான 'டெலிபிரிண்டர்' கருவிகளை வழங்குவதற்கு அந்நாட்டு அரசுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டு திரும்பியுள்ளார். இன்னொரு குறிப்பிடத்தக்க தகவல் ஒன்றையும் நான் கூற விரும்புகிறேன். 1968-69-இல் தான், ஏற்றுமதிச் சந்தையில் (EXPORT MARKET) இந்த நிறுவனம் அடியெடுத்து வைத்தது. ஸ்ரீலங்கா, நாட்டின் தலைநகரான கொழும்புவில் உள்ள 'கட்டுநாயகே' (KATU-NAYAKE) அகில உலக விமான நிலையங்களுள் ஒன்றாகும். அங்கே 'டெலிபிரிண்டர்-தகவல்




ஏற்பாட்டை' அமைத்துக் கொடுத்து அதற்குத் தேவையானக் கருவிகள் அனைத்தையும் 2.38 இலட்சம் ரூபாய் மதிப்பளவுக்கு வழங்கிய பெருமை முழுக்க முழுக்க இந்த 'இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ்' நிறுவனத்தையே சாரும். இதுவரை வெளிநாடுகளுக்கு ஏறத்தாழ அறுபது இலட்சம் ரூபாய் அளவுக்குக் கருவிகளை இங்கிருந்து நாம் ஏற்றுமதி செய்திருக்கிறோம்.

வினா: உள்நாட்டில் இதன் விற்பனை நிலவரம் பற்றிக் கூற முடியுமா?

விடை: நான் முன்பே குறிப்பிட்டதைப் போல அரசின் பல்வேறு துறைகளும், தனியார் துறைகளும் இங்குத் தயாராகும் 'டெலிபிரிண்டர்களையும்' அவற்றோடு இணைந்த 'டெலக்ஸ்' முதலான கருவிகளையும் பெருமளவில் பயன்படுத்துகின்றன. நாளுக்கு நாள் கருவிகளின் உற்பத்தி வேகத்தைப் போலவே, விற்பனை வேகமும் வளர்ந்த வண்ணம் இருக்கிறது. கடந்த 1974-75-ஆம் ஆண்டில் மட்டும் இதன் நிகர இலாபம் 59.45 இலட்சம் ரூபாய் ஆகும். இதில் வருமான வரியாக மட்டும் 30 இலட்சம் ரூபாய் செலுத்தியிருக்கிறோம். ஏன், இந்த நிறுவனம் தொடங்கியதிலிருந்து இன்றுவரை வருமான வரியாக மட்டும், 566.96 இலட்சம் ரூபாய் கட்டப்பட்டிருக்கிறது!

வினா: இதுகாறும் இங்கே உற்பத்தியாகியுள்ள கருவிகள் மொத்தமாக எத்தனை இருக்கலாம்?

விடை: 50,000 (ஐம்பதாயிரம்) யூனிட்டுகளுக்கு மேல் இருக்கலாம்.

வினா: எத்தனை பேர் இங்கே வேலை செய்கிறார்கள்?

விடை: ஊழியர்கள் 1,500 பேர், அதிகாரிகள் 99 பேர்.

வினா: இதனுடைய நிருவாக அமைப்பு முறை எப்படி உள்ளது?

விடை: மைய அரசு நிறுவனமான இதன் நிருவாகத்தை இயக்குநர்கள் குழு ஒன்று (BOARD OF DIRECTORS) கவனித்துக் கொள்கிறது.

வினா: நம்முடைய இந்தியத் தலைமையமைச்சர் திருமதி இந்திராகாந்தி அவர்களின் 20-அம்சத் திட்டத்தின் ஏற்றத்துக்கு இந்த நிறுவனம் எந்த வகையில் துணைநிற்கிறது என்பதைக் கூற முடியுமா?

விடை: நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த வேண்டும் என்பது 20-அம்சத் திட்டத்தின் இன்றியமையாத இலட்சியங்களில் ஒன்றாகும்; அது இனிது நிறைவேறும் வகையில் உற்பத்தியைப் பெருக்குவதில் முனைந்து ஈடுபட்டுள்ளது இந்த 'இந்துஸ்தான் டெலிபிரிண்டர் நிறுவனம். ஏராளமான டெலிபிரிண்டர் கருவிகளை உற்பத்தி செய்து நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குக் கணிசமான அளவில் தன் பங்கினை இது செலுத்துகிறது. அந்நியச் செலாவணி ஆக்கம் பெறவும் இது துணை நிற்கிறது. அஞ்சல்-தந்திப் போக்குவரத்துத் துறையும் பாதுகாப்பு முதலான பிற அரசுத் துறைகளும் தங்கள் தேவைகளை நிறைவு செய்து கொள்ளும் வகையிலும் இது உதவி புரிகிறது. அத்துடன் விலைவாசியைக் குறைக்க வேண்டும் என்ற 20-அம்சத் திட்டத்தின் முதல் முழக்கத்திற்கு ஏற்ப 'டெலிபிரிண்டர்' விலையையும் கணிசமாகக் குறைத்திருக்கிறோம். மற்றப் பொருள்களின் விலைகள் எல்லாம் மிகவும் உயர்ந்திருந்த போதே ஒரு 'டெலிபிரிண்டர் யூனிட்டின்' விலை ரூ. 7,000 ஆக இருந்ததை 20 சதவிகிதம் குறைத்துக் கொடுக்கவும் துணிந்தோம். இன்னும் எத்தனை எத்தனையோ புதுமைகளையெல்லாம் இந்த நிறுவனத்தின் கருவிகளில் இணைப்பதற்கு முயற்சிகள் பல எடுத்து வருகிறோம். இப்போதுகூட 'ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பிரிவு' (RESEARCH AND DEVELOPMENT SECTION) ஒன்று இயங்குவதற்காகச் சில அடுக்குகள் கொண்ட மாடிக் கட்டடம் ஒன்றை எழுப்பி வருகிறோம்.

—அ. வேதாசலம்

# இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் நிறுவனத்தின் சிறப்புகள்.

ஆசியாக் கண்டத்திலேயே முதன்முதல் 'டெலிபிரிண்டர்' தொழிற்சாலை ஏற்படுத்தப் பெற்றது இந்தியாவில்தான்; அதுவும் சென்னை மாநகரில் தான்! இதுவே இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் நிறுவனத்தின் முதன்மையான தனிச்சிறப்பாகும். சிறு தொழில் வளர்ச்சிக்கும், நடுத்தரத் தொழில் வளர்ச்சிக்கும் துணைபுரியக்கூடிய 'டெலிபிரிண்டரை'யும் அத்துடன் இணைந்த பல கருவிகளையும் இந்நிறுவனம் தன்னிகரற்ற முறையில் தயாரித்து வருகின்றது; தன்னால் இயன்ற தொழில் நுட்ப உதவிகளையும் இது வழங்குகின்றது. வளர்ச்சி பெற்ற நாடுகளும் ஒரு சில வளர்ந்துவரும் நாடுகளுமே 'டெலிபிரிண்டர்'களை விற்பனை செய்து கொண்டிருந்த உலகச் சந்தையில், இந்தியாவும் ஊடுருவிச் செல்வாக்கை உயர்த்திக் கொள்ள முடியும் என்பதை மெய்ப்பித்துக் காட்டிவருவதும் இந்த நிறுவனமே! பாகிஸ்தான் தொடுத்த இரண்டு படையெடுப்புகளின் போதும் 'டெலிபிரிண்டர்' கருவிகளை உடனுக்குடன் உற்பத்தி செய்து வழங்கி, நற்பெயரை ஈட்டிக் கொண்டதும் இந்த நிறுவனமே! இந்தியாவின் 'தொழிற்புரட்சி'யில், 'இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ்' நிறுவனத்துக்கும் மாபெரும் பங்கு உண்டு!

# திருக்குறள் - சில செய்திகள்



* திருக்குறளின் பழைய உரையாசிரியர் பத்துப்பேர் எனச் சொல்லப்பட்டாலும், பரிமேலழகர், மணக்குடவர், பரிப்பெருமாள், பரிதியார், காளிங்கர் ஆகிய ஐவரின் உரைகள்தான் கிடைத்திருக்கின்றன. இந்த ஐவரின் உரையையும் ஒவ்வொரு குறளுக்கும் தந்து, 'திருக்குறள் உரைவளம்' என்ற பெயரில் முப்பாலையும் மூன்று பெரிய நூல்களாக வெளியிட்டுள்ளனர் தருமபுர ஆதீனத்தார்.




* திருக்குறளில் அனிச்சம், மூங்கில் மரம், முள் மரம், நச்சு மரம், வற்றல் மரம், மருந்து மரம், பழமரம், முதலிய மரவகைகளும், தாமரை, குவளை, முதலிய நீர்ப்பூக்களும், நெருஞ்சி, பசும்புல் முதலிய படர்செடிகளும் குறிக்கப்பெற்றுள்ளன. யானை, பசு, காளை, ஆடு, நரி, புலி, மான், முதலிய விலங்குகளும், ஆமை, மீன், முதலிய நீர் வாழ்வனவும், காகம், கொக்கு, கோட்டான் முதலிய பறவைகளும் குறிப்பிடப்பெற்றுள்ளன.

விருந்தும் இடம் பெற்றுள்ளது; மருந்தும் இடம் பெற்றுள்ளது. கல்வியும் இடம் பெற்றுள்ளது; கல்லாமையும் இடம் பெற்றுள்ளது; இல்லறமும் இடம் பெற்றுள்ளது; துறவறமும் இடம் பெற்றுள்ளது.

* திருவள்ளுவருக்கும், அவர்தம் திருக்குறளுக்கும் பல்வேறு பெயர்களை இலக்கிய உலகத்தவர் சூட்டியுள்ளனர். தெய்வப்புலவர், தேவர், மாதானுபங்கி, செந்நாப்போதார், நாயனார், பெருநாவலர், நான்முகனார், முதற்பாவலர் என்பன வள்ளுவரின் வேறு பெயர்கள்.

முப்பால், உத்தரவேதம், தெய்வநூல், திருவள்ளுவர், பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, தமிழ்மறை, பொதுமறை என்பன திருக்குறளின் வேறு பெயர்கள்.





# தொழிலாளர்களின் கடமையும் பொறுப்பும்

— ஆர். வி. சுப்பிரமணியன்,
ஆளுநர் ஆலோசகர்.

''உற்பத்தி, உற்பத்தித் திறன் ஆகிய துறைகளில் தொழிலாளர்களுக்குக் கடமையும், பொறுப்பும் உள்ளது. உயர்ந்த உற்பத்தித் திறனுக்கான இயக்கத்தில் தொழிலாளர் நிறுவனங்கள் நேரடியாகப் பங்கு கொள்ள வேண்டும். நிருவாகத்தில் ஊழியர்களும் பங்கேற்பதன் மூலம், உற்பத்தி முறைகளில் உள்ள பிரச்சினைகளை அதிக ஈடுபாட்டோடும், முழு நோக்கத்தோடும் தொழிலாளர்கள் ஏற்றுக் கொள்வார்கள்.

''1975 அக்டோபர் 30-ஆம் தேதி தொழிலாளர் நல அமைச்சகம், நிறைவேற்றிய தீர்மானத்தின்படி, 500 அல்லது அதற்கு மேற்பட்ட ஊழியர்களைக் கொண்ட தொழில் நிறுவனங்கள் கூட்டு ஆலோசனைச் சபை ஒன்றை நிறுவ வேண்டும். அதன்படி, தமிழ்நாட்டில் அத்தகைய நிறுவனங்கள் மொத்தம் 204 உள்ளன. மத்தியத் தொழிலாளர் நல அமைச்சகத் தீர்மானத்தின்படி தொழிற்சாலை உற்பத்தி மட்டச் சபைகளை நிறுவுவதில் நாம் கொஞ்சம் முன்னேற்றம் அடைந்திருந்தாலும், இந்தத் துறையில் இன்னும் ஏராளமாக நிறைவேற்றப்பட வேண்டியுள்ளது.

''நிருவாகத்தில் ஊழியர் பங்கு கொள்வதால், உற்பத்தித் துறையில் தாமும் பங்கு கொண்ட உணர்வையும், பெருமையையும் ஊழியர் அடைகிறார்; உற்பத்தியைப் பெருக்குவதில் மிகுந்த ஆர்வம் பெறுகிறார். உற்பத்தியின் எல்லா மட்டங்களிலும் ஊழியர் பங்கு கொள்ளும் திட்டத்தில் இந்தத் தத்துவமே அடிப்படையாகும்.

''நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்ட இந்நேரத்தில், அதிகமாக உற்பத்தி செய்வது மிகவும் இன்றியமையாததாக இருப்பதால், நாட்டிலுள்ள நிருவாகிகள், தொழிலாளர்கள், அவர்களின் நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு ஒரு சிறப்பான பொறுப்பு உள்ளது. பண்டங்களின் உற்பத்தியைப் பெருக்கி, உபயோகிப்பாளர்களுக்கு நியாயமான விலைகளில் அவற்றைக் கிடைக்கச் செய்யும் முக்கியப் பணி நிருவாகிகளுக்கு உண்டு. தற்போதுள்ள முதலீட்டிலேயே, கிடைக்கக் கூடிய உற்பத்தித்திறனளவை அவர்கள் முழுமையாகப் பெருக்க வேண்டும். தொழில்துறை உறவு பற்றிய தமது கருத்துக்களையும், நோக்கங்களையும் நிர்வாகிகள் மறுபரிசீலனைச் செய்ய வேண்டும்.

''நிர்வாக வல்லுநர்கள், உற்பத்தித் திறனை எப்போதும் ஒரு தொழில் நுட்பப் பணியாகவே கருதுகின்றனர். உற்பத்தித் திறனளவு என்பது தொழிலாளரின் உற்பத்தி முயற்சியையும் பெருமளவு சார்ந்துள்ளது என்று நான் நம்புகிறேன். உற்பத்தி உயர்விலிருந்து கிடைக்கும் இலாபங்களில் ஒரு நியாயமான பங்கைத் தொழிலாளருக்கு அளிப்பதன் மூலம் தொழிலாளரிடமிருந்து உயர்ந்த உற்பத்தித் திறனைப் பெற முடியும்.

''நிர்ணயிக்கப்பட்ட முதலீட்டிலேயே, நிர்வாகத்தில் ஊழியர்களுக்குப் பங்கு தந்து ஊக்கப்படுத்தி, உற்பத்தியை அதிக அளவு உயர்த்துவதே நிர்வாகிகளுக்குள்ள தலையாய பணியாகும் என்று நான் நம்புகிறேன். உற்பத்தித் திறனை அதிகரித்து, உற்பத்தியைப் பெருக்க இதுவே ஓர் எளிய முறையாகும்.

''நிருவாகத்தில் தொழிலாளர்கள் பங்கு பெறுவது நிருவாகத்தின் தரத்தையும், உற்பத்தியின் தரத்தையும் உயர்த்தும்.

''நிருவாகத்தில் தொழிலாளர்கள் பங்கு கொள்வது, நிருவாகத்திலுள்ள பிரச்சினைகளைத் தொழிற்சாலை மட்டத்தில் எளிதில் அறிந்து கொள்ள உதவும், அதன் மூலம், கொள்கை முடிவுகள் விரைந்து எடுக்கப்படுவதுடன் அவற்றைத் தொழிலாளர்களின் ஊக்கமிக்க ஒத்துழைப்புடனும், விருப்பத்துடனும் விரைவாக நிறைவேற்றவும் இயலுகிறது.

''பொதுவாகத் தொழிற்சாலையிலும், குறிப்பாக உற்பத்தி மட்டத்திலும் ஆலை மட்டத்திலும் தொழிலாளர்கள் பங்கு பெறுவது, ஒரு குறிப்பிடத்தக்க, தரமான மாற்றத்தைக் கொண்டு வரும்; அதைத்தான் நாம் இப்போது உற்பத்தி முறை நிருவாகம் என்கிறோம். தொழிலாள வர்க்கத்தினருக்கும், நிருவாகத்தினர்களுக்கும் நமது ஜனநாயகக் கொள்கையை அர்த்தமுள்ளதாகவும், உபயோகமானதாகவும் செய்வதற்கு அது ஒன்றே வழியாகும்.

''நிருவாகத்தில் தொழிலாளர்களின் பங்கு பெறுவது, உற்பத்தி முறையில் அவர்கள் பங்கு கொள்வதற்கான முதல்படியாகும். ஏற்கெனவே கணிசமாகக் கவனத்தை ஈர்த்துள்ள இரண்டாவது படி, தொழிற்சாலை அல்லது நிறுவனத்தின் சொந்த உரிமையில் தொழிலாளர்களின் பங்காகும். தொழிலாளர்களுக்கும், நிருவாகத்துக்கும் இடையே ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து, ஒத்துப் போகும் நல்லெண்ணம் இருக்குமேயானால், எந்தத் தொழில் நுட்பப் பிரச்சினைகளையும் வென்று விடலாம்.

''இந்தப் புரட்சிகரமான ஜனநாயகக் கொள்கையின் சமுதாய, வரலாற்று முக்கியத்துவத்தை நமது தொழிலாள நண்பர்களும், நிருவாக நண்பர்களும் உணர்ந்து, அதை நடைமுறையில் வெற்றிகரமாகச் செயல்படுத்தத் தங்களின் முழு மனதுடன் கூடிய ஒத்துழைப்பைத் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.''

**(சென்னை நிருவாகக் கழகமும், இந்திய ஊழியர் நிருவாகக் கழகமும் கூட்டாக ஏற்பாடு செய்திருந்த ''தொழிற்சாலை மட்டத்திலும் உற்பத்தித் திட்டத்திலும் தொழிலாளர்களின் பங்கு'' என்ற கருத்தரங்கை 22—3—1976 அன்று துவக்கிவைத்து ஆளுநர் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் ஆற்றிய உரை....)**




தமிழ்நாட்டில் 166 தொழிற்சாலைகளில் தொழிலாளர்களுக்கு நிருவாகத்தில் பங்கு அளிக்கப்பட்டுள்ளது.

பிரதமரின் 20 அம்சத் திட்டத்தின் ஓர் அம்சமான தொழிலாளர்களுக்கு நிருவாகத்தில் பங்கு கொடுக்கும் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டில் 500 தொழிலாளர்களுக்கு மேல் உள்ள தொழிற்சாலைகளில் தொழிலாளர்களுக்கு நிருவாகத்தில் பங்கு அளிக்கும் முறை செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை 166 நிறுவனங்களில் 468 பகுதிவாரி கவுன்சில்களும், 166 கூட்டுக் கவுன்சில்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கோவை மாவட்டத்தில் 45 பஞ்சாலைகளில் இக்கவுன்சில்கள் அமைக்கப்பட்டுள்ளன. தொழிற்சாலை நிருவாகத்தில் தொழிலாளர்கள் முழுப்பொறுப்பு ஏற்கும் முறையின் முதல் படியாகவே இத்திட்டம் அமல்படுத்தப்படுகிறது.

நிருவாகத்தில் தொழிலாளர்கள் இன்னும் சிறந்த முறையில் பங்கு கொள்வதற்காக டி.வி.எஸ். குரூப் கம்பெனிகளில் பட்டறை கவுன்சில்களும், கூட்டுக் கவுன்சில்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

பிரதமரின் பொருளாதாரத் திட்டத்துக்கு ஏற்ப டி. வி. எஸ். குரூப்பில் ஒவ்வொரு தொழிலாளியும் உற்பத்தியைப் பெருக்குவதற்கான நடைமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன.

டி.வி.எஸ். குரூப் கம்பெனிகளில் வேலைவாய்ப்புக் கூடுதலாக்கப்பட்டிருக்கிறது. பயிற்சியாளருக்கு, குறிப்பாகப் பிற்பட்ட நிலையில் உள்ளவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டம் இருக்கிறது. நாட்டில் செயலாகிவரும் பல்வேறு திட்டங்கள் குறித்துத் தொழிலாளர் கல்வித் திட்டம் அளிக்கப்படுகிறது. குடும்பக் கட்டுப்பாட்டில் சிறந்த விருதை இந்த நிறுவனம் பெறத் தொழிலாளர்கள் ஒத்துழைத்திருக்கிறார்கள். கான்டீனில் சாப்பாட்டுக் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது. இலாப நோக்கு இல்லாமல், டி. வி. எஸ். குரூப் கூட்டுறவுக் கடைகளில் பண்டங்கள் வினியோகிக்கப்படுகின்றன.

# வள்ளுவர் கோட்டம் காண வாரீர்!



**உ**லகப் பொது மறையாம் திருக்குறள் தந்த தெய்வப் புலவர் திருவள்ளுவருக்குத் தகுந்த நினைவுச் சின்னம் சென்னையில் அமைக்கவும் ''அனைத்துலகத் திருக்குறள் ஆராய்ச்சி நிலையம்'' உருவாக்கவும், தமிழ்நாடு அரசு முடிவெடுத்தது.

**நினைவகம் அமைத்திட ஆய்வும் இடத்தேர்வும்:**

சென்னை மயிலாப்பூரில் ஏற்கெனவே திருவள்ளுவருக்கெனப் பண்டைச் சிறு கோயில் ஒன்று உள்ளது. இக்கோயிலின் அருகிலேயே நினைவகம் அமைத்திடும் சாத்தியக் கூறு பரிசீலிக்கப்பட்டது. மயிலாப்பூர் திருவள்ளுவர் கோயில், நெருக்கமாக வீடுகள் அமைந்த பகுதியில் உள்ளது. பெருமளவில் சென்னைக்கு வரும் உல்லாசப் பயணிகளைக் கவரத் தக்க வகையில் இந்த நினைவகம் அமைத்திடப் போதுமான இடம் இங்கு இல்லை. எனவே ''நுங்கம்பாக்கம் ஏரிக்கரைப் பகுதி'' என வழங்கும் இடத்தில், 5 ஏக்கர் பரப்பளவில் வள்ளுவர் கோட்டம் அமைப்பதென இறுதியாக முடிவெடுக்கப்பட்டது.

**அடித்தளம் அமைத்தலில் உறுதிப்பாடும் சிக்கன முறைமையும் :**

நினைவுச் சின்னம் அமைக்குமிடத்தில் மண்ணின் தன்மையை ஆராய நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் இரண்டு இடங்களில் பூமியில் 18 முதல் 20 மீட்டர் ஆழம் துளைகள் போட்டு விரிவான சோதனை மேற்கொண்டது.

நினைவகக் கட்டிடம் மிக உயரமாகவும் மேல் தளம் அதிக பளுவுள்ளதாகவும் அமைக்க வேண்டி, அடித்தளம் மிக மிக உறுதி வாய்ந்ததாக இருத்தல் அவசியமெனக் கருதப்பட்டது. மண்ணின், எடை தாங்குமளவு, மிகக் குறைந்து காணப்பட்டதால் ''இந்தியத்தொழில் நுட்பக் கல்விக் கழகத்தில்'' (I. I. T.) நடத்திய கருத்தரங்கின் முடிவுக்கேற்ப, பூமியில் துளையிட்டு 'நிலத்தடித் தூண் அடித்தளம்' (Pile-foundation) அமைப்பதே சிறந்த முறையெனக் கருதி, மேற்கொள்ளப்பட்டது. இம்முறையில், ஒவ்வொரு தூணும் 80 டன் எடை தாங்கும் வண்ணம் 45 செ.மீ. விட்டமும், 15 மீட்டர் நீளமும் கொண்ட ஆழ்துளைகள் நிலத்தில் இட்டு, இரும்புக் கம்பி கொண்ட காங்கிரீட் தூண்களைத் துளையிலேயே வார்த்து அடித்தளம் அமைக்கப்பட்டது. தரைத் தளம் போன்ற பளுத் தாக்கல் குறைவான இடங்களில் கூட 25 செ.மீ. விட்டமும், 3.5 மீட்டர் நீளமும் கொண்ட, அடி விரிந்த ஆழம் குறைந்த நிலத்தடித் தூண்கள் வார்க்கப்பட்டன. இதற்குப் பின், முழுப்பளுவையும் இம்முறையில் அமைக்கப்பட்ட அடித்தளம் தாங்குமா எனச் சோதிக்கப்பட்டு மேற்கட்டுமானப் பணி தொடங்கப்பட்டது.

**வடிவமைப்பின் சிறப்பியல்புகள் :**

நினைவாலயத்தின் முக்கிய பகுதிகள் பின்வருமாறு :

*(1)* தோரண நுழை வாயில்.

(2) அரங்க மண்டபம்.

(அ) கூடமும் அரங்கும்.

(ஆ) குறள் மணி மாடம்.

(இ) மாடித் தோட்டம்.

(ஈ) ஆராய்ச்சி நிலையம்.

(3) வள்ளுவர் சிலை கொண்ட கருங்கல் தேர்.

**(1) தோரண நுழை வாயில்:**

சுற்றிலும் மதில் சுவர் கொண்ட கோட்டத்திற்கு மூன்று பக்கங்களில் நுழை வாயில்கள் உள்ளன. முக்கிய வாயில் கோடம்பாக்கம் நெடுஞ்சாலைப் புறத்தே அமைந்து, காங்கிரீட்டினாலான நான்கு தூண்கள் நல்கும் மூன்று வழி வாயிலும், மேல்தளம் செல்லப் படிக்கட்டுகளும், சுதை வேலை விமானமும்கொண்டு கம்பீரமாகத் தோற்றமளிக்கிறது. நுழை வாயிலிருந்து படிக்கட்டு மூலம் இறங்கிப் பசும் புல் தரைத் தோட்ட மூலம் நடந்து அரங்க மண்டப முகப்பை அடையலாம்.

**(2) அரங்க மண்டபம்:**

இது 220 அடி X 100 அடி (67 மீ X 30.5 மீ.) அளவுள்ள ஒரு கூடமும், அரங்க மேடையும், இரு மருங்கிலும் 20 அடி (6.10 மீ) அகலமுள்ள சுற்றுத் தாழ்வாரமும் கொண்டது. தாழ்வாரத்தில் சுதை வேலை அழகு செய்யும் பிராகாரத் தூண்கள் எழுப்பி, மையப் பகுதியில் தூண்களின்றிப் பிணைக்கப்பட்ட உத்தரங்கள் மேல் 8 அடி சதுரமும் 5 அடி உயரமும் கொண்ட பல பெட்டிகள் கவிழ்த்தது போல் மேல் தளம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வரங்க மண்டபம் நவீன தொழில் நுட்ப உத்திகளைக் கையாண்டு சிக்கன முறையில் எழில் மிளிர அமைக்கப்பட்டுள்ளது. சுமார் 4,000 பேர் கூடிக் கேட்கும் வசதியுள்ள இவ்வரங்கம் சென்னையில் மட்டுமின்றித் தென் ஆசியாவிலேயே சிறப்பு மிக்கதோர் கூடமாகத் திகழும். அரங்க மேடையை வள்ளுவரின் உருவப்படத்துடன் கடைச் சங்க காலத்திற்கு முற்பட்ட இரு பெரும் புலவர்களான அதங்கோட்டாசான், தொல்காப்பியர் உருவப் படங்களும் அலங்கரிக்கின்றன. இந்திய தொழில் நுட்பக் கல்விக் கழகத்தில் உள்ள கம்ப்யூட்டர்கள் என்னும் ''கணிப்பான்கள்'' மூலம் இக்கட்டிட அமைப்பின் வலுவின் கணக்கீடுகள் சரிபார்க்கப்பட்டன. தாழ்வாரங்களுக்கு மேல் அமைக்கப்பட்டுள்ளதோர் இடைத் தள மாடத்தில் (Attic Floor) அறம் பொருள் இன்பம் என்னும மூன்று பால்களாகப் பகுக்கப்பட்டு உள்ள 1,330 அருங்குறள்களும் மூன்று வெவ்வேறு வண்ணக் கற்களாலான 133 கருங்கற் பலகைகளில் பொறிக்கப்பெற்று 67 தூண்களில் திறந்த புத்தக வடிவில் பொருத்தி வைக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் இத்தூண்களின் மறுபக்கங்களில் திருக்குறள் மொழி பெயர்ப்புப் பலகைகள், வேண்டிய மொழிகளில் பொருத்தி வைக்க இயலும்.

அரங்க மண்டப முகப்பில் அழகு மிளிர ''மகா நாசி'' எனச் சிற்பிகள் அழைக்கும் வளைவுக் குகை மூலம் அரங்கக் கூடத்தை அடையலாம். மண்டபத்தின் மேல் தளத்தில் 60 அடி X 60 அடி சதுர இரண்டு நீர்த் தொட்டிகளும் நடைபாதைகளும் கொண்ட மாடித் தோட்டம் அமைக்கப்பட்டுள்ளது. மகா நாசி வளைவின் இருமருங்கிலும் குறள் மணி மாட இடைத் தளத்திற்கும் மாடிப் பூங்கா மேல் தளத்திற்கும் செல்லப் படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. குறள் மணி மாடப் படிக்கட்டுகளின் மருங்குகளில் பறவை இறக்கைகள் போன்ற அலங்கார வேலைப்பாடுடைய கைப்பிடிச் சுவர் எழுப்பப்பட்டுள்ளது.



கருங்கல் தேரில் அமைந்துள்ள குறள் விளக்கச் சிற்பங்களில் ஒன்று

அரங்க மண்டபத்தின் அடியில், தேர் முகப்புக்கெதிரில், திருக்குறள் ஆராய்ச்சி நிலையம் 10 அடி X 35 அடி என்ற அளவில் அமைக்கப்பட்டுள்ளது. இதில், உலகின் பல் வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட திருக்குறள் சுவடிகளும் உரை நூல்களும் ஆராய்ச்சிக்காகச் சேகரித்து வைக்க வகை செய்யலாம்.

**கருங்கல் தேர் :**

வள்ளுவர் கோட்டத்தின் சிறப்பு அம்சமே 101 அடி உயரமும் 30 அடி அகலமும் எட்டுப் பட்டைத் தளமும் கொண்டு திருவாரூர்த் தேரினை மாதிரியாகக் கொண்டமைந்த கருங்கல் தேராகும். காங்கிரீட் தூண்களும் குறுக்கு நெடுக்கு உத்தரங்களாலான கட்டுக் கோப்பும் உடைய இத் தேர், வேலைப்பாடுடைய கருங்கற்களால் சுற்றிலும் மூடப்பட்டுள்ளது. தேரின் நடுவில் கருங்கல்லாலான கர்ப்பக் கிரஹம் போன்ற அமைப்பில் 6' 3" உயர வள்ளுவரின் உருவச் சிலை, வீற்றிருந்த திருக்கோலத்தில் வைக்கப்பட்டுள்ளது. தேரின் கூடு 45 அடி அகலத்திற்குக் காங்கிரீட்டால் செய்யப்பெற்றும் சுதை வேலையால் அழகுபடுத்தப்பட்டுள்ளது. தேரின் விமானத்தின் மேல் 5 அடி உயரத்திற்கு வழவழப்பாக்கித் தேய்த்துப் பளபளக்கும் கரும்பச்சைக் கல்லாலான கலசம் வைக்கப்பட்டுள்ளது. கருவறைத் தூண்களில் சிம்மங்கள், குதிரைகள் போன்ற சிற்ப வேலைப்பாட்டுக் கற்கள் பதிக்கப்பட்டுள்ளன. தேரின் அடித்தளம் மூன்று நிலைகளாக அமைக்கப்பட்டுத் திருக்குறளின் ஒவ்வொரு அதிகாரத்திலிருந்தும் ஒரு குறளின் கருத்தினை ஓவியமாக விளக்கும் புடைப்புச் சிற்ப ( Relief ) வேலைப்பாடுடைய 133 கருங்கற் பலகைகள் பதிக்கப்பட்டுள்ளன. உத்தமத் தேரின் இலக்கணப்படி 11 அடி விட்டமும், 15 டன் எடையும் கொண்டு ஒரே கல்லாலான பெருஞ் சக்கரங்கள் நான்கும் 5 அடி விட்டம் கொண்ட சிறு சக்கரங்கள் நான்கும் பூட்டப்பட்டுள்ளன. முன்புறத்தில் தேரை நடாத்திச் செல்வது போல் ஒரே கருங்கல்லாலான கல் யானை வடிவங்கள் செதுக்கி வைக்கப்பட்டுள்ளன. தேரைச் சுற்றிப் பிம்பம் பிரதிபலிக்குமாறு வழவழப்பான கருவண்ணக் கற்கள் பதித்து வானத்தில் மேகங்கள் அசையும் போது தேர் நகருவது போன்ற பிரமையை அளிக்கும்.

எட்டு டன் எடையுள்ள வள்ளுவர் சிலை 2.25 அடி உயரங் கருங்கல் பீடத்தின் மேல் அமைக்கப்பட்டுள்ளது. கருவறையில் உள்ளும் புறமும் பளபளப்பான கற்கள் பதிக்கப்பட்டு வெளியில் தேர்த்தள ஓரத்தில் கருங்கற் கைப்பிடிச் சுவர் பொருத்தப்பட்டுள்ளது. கருவறையின் சித்திர வேலைப்பாடமைந்த மணிக் கதவம் மரத்தாலமைக்கப்பட்டுள்ளது. அரங்க மண்டப மேல் தளத்திலிருந்து தேருக்குச் செல்ல ஓர் இடைகழியும் அன்னங்களின் அமைபிலான படிக்கட்டும் அமைக்கப்பட்டுள்ளன. மாடித் தளத்தில் உள்ள இரு பெரு நீர்த் தொட்டிகளிலும் இடைகழியிலுள்ள சிறிய நீர்த் தொட்டியிலும் முறையே தேரின் முழு வடிவமும் வள்ளுவர் சிலையின் உருவமும் பிரதிபலிக்கின்றன.

கருங்கல் வேலைகளுக்காகத் தேர்ந்த கற்கள் தமிழ்நாட்டிலேயே சிற்ப வேலைச் சிறப்பு நயத்திற்கேற்ற கற்கள் நல்கும் திருவண்ணாமலைக் கற் சுரங்கத்திலிருந்தும் கறுப்பு வைரமென மின்னும் தேரின் கலசம் ''வைரத் குன்று'' என்னுமிடத்திலிருந்தும் அகழ்ந்து எடுக்கப்பட்டுக் கொண்டு வரப்பட்டன. வெடி வைத்து வெந்த கற்கள் சிற்ப வேலைக்கு ஆகா என்பதால் அனைத்துக் கற்களும் உளி



கொண்டே வெட்டி எடுத்து, ஒப்பந்தக்காரர் பொறுப்பிலன்றி அரசுத் துறையின் பொறுப்பிலேயே கொண்டு வரப்பட்டன. சிறிதும் பெரிதுமாய் வெட்டி எடுக்கப்பட்ட கற்களின் எண்ணிக்கை மொத்தம் 3,000. இவற்றில் சில கற்கள் 40 டன் வரை எடை கொண்டவை.

வள்ளுவர் சிலை, குறளோவியப் பலகைகள் மற்ற கருங்கல் சிற்ப வேலைகள், சுதை வேலைகள் திரு. கணபதி ஸ்தபதி, திரு எஸ். கே. ஆச்சார் ஸ்தபதி, திரு ஜானகி ரமண ஸ்தபதி ஆகியோர் யோசனைப்படி தமிழகத்தின் தலை சிறந்த சுமார் 1,000 சிற்பக் கலைஞர்களின் கைவண்ணமாக, சிற்ப சாஸ்திர முறைப்படி அரசுத் துறையினரின் நேரிடையான பொறுப்பில் மேற்கொள்ளப்பட்டன. இது மட்டுமின்றி தொழில் நுட்பக் கலைஞரல்லாத ஏனைக் கட்டுமானத் தொழிலாளர் ஐந்நூற்றுவர்க்கு இத்திட்டம் வேலை வாய்ப்பளித்தது.

கட்டிட நிலத்தடித் தூண் அடித்தள வேலை ''சிம்ப்ளெக்ஸ்'' நிறுவனத்தாரால் செய்து தரப்பட்டது. காங்கிரீட் கட்டுமான வேலைகள் E. C. C. I. நிறுவனம் என்ற ஒப்பந்தக்காரர்களால் செய்து முடிக்கப்பட்டன. ஒலி, ஒளி அமைப்புகள் பிலிப்ஸ் நிறுவனத்தாராலும், சாந்தி மின்சார நிறுவனத்தாராலும் தோட்ட அமைப்பு திரு இந்திரா சென் எனும் தோட்டக் கலை நிபுணராலும் மேற்கொள்ளப்பட்டன. டான்ஸி அரசு நிறுவனத்தார், நிலைகள், அமரும் பலகைகள் போன்ற மர வேலைகளை மேற்கொண்டனர். மதில் சுவர் வேலைகளை திரு பரமேசுவர ராவ், ஒப்பந்தக்காரர் செய்து முடித்தார்.

தமிழகத்தில் பண்டைச் சிற்பக் கலைச் சிறப்புகளும் இன்றைய நவீன கட்டுமான உத்திகளும் ஒருங்கிணைந்த இம்மாபெரும் கலைப் படைப்பு வெளிநாட்டு, உள் நாட்டு உல்லாசப் பயணிகளைப் பெருமளவில் ஈர்க்கும் வண்ணம் நமது நாட்டில் தலைசிறந்த காட்சியிடங்களில் ஒன்றாக விளங்குமென்பதில் ஐயமில்லை.

வள்ளுவர் கோட்டம் சுற்றுலா பயணிகளின் உள்ளங்கவரும் நல்லிடமாக விளங்குவதுடன், இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டது போல் இந்த தலைமுறையினருக்கு மட்டுமல்லாமல், இனிவரும் தலைமுறையினருக்கும் கலங்கரை விளக்கமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, வள்ளுவர் கோட்டம் காண வாரீர்! வாரீர்! என்று அழைக்கின்றோம்.




# தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியின் "சிறுமலர்கள் சேமிப்பு திட்டம்."

## மாணவர்களும், சிறு வியாபாரிகளும் எளிதாக சேமிக்க, தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியின் ஒரு புதிய திட்டம்.

உங்கள் சக்திக்கு ஏற்ப, சிரமமின்றி சேமிப்பது நலம். எங்கள் "சிறு மலர்கள் சேமிப்பு திட்டம்" அதற்கு உதவுகிறது. உண்டியல் சேமிப்பு திட்டத்தின் மூலம் மாணவர்களும், சிறு வியாபாரிகளும் தங்கள் சேமிப்பை எங்கள் தலைமை அலுவலகம் அல்லது சென்னையில் உள்ள 23 கிளைகளில் சேமிப்பு கணக்கில் முதலீடு செய்யலாம்.

ரூ. 5/- செலுத்தி புதிய சேமிப்பு கணக்கு ஆரம்பிக்கும் ஒவ்வொரு நபருக்கும் அழகான ஒரு உண்டியல் வழங்கப்படும்.

TNSC
BANK

உண்டியலில் அவ்வப்பொழுது சேரும் சில்லறை காசுகளை சேர்த்து மாதம் ஒரு முறையாகிலும் அல்லது உண்டியல் நிறைந்தவுடனும் எங்கள் வங்கியில் செலுத்தி உங்கள் சேமிப்பு கணக்கில் வரவுவைத்துக் கொள்ளலாம்.

உங்கள் சேமிப்பு கணக்கில் உள்ள முதலீட்டின் பேரில் 5.75% வட்டி வழங்கப்படுகிறது. மேலும் உங்கள் சேமிப்பு கணக்கில் உள்ள பணத்தை லாபகரமாக முதலீடு செய்ய வழிவகைகளை எங்கள் கிளை மேனேஜர் தெரிவிப்பார். இத் திட்டத்தின் மூலம் சிறுக சேர்த்து உங்கள் எதிர்கால தேவைக்கு முதலீடு செய்யுங்கள்.

## தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்

379, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் சாலை, சென்னை-600 001.

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி உங்கள் சேமிப்பை அதிகரிக்கவும், நாட்டின் விவசாய மற்றும் பொருளாதார வளர்ச்சிகளுக்கும் உதவுகிறது.

TNSCB: 112,

# திசைபல கண்ட திருக்குறள்

ஜெய்....

* திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் ஜி.யு.போப்.

* திருக்குறளை இலத்தீனில் மொழி பெயர்த்தவர் இதாலி நாட்டுக்காரரான வீரமாமுனிவர்.

* ஜெர்மானிய மொழியில் மொழி பெயர்த்தவர் கிரௌல் ஆவார்.

* பிரெஞ்சு மொழியில் மொழி பெயர்த்தவர் எரியல் ஆவார்.

* திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த தமிழ்நாட்டவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் திரு.வ. வே. சு. அய்யர், திரு. ராஜாஜி, திரு. சுத்தானந்த பாரதியார், திரு. கே. எம். பாலசுப்ரமணியம் ஆவர்.

* பழங்காலத்தில் திருக்குறளுக்கு உரை எழுதியவர்கள் பத்துப்பேர் ஆவர். அவர்கள் தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சினார்க்கினியர், பரிமேலழகர், பரிப்பெருமாள், திருமலையர், மல்லர், கலிப்பெருமாள், காளிங்கர் ஆகியோர்.

* அண்மைக் காலத்தில் உரை எழுதியவர்களில், டாக்டர் மு. வரதராசன், நாமக்கல் கவிஞர், புலவர் குழந்தை, மயிலை சிவமுத்து, கா. சுப்ரமணிய பிள்ளை, டாக்டர் வ.சு.ப. மாணிக்கம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்.

* 1948-ஆம் ஆண்டில், தமிழக உயர்நிலைப் பள்ளிகளில் நீதி வகுப்பில் (Moral Period) நூறு திருக்குறள் கட்டாயமாகக் கற்றுத்தரப்படும் திட்டம் செயலுக்கு வந்தது.

* கி. பி. 1969-ஆம் ஆண்டினைத் தமிழகம் வள்ளுவர் ஈராயிரம் ஆண்டாகக் கொண்டாடியது.

* மதுரை மாவட்டத்தைச் சார்ந்த கோம்பை என்னும் ஊரில் அமைக்கப்பெற்றிருந்த ஒரு தமிழ் மன்றம், வீடுகளிலும்-கடைகளிலும் இடம் பெறும் வகையில் திருக்குறள் அச்சிடப்பெற்ற அட்டைகளைப்பல்லாண்டுகளுக்கு முன்பு வெளியிட்டுப் பொதுமக்களுக்கு அன்பளிப்பாக வழங்கி வந்தது.

* முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் 'திருவள்ளுவர்' என்ரொரு திரைப்படம் தமிழகத்தில் வெளிவந்திருக்கிறது. சிறுகளத்தூர் சாமா என்பவர் அந்தப் படத்தில் திருவள்ளுவராக நடித்துள்ளார்.

* ஒவ்வொரு சமயத்தவரும் வள்ளுவர் தங்கள் சமயத்தவர் என்று கூறுவதுடன் திருக்குறளிலிருந்தே தமது கொள்கைகளுக்குச் சான்றுதரும் வகையில் அரும் நூலைப் படைத்த பெருமை திருவள்ளுவருக்கு உண்டு.

* தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருக்குறள் நாட்குறிப்பை 1932–ஆம் ஆண்டிலிருந்து, தொடர்ந்து வெளியிட்டு வருகிறது. அந்த நாட்குறிப்பில் ஒவ்வொரு தேதிக்கும் ஒவ்வொரு குறள் அச்சிடப் பெற்றிருக்கிறது.

* டாக்டர் மு. வரதராசன் அவர்களால் எழுதப் பெற்று சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தவரால் வெளியிடப் பெற்றுவரும் திருக்குறள் தெளிவுரை, பொதுமக்கள் அனைவரையும் எளிதில் கவர்ந்துள்ளது. இது முதன் முதலாக 1949-ஆம் ஆண்டில் வெளியிடப்பெற்றது என்பதுடன் இதுவரை 100 பதிப்புகளுக்கு மேலும் ஏறக்குறைய 9 இலட்சம் பிரதிகளுக்கு மேலும் வெளியிடப் பெற்றுள்ளது என்பது சிறப்புச் செய்தியாகும்.

## காஞ்சியில் சோழர்கால நாணயங்கள்

காஞ்சிபுரத்தில், சென்னைப் பல்கலைக் கழக தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் பூமியைத் தோண்டி ஆராய்ச்சி செய்த போது, சோழர் காலத்துத் தங்கக் காசுகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

கடந்த இரண்டுமாத காலமாக ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது: சின்னக் காஞ்சிபுரம் வரதராசப் பெருமாள் கோவில் கீழ்க்கோபுரம் அருகில் இரண்டு குழிகள் தோண்டப் பட்டன.

அப்போது அந்தக் குழிகளில் தங்கக் காசு, செப்புக் காசுகள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. இவை சோழர் காலத்து நாணயங்கள் என்று தெரிகிறது. மேலும், கண்ணாடி வளையல், மணிகள், ரோமானியர் காலப் பானை ஓடுகள் ஆகியவையும் கிடைத்தன.

பெரிய காஞ்சிபுரம் சுப்பராய முதலியார் பள்ளிக்கூட விளையாட்டுத்திடல் அருகே இரண்டு குழிகள் தோண்டப்பட்டன.

16 அடி ஆழம் தோண்டியபோது அங்கே புத்த ஸ்தூபி இருந்ததற்கான தடயங்கள் கிடைத்தன. சுட்ட சுண்ணாம்பால் செய்யப்பட்ட பொம்மைகளும் அங்கு இருந்தன. தற்போது அங்கு மேலும் தீவிரப் பரிசோதனைகள் நடத்தப்பட்டுவருகின்றன.



திருவண்ணாமலையில் அண்ணாமலையார் திருக்கோயில் கும்பாபிஷேகம் 4-4-1976-ல் நடைபெற்றது.





காஞ்சிபுரம் காமாட்சி அம்மன் கோவில் கும்பாபிஷேகம் 5-4-1976 அன்று நடைபெற்றது. கோபுரக் கலசத்தின்மீது புனித நீர் ஊற்றித் தவத்திரு சங்கராச்சாரியார் கும்பாபிஷேகம் செய்து வைத்தார்.

# படமும் செய்தியும்



மகளிர் சுயசேவை இயக்கத்தின் உணவுப் பாதுகாப்புக் குழுவின் சார்பில் 7-4-1976 அன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விழாவில், கீழ்ப்பாக்கம் பால்விகார் குழந்தைகளுக்கு திருமதி மதுபென் ஷா அவர்கள் உணவும், உடையும் வழங்கினார்.

சென்னை உயர்நீதி மன்றத்தில் தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ள திரு. பி. எஸ். கைலாசம் அவர்கள் 8-4-1976 அன்று ராஜ்பவனில் ஆளுநர் அவர்களால், பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.





போட்ஸ்வானா குடியரசின் தலைவர் சர் செரிட்சி காமா அவர்கள் 9-4-1976 அன்று சென்னைக்கு வருகை தந்தார். அவருக்குத் தமிழக ஆளுநர் திரு. கே. கே. ஷா அவர்கள், நினைவுச் சின்னம் வழங்கினார்.

எண்ணூர் அனல் மின்நிலையத்தின் 5-வது யூனிட், 10-4-'76 அன்று மத்திய மின்சார அமைச்சர் திரு. கே. சி. பந்த் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.





நேபாள நாட்டுப் பிரதமர் டாக்டர் துளசி கிரி அவர்கள் 11-4-'76 அன்று சென்னைக்கு வருகை தந்தார். அவரை, தமிழக ஆளுநர் அவர்களும், ஆளுநர் ஆலோசகர்களும் வரவேற்றனர்.

தமிழகத்திற்கு 15-4-76-ல் வருகை தந்த இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. பக்ருதீன் அலி அகமத் அவர்களைத் தமிழக ஆளுநர் திரு. கே. கே. ஷா அவர்கள் வரவேற்றார்.





இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.



இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. பக்ருதீன் அலி அகமது அவர்களும், அவரது துணைவியார் திருமதி பேகம் அபிதா அகமது அவர்களும் தமிழகத்திற்கு வருகை தந்ததையொட்டி 15-4-'76-ல் ராஜ்பவனில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விருந்தில், தமிழக ஆளுநர் அவர்கள், இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களுக்கு நினைவுச் சின்னம் வழங்கினார்.



வள்ளுவர் கோட்டத்தில் அமைந்துள்ள உள்ளங்கவரும் தேர்.



மகளிர் சுயசேவை இயக்கத்தின் 4-வது ஆண்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்ற வந்த திருமதி பேகம் அபிதா அகமது அவர்களுக்கு, அம்புலன்ஸ் குழு தலைவர் திருமதி இந்திரா மேத்தா அவர்கள் மாலை அணிவித்தார்.



இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் 18-4-'76ல் நாகூர் தர்காவிற்கு வருகை தந்தபோது, தர்காவின் சார்பில் நினைவுச் சின்னம் வழங்கப்பெற்றது.



தமிழ்நாடு சுற்றுலா வாரியத்தினால் மாமல்லபுரத்தில் கட்டப்பட்டுள்ள கடற்கரைச் சுற்றுலா மாளிகையில் அமைந்துள்ள ஓர் ஊஞ்சலில் இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் அமர்ந்து மகிழ்ந்தார்.



சென்னை குதிரைப் பந்தயத் திடலில் 18-4-'76ல் நடைபெற்ற பந்தயத்தில் வெற்றிபெற்ற குதிரைகளின் உரிமையாளர்கள் திரு. எஸ். ரெங்காராஜன் அவர்களுக்கும், திரு. வி. பி. ராஜேந்திர பிரசாத் அவர்களுக்கும், இந்தியக் குடியரசுத் தலைவர் பரிசு வழங்கினார்.



இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களும், அவரது துணைவியாரும் 18-4-'76ல் தமிழக சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு விடை பெற்றனர்.




கன்னிமரா ஹோட்டலில் 21-4-'76-ல் நடைபெற்ற அனைத்து இந்திய உற்பத்தியாளர் நிறுவனத்தின் ஆண்டு விழாவை, தமிழக ஆளுநர் அவர்கள் துவக்கி வைத்தார்.



அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 22-4-'76 அன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் இந்திய அரசின் வெளிஉறவுத் துறை அமைச்சர் திரு. ஒய். பி. சவான் அவர்கள் பட்டமளிப்பு விழா உரையாற்றினார்.

---

மதுராந்தகத்தில் 22-4-'76 அன்று நடைபெற்ற விழாவில் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் கைத்தறி நெசவாளர்களுக்கு ஸ்டேட் பாங்கின் கடன் உதவித் தொகையை, வெளி உறவுத்துறை அமைச்சர் திரு. ஒய். பி. சவான் வழங்கினார்.





# ஓர் இலட்சியக் கிராமம் உருவாகிறது!

**அ**ந்த விவசாயத் தோழனின் முகத்திலே பூரிப்பும் பெருமையும் இழைந்தோடுகிறது.

உலகின் முதன்மைத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் அந்த ஏழை எளிய இளைஞன், முன்பு தாம் அடைந்த இன்னல்களை ஒரு கணம் எண்ணிப் பார்க்கிறான்.

கொள்ளை இலாபம் அடிக்கும் முதலாளியிடம் கெஞ்சிக் கூத்தாடி அதிக வட்டிக்குப் பணத்தைக் கடனாக வாங்கிய நாட்களும், அதனால் விளைந்த தொல்லைகளும் அவன் கண் முன்னே சில வினாடிகள் தோன்றி மறைகின்றன.

அதற்கெல்லாம் முற்றுப் புள்ளி வைக்கும் நாளாக அந்நாளை அவன் கருதியதில் வியப்பென்ன இருக்க முடியும்?

ஆம். ஐ. ஓ. பி. அவன் அல்லலைத் தீர்த்து வைத்தது.

**மார்ச் திங்கள் 27-ஆம் நாள் சோமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த கல்லாடிப் பேட்டையில் நடந்தது 'கிராம ஏற்பு நாள்' விழா!**

இந்தியன் ஓவர்சீஸ் பாங்க் ஏற்பாடு செய்திருந்த இந்த விழாவில், 100 அரிசன விவசாயிகளுக்கு ரூ. 200-லிருந்து ரூ. 500 வரை கடன் வழங்கப்பட்டது.

## வங்கியின் மூலம் வேலைவாய்ப்பு!

செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு டி. கே. ஏ. திவான் முகம்மது ஐ.ஏ.எஸ்., அவர்கள் விவசாயிகளுக்குக் கடன் வழங்கிப் பேசுகையில் குறிப்பிட்டார்:

''இந்த விழாவில் பல கோரிக்கைகளைச் சொன்னார்கள். இப்பகுதி மக்கள் பெரும்பாலும் தாழ்த்தப்பட்டவர்கள், நிலமற்ற ஏழைகள், குத்தகை உடன்பாட்டில் விவசாயம் செய்பவர்கள். இவர்களுக்கு விவசாய மேம்பாட்டிற்காக இந்தியன் ஓவர்சீஸ் பாங்க் கடன் வழங்க முன்வந்திருப்பதை மிகவும் பாராட்டுகிறேன்.

''இப்பகுதி இளைஞர்கள், பள்ளி இறுதி வகுப்புப் படித்து வேலையின்றி இருப்பதாகவும், அவர்களுக்கு வேலைவாய்ப்புத் தரும்படியும் கேட்டுக் கொண்டார்கள். உங்கள் வங்கியில் (ஐ. ஓ. பி.) இவர்களுக்கு வேலை வாய்ப்புத் தரலாம். உங்கள் வங்கியில் பணி புரியும் கடைநிலை ஊழியர்களுக்குத் தேவையான சீருடைகளைக் கூட இப்பகுதியிலுள்ள பெண்கள் மூலம் தைத்துக் கொள்ள ஏற்பாடு செய்யலாம். அலுவலகப் பணிகளுக்காகத் தேவைப்படும் காகித உறைகளைக்கூட இப்பகுதி மக்களைக் கொண்டே தயார் செய்து கொள்ளலாம். இவ்வாறு செய்வதன் மூலம் இங்கு வாழ்கின்ற ஏழை எளிய மக்களுக்கு நாம் வேலைவாய்ப்புத் தரலாம்.''

## ஐந்து அம்சத் திட்டம்:

சென்னையிலிருந்து 30 கிலோமீட்டர் தொலைவில், செங்கற்பட்டு மாவட்டம் குன்றத்தூர் அருகிலுள்ள சோமங்கலம் முதலான பத்துக் கிராமங்கள் ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டு வருவதை நாம் அறிவோம்.

இத்திட்டத்தின்கீழ் இந்தியன் ஓவர்சீஸ் பாங்க் சோமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கல்லாடிப் பேட்டை, பூந்தண்டலம், நந்தம்பாக்கம் ஆகிய கிராமங்களில் 'கிராம ஏற்பு நாள்' விழாவினைக் கொண்டாடியது.

மேற்கண்ட கிராமங்களில் உள்ள ஏழை அரிசனவிவசாயிகள், ஏழை எளியவர்களின் வாழ்க்கை தரம் உயர்ந்திடும் வகையில் பல உதவிகள் இவ்வங்கியினால் வழங்கப்பட்டு வருகின்றன. கறவை மாடுகள் வாங்கவும், சிறிய கடைகள் வைக்கவும், நெசவுத் தொழிலில் ஈடுபடவும் தக்க உதவிகள் செய்யப்பட்டுள்ளன.

சிறு விவசாயிகள் வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்வதற்கான பல திட்டங்கள் அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அவற்றுள் இவ்வங்கி முன்னோடியாக இருந்து வருகின்றது. இருபது அம்சத் திட்டம் நிறைவேற இவ்வங்கி ஐந்து அம்சத் திட்டம் ஒன்றைத் தீட்டிச் செயலாற்றி வருகின்றது அவை:

1. சிறு விவசாயிகளுக்குப் பயிர்க் கடன் வழங்குதல்.

2. உபதொழில் மேற்கொள்ளப் பண உதவி அளித்தல்.

3. பின்தங்கி இருப்போருக்கு மிகக் குறைந்த வட்டியில் கடன்.

4. குடிசைத் தொழிலாளர்கள் சிறு வியாபாரிகளுக்குத் தாராளக் கடனுதவி.

5. தங்க நகைகளின் பேரில் கிராம மக்களுக்குக் கடன் வழங்கி, கொழுத்த வட்டி வசூலிக்கும் லேவாதேவி நபர்களிடமிருந்து விடுவித்தல்.





### பாங்கின் உதவிகள் :

இருபது அம்சத் திட்டத்தை ஒட்டிய இந்த ஊரகச் சீரமைப்பு திட்டம் தமிழக ஆளுநர் அவர்களின் முத்தான திட்டங்களில் ஒன்றாகும். முதலில் இதன் பயனைப் பெரும் பேறு பெற்றது இந்த சோமங்கலம் மற்றும் சுற்றுப்புற கிராமங்கள். இத்திட்டத்தைச் செயல்முறைக்குக் கொண்டு வர பணிபுரியும் பல்வேறு அமைப்புக்களில் மேற்கண்ட வங்கிக்குப் பெரும் பங்குண்டு.

கல்லாடிப்பேட்டை கிராமத்துக்கும் இவ் வங்கிக்கும் 1973-லிருந்தே நெருங்கிய தொடர்பு இருந்து வருவதை நாம் பார்க்கிறோம். கல்லாடிப் பேட்டை அரிசன கூட்டுறவுப் பால் வழங்கும் சங்கம் 1973-லிருந்து குன்றத்தூர் கிளை மூலமாகக் கடனுதவி பெற்று நல்ல முறையில் நடைபெற்று வருகிறது. முதலில் வாங்கிய கடன் ரூபாய் 42,000-த்தை முறையாகத் திருப்பிச் செலுத்திய உடன், கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் மறுபடியும் கல்லாடிப் பேட்டை 'கூட்டுறவுப் பால் வழங்கும் சங்கம் 45,000 ரூபாய் கடனைப் பெற்று இன்றளவும் மிகச் சீரிய முறையில் செயல்பட்டு வருகின்றது.

தலைமுறை தலைமுறையாக இக்கிராம மக்கள் வாய்மொழி குத்தகைதாரர்களாக நிலங்களைப் பயிரிட்டு வருகின்றனர்; சாகுபடிச் செலவுக்குப் பண வசதியின்றி நிலச் சுவான்தாரர்களை, மிராசுதாரர்களை அணுகி அண்டி அநியாய வட்டிக்குக் கடன் வாங்கி அவதிப்படுகின்றனர். அதன் விளைவாகச் சொந்த நிலம் இல்லாமல் குத்தகை உடன்பாடு மற்றும் எத்தகைய எழுத்துப் பத்திரமும் இல்லாமல் வாய்மொழி குத்தகை செய்யும் நூறு அரிசன உழவர்களுக்கு ரூ. 30,000 வரை நெல் சாகுபடி செய்ய கடன் வழங்கப்பட்டுள்ளது. கடன் தொகையில் பெரும் பகுதியினை உரமாகவும், பூச்சி மருந்தாகவும் வழங்கப்பட்டுள்ளது. இக்கடன் பெற்ற அரிசன குத்தகைதாரர்களுக்குச் 'சிறு உழவர்கள் மேம்பாட்டுத் திட்டம்' மூலம் மானியம் வழங்கவும் ஏற்பாடுகள் நடைபெறுகின்றன என்பதை இங்கே குறிப்பிட வேண்டும்.

பத்துக் கிராமங்கள் பாங்காய் வளர்ந்திட தேசிய உடைமையாக்கப்பட்ட பாங்குகள் உதவி வருகின்றன. சோமங்கலம், வரதராஜபுரம், எருமியூர், நடுவீரப்பட்டு, நந்தம்பாக்கம் ஆகிய கிராமங்களை ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வளர்ப்புக் கிராமங்களாக ஏற்றுக்கொண்டிருக்கிறது. விவசாயம், பால் பண்ணை, கோழிப் பண்ணை, தெளிப்பான் வாங்குதல் மாட்டு வண்டி வாங்குதல், போன்றவற்றுக்கான இந்த பாங்கு சுமார் 2.5 இலட்சம் ரூபாய் கடன் வழங்கியிருக்கிறது.

நந்தம்பாக்கத்தில் இந்தியன் பாங்கு உதவியுடன் பால் வழங்கு நிலையமொன்றை அமைத்திருக்கிறார்கள்.

### இருப்து அம்சம் இனிதே நிறைவேறிட

குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஒரு சின்னஞ்சிறு கிராமம், சோமங்கலம். சுமார் ஆயிரம் பேர் இங்கு வசிக்கிறார்கள், இங்கு ஒரு துவக்கப்பள்ளியும், ஒரு உயர்நிலைப் பள்ளியும், ஒரு விவசாயக் கூட்டுறவுச் சங்கமும் உள்ளன.

அமரம்பேடு, பூந்தண்டலம், நல்லூர், புதுச்சேரி, நடுவீரப்பட்டு, எருமியூர், வரதராஜபுரம், நந்தம்பாக்கம், சிறுகளத்தூர் ஆகிய கிராமங்களும் ஊரகச் சீரமைப்புத் திட்டத்தின்படி தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன.

இந்தப் பத்துக் கிராமங்களிலுமாகப் பதினோராயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் வசிக்கிறார்கள். இவர்களில் சுமார் 6,000 பேர் அரிசனங்கள். ஊரகச் சீரமைப்புத் திட்டத்தின் பலனை பிரதமரின் இருபது அம்சப் பொருளாதாரத் திட்டம் இனிதே நிறைவேறிட இங்கு எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின்படி வீட்டுக்கு வீடு சென்று தேவைகளைக் கண்டறிந்து வேண்டியதைச் செய்யவும், பாசன வசதி அதிகரிக்கவும் தீவிரப் பணிகள் மேற்கொள்ளப் படுகின்றன.

2,597 ஏக்கரா நன்செய் நிலத்திலும், 2,032 ஏக்கரா புன்செய் நிலத்திலும் உயர் விளைச்சல் ரகப் பயிர்கள் சாகுபடி செய்யப்படும், ஒரு விவசாயப் பொறியியல் பணி நிலையம் இங்கு அமைக்கப்படும். டிராக்டர் போன்றவற்றை இந்த நிலையம் சாகுபடியாளர்களுக்கு வாடகைக்கு விடும்.

### ஆளுநரின் அழைப்பு

கிராமப் பகுதிகளில் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தவும், சோமங்கலத்தில் பல சீரமைப்புத் திட்டங்களுக்கு நிதியளித்து மேற்பார்வையிடவும் சமூகப் பணி நிலையங்களை அதிக அளவில் பயன்படுத்த மாநில அரசு திட்டம் வகுத்திருக்கிறது என்று தமிழ்நாடு ஆளுநர் கே. கே. ஷா. அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

'' பல்வேறு தொழில்களில் பயிற்சியளிக்க அல்லது வேலை

யளிக்க எல்லா மாவட்டத் தலை நகரங்களிலும் வேலைவாய்ப்பு நிலையங்கள் அமைக்க சமூகப் பணி நிலையங்கள் முன்வர வேண்டும். இது குறிப்பாகப் பெண்களுக்குப் பயன்பட வேண்டும்.

''சோமங்கலத்திலுள்ள 2,200 குடும்பங்களில் 1,000 குடும்பங்களுக்கு நிலங்கள் உள்ளன. அவற்றில் 400 குடும்பங்கள்தான் இரு போகம் பயிரிடுகின்றன. ரூ. 170 இலட்சம் செலவில் 1,100 கிணறுகளையும் ரூ. 6 இலட்சம் செலவில் 60 குழாய்க் கிணறுகளையும் அளிக்க அரசு தீர்மானித்திருக்கிறது. இம்முயற்சிகளின் மூலம் 600 பண்ணைகளில் இரண்டு அல்லது மூன்று போகம் சாகுபடி செய்ய முடியும். உபயோகிப்போரிடமிருந்து நீர் கட்டணம் வசூலிக்கப்படும். திட்டம் தவறான வழியில் பயன்படாதிருக்க சமூகப் பணிநிலையங்கள் பார்வையிட வேண்டும்.

''கூட்டுறவுப் பால் பண்ணைகளைத் துவக்க 200 குடும்பங்களுக்கு மாநில அரசு கடன் வழங்கும். சோமங்கலத்தில் தேவைப்படும் உதிரி பாகத் தொழிற்சாலை ஒன்றும் அமைக்கப்படும்; இந்த முயற்சிகளால் சோமங்கலம், விரைவில் இந்தியாவில் ஒரு சிறந்த எடுத்துக்காட்டான கிராமமாக விளங்கும்'' என்றார் ஆளுநர் கே. கே. ஷா அவர்கள்.

மக்கள் பணியில் ஈடுபட சமூகப் பணி நிலையங்கள் முன்வர வேண்டும் என்ற ஆளுநரின் வேண்டுகோளை ஏற்று, ஜெயண்ட்ஸ் சர்வதேச நிறுவனத்தின் சென்னைக் கிளை, சோமங்கலம் கிராம ஊரக வளர்ச்சித் திட்டத்தில் மிக்க ஆர்வமுடன் பங்கு கொண்டிருக்கிறது.

**நல்வாழ்வுக்கான நலப் பணிகள்!**

சோமங்கலம் முதலான கிராம மக்கள் நல்வாழ்வு வாழ்ந்திடவும் அவர்களுக்கு மருத்துவ வசதிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இந்தக் கிராமங்களில் வசிக்கும் 12 ஆயிரம் பேர்களுக்கு மருத்துவ வசதி அளிக்க அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

இருபது அம்சத் திட்டப் பணிகள் தீவிரப்படுத்துவதன் விளைவாக விவசாயப்பணிமனைகள் இப்பகுதிகளில் தொடங்கப்பட்டுள்ளன. அதன் மூலம் பூச்சி மருந்தும், உரமும் வழங்கப்பட்டு வருகின்றது.

தற்போது 50 ஏக்கர் நிலத்திலுள்ள பாறைகளை உடைக்கும் பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்காகக் கூட்டுறவுச் சங்கம் ஒன்றும் அண்மையில் தொடங்கப்பட்டுள்ளது.

சோமங்கலத்திலும், நல்லூரிலும் இரண்டு துளைக் கிணறுகள் தோண்டும் பணி நடந்து கொண்டிருக்கிறது. சோமங்கலத்தில் ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் ஒன்றும், பனை வெல்லக் கிராமக் கைத் தொழில் ஒன்றும் விரைவில் ஏற்படுத்துவதற்கான தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேற்கண்ட கிராமங்களில் நில உடைமையாளர்களுக்குத் தனிப்பட்டாக்களை வழங்குவதும், வருவாய்ப் பதிவேடு இன்று வரையிலுமான விவரங்கள் அடங்கியதாகச் செய்யும் பணியும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வருவாய்ப் பதிவேடு பற்றிய விசாரணையை நடத்த நில அளவைப் (சர்வே) பணியாளர்கள் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

விசாரணையிலும், நில அளவையிலும் இந்தக் குழுவினருடன் ஒத்துழைக்குமாறு, நிலஉடைமையாளர்கள் அனைவரையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

இவ்வாறு காந்தியடிகளின் இலட்சியக் கனவை நனவாக்கும் நன்முயற்சியில்-நலிவைப் போக்கிப் புதுப்பொலிவையும் வலிவையும் உண்டாக்கும் நற்பணியில்— இருபதம்சம் என்னும் இந்தியத் தேர். உலா வருகின்றது. அதன் சுவடு முதன் முதலில் பெறுகின்ற பெரும் பேறு சோமங்கலத்துக்குக் கிடைத்திருக்கிறது என்பதை நாம் பெருமிதத்தோடு குறிப்பிட வேண்டும்.

— பி. வி. கிரி

## புத்துயிர் பெற்ற தமிழக கிராமம்!

ஈரோடுப் பகுதியிலுள்ள ஒரு சின்னஞ்சிறு கிராமம் 20 ஆண்டுகளுக்குப் பிறகு உயிர் பெற்றெழுந்துள்ளது. சுமார் 200 குடும்பங்கள் வசிக்கும் அந்த கிராமத்துக்கு வினோபாஜீயின் பெயரிடப்பட்டுள்ளது. அங்குள்ள நிலத்தில் பெரும் பகுதி, அவருக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டதாகும்.

ஈரோடு சிக்கையா நாயக்கர் கல்லூரியையும் வேறு ஐந்து நிறுவனங்களையும் சேர்ந்த தேசிய சேவை அணித் தொண்டர்கள் கடந்த மூன்று ஆண்டுகளாக அரும்பாடுபட்டு, மிகவும் மோசமாக இருந்த கல்சாரி நிலத்தை சாகுபடி நிலமாக மாற்றியுள்ளனர்.

மழைநீரைத் தடுத்து சேமிப்பதற்காக அவர்கள் அந்த கிராமத்தில் ஒன்பது அடி உயரமுள்ள அணை ஒன்றைக்கட்டியிருக்கிறார்கள். இதன் பலனாக, கிணறுகளிலும் நீர் ஊறத் தொடங்கியுள்ளது. இதன் மூலம் 55 ஏக்கருக்குப் பாசன வசதி கிடைத்துள்ளது.



## இந்தியாவிலுள்ள உணவுப் பங்கீட்டுக் கடைகள்

இந்தியா முழுவதிலும் 1975-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் இறுதிவரை ஏறத்தாழ 2,24,805 உணவுப் பங்கீட்டுக்கடைகள் இருந்தன.

தற்பொழுது அவைகளின் எண்ணிக்கை அதிகமாகியுள்ளது. தற்பொழுது மொத்தம் 2,33,282 உணவுப் பங்கீட்டுக் கடைகள் உள்ளன. அதிகமாகியுள்ள புதிய கடைகள் பெரும்பாலும் நகர்ப்புறங்களில் அமைந்துள்ளன.

# காதி கிராப்ட்

உங்கள் நல்வாழ்விற்குத் தரமான பொருட்களைத் தருகிறோம்!



உடல் மணக்க 'குறிஞ்சி' சோப். உடை வெளுக்க 'கோபுரம்' சலவை சோப். தித்திக்கும் தூய தேன். 'அக்மார்க்' செக்கெண்ணெய். தோல் காலணிகள், கைப்பைகள். வீட்டை அலங்கரிக்க கலைப் பொருட்கள். தினசரி உபயோகத்திற்கு பிரம்பு, மூங்கில், மற்றும் பனைப் பொருட்கள். வேலைப்பாடு மிக்க மட்பாண்டங்கள். அழைப்பு விடுக்க கைக் காகிதங்கள். மலிவு தீப்பெட்டிகள். கதர் பருத்தி, கதர் சில்க் துணிவகைகள். இவற்றை வாங்கி மகிழ்வீர்.

கிராமக் கைவினைஞர்கள் நல்வாழ்வு பெற அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களை வாங்குவீர்.

தரமானது ... மலிவானது ... இவை வாங்கிட
தமிழகமெங்கும் 180 காதி கிராப்ட்கள்.

**காதி கிராப்ட்**
தமிழ்நாடு கதர், கிராமத் தொழில் வாரியம்,
'குறளகம்', எஸ்ப்ளனேடு, சென்னை-600 001.

KK/381



# மண்ணும் மனிதனும்

**''பெற்ற தாயும் பிறந்த பொன் னாடும்
நற்றவ வானினும் நனிசிறந் தனவே!''**

என்றார் பாரதியார். ஆம். நம்மை ஈன்றெடுத்த அன்னையும், நாம் பிறந்த நமது தாய் நாடும் உயர்ந்த வானினும் மிகச் சிறந்தன என்பது கவிஞர் கருத்து. அதனால்தான் அவர், இறும்பூதெய்திப் பாடுகின்றார். இந்தத் தாய் நாட்டிற்கு—அன்னை நிலத்திற்கு அத்துணைச் சிறப்பு!

விண்ணுக்குப் பறப்பது போல் கதைகள் பேசுகிறோம். ஏன்? விண்ணுக்கே பறக்கவும் செய்கிறோம். என்றாலும் நாம் விண்ணிலா கால் கொண்டிருக்கிறோம்? நாம் எங்கே சென்றாலும், எங்கே பறந்தாலும் திரும்பவும் இங்கு—இந்த மண்ணுக்கே வந்தாக வேண்டும் — இந்த மண்ணில் வந்துதான் இளைப்பாற வேண்டும்!

இவ்வளவு சிறந்த—இத்துணை மிக்குயர்ந்த நில மகளை—மண் மாதாவை நமது வள்ளுவப் பெருந்தகை பல்வேறு இடங்களில் நமக்கு எடுத்துக் காட்டிப் பயனுள்ள நீதி நெறிகளையும் உணர்த்துகிறார். அவற்றுள் சிலவற்றை நாம் இங்கே காணலாம்.

**''அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.**

என்பது திருக்குறள். இக்குறட்பா 'பொறையுடைமை' என்னும் தலைப்பின் கீழ் வருவது.

''நிலம் தன்னைத் தோண்டுவோரை விழாமல் தாங்கிக் கொள்கிறது!

''அதுபோலத் தம்மை அவமதிப்போர் துன்புறு வண்ணம் அவர்கள் செய்த துன்பத்தைப் பொறுத்துக் கொள்வதே தலையாயது' என்பது இக்குறட்பாவின் கருத்து. நிலம் தன்னைத் தோண்டுவோரை விழாமல் தாங்கிக் கொள்கிறது. அப்படி விழாமல் தாங்கிக் கொள்வது மட்டுமா? இல்லை. தன்னை வெட்டி கொத்தித் துன்புறுத்துகிறவனை வாழ்விக்கவும் செய்கிறது.



இதில், பிறர் செய்யும்—துன்பத்தை —ஏளனத்தை—இகழ்ச்சியைப் பொறுத்துக் கொள்வது மட்டும் போதாது — அவற்றைப் பொறுத்துக் கொண்டு அவர்களுக்கு நன்மையைச் செய்—'இன்னா செய்தார்க்கும் இனியவே செய்' என்பது எத்துணை உயர்ந்த பண்பு!

அடுத்து, சினத்தின் தீமையை வலியுறுத்த வந்த வள்ளுவப் பெருந்தகை 'வெகுளாமை'' என்னும் அதிகாரத்தின் கீழ்,

**''சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று''**

என்கிறார்.

''தன் வலிமையைக் காட்டுவதற்குச் சினத்தைக் கருவியாகக் கொண்டவன் நிச்சயமாகத் துன்பமடைவான். அவன் துன்பமடைவது, நிலத்தைத் தன் கையினால் ஓங்கி அறைந்தவனுடைய கை துன்புறுவது எவ்வளவு நிச்சயமோ அவ்வளவு நிச்சயமாகும்''—என்பது இக்குறட்பாவின் கருத்து.

நிலம் தன்னை அறைந்தவனைத் திருப்பித் தாக்குவதில்லை. எனினும், அதனை அறைந்தவன் துன்புறுகிறான். அதுபோல, நாம் எவரிடம் சினந்து கொள்கின்றோமோ அவர் நம்மை திருப்பித் தாக்காவிட்டாலும் நாம் துன்புறுவோம். நிலத்தை அறைந்தவன் துன்பமடைவது உறுதி. அதைப் போலத் தன் வலிமையைக் காட்டச் சினத்தைக் கருவியாகக் கொண்டவனும் துன்புறுவது உறுதி. நிலத்தை அறைந்தவன் தன் செயலாலேயே வலியை வருவித்துக் கொள்கிறான்—சினத்தைக் கொண்டவனும், தான் கொண்ட சினத்தாலேயே துன்பத்தை வலிய வருவித்துக் கொள்கிறான். நிலத்தை அறைந்தவனும், சினத்தைக் கருவியாகக் கொண்டவனும் துன்பமடைவது உறுதி.

மேலும், நிலத்தை அறைவதால் நிலத்திற்கு எவ்விதத் தீங்கும் ஏற்படுவதில்லை. அறைந்த




வனுக்குத்தான் துன்பம் என்பதனை வள்ளுவர் சொல்லாமற் சொல்லும் திறம் போற்றத்தக்கது.

அடுத்து, நிலத்தையும் நீரையும் காட்டி, மனித இயல்பின் மாற்றத்தை யுணர்த்த முற்படுகிறார்.

**''நிலத்தியல்பால் நீர்திரிந தற்றாகும் மாந்தர்க்கு இனத்தியல்ப தாகும் அறிவு''**

என்பது குறட்பா. இது 'சிற்றினஞ்சேராமை' என்னும் அதிகாரத் தலைப்பின் கீழ் வருவது.

''நீரானது எந்த நிலத்துடன் சேர்கின்றதோ அந்த நிலத்தின் தன்மையைப்பெற்றுத் தன் இயல்பிலிருந்து முற்றிலும் மாறிவிடும். அதுபோல மக்களுக்கும், அவர்கள் எந்த இனத்தாருடன் சேர்கின்றனரோ, அந்த இனத்தாரின் தன்மைக்கு ஏற்ற அறிவே ஏற்படும்'' என்பது இதன் கருத்து.

நீருக்கு நிறமும், சுவையும் இயல்பாக இல்லை. எனினும், செம்மண் நிலத்தில் விழுந்த நீர், செந்நிறமாகவும், கரிசல் மண் நிலத்தில் விழுந்த நீர் சற்றுக் கருமை நிறமாகவும் மாறிவிடும். அது மட்டுமல்ல, அந்த மண்ணின் சுவைக்கும், மணத்திற்கும் ஏற்பத் தான் மாறிவிடும். சுக்காம் பாறையில் விழுந்த நீர் அந்தத் தன்மையைப் பெற்று அந்நீரை யுண்பார்க்கு வெப்பத்தையும், நீர்க்கடுப்பையும் உண்டு பண்ணுவதை நாம் அறிவோம். அதுபோலவே பொதுவாக, மனிதர்கள் யாருடன் சேர்கின்றார்களோ, அவர்களின் இயல்பைப் பெறுவார்கள். நல்லவர்களோடு சேர்ந்தால் நல்லியல்புகள் பெற்றுத் திகழ்வார்கள் — கயவர்களோடு சேர்ந்தால் கயவர்களாக — கயமைத் தன்மை பெற்று விளங்குவர். சிற்றினத்தாரோடு சேர்ந்தாலும், அவ்வினத்தின் இயல்பைப் பெறாமல், தன்னியல்பு குன்றாமல் விளங்குகின்ற சிலர், இதற்கு விதி விலக்காவார்கள். இத்தகையவர்கள் அருகியே காணப்படுவர். நிலத்தையும் நீரையும் நமக்குக் காட்டி, 'மனிதா! சேரக் கூடாதவர்களோடு—சிற்றினத்தாரோடு சேராதே!' என்று நிலத்தையும் நீரையும் காட்டி எச்சரிக்கிறார் திருவள்ளுவர்

அடுத்து, இதே உவமையைக் காட்டி, ''ஊடலுவகை'' என்னும் அதிகாரத்தில் ஓர் அருமையான உண்மையை உணர்த்துகிறார்.

**''புலத்தலின் புத்தேள்நா டுண்டோ நிலத்தொடு நீரியைந் தன்னா ரகத்து''**

என்பது குறட்பா.

''நிலத்தோடு நீர் கலந்தாற் போல ஒற்றுமையுடைய காதலிக்கு ஊடுதலைவிட இன்பம் தருவது எந்த உலகத்திலும் இல்லை'' என்பது இதன் கருத்து.

காதல் உலகில், அன்புடைய நெஞ்சங்கள் கலத்தலினை—இணைவதனைச் செம்புலப் பெயல் நீருக்கு ஒப்பிட்டுக் காட்டினர். 'செம்புலப் பெயல்நீர்' என்ற சிறந்த உவமையால் பெயர் பெற்ற 'செம்புலப் பெயல் நீரார்' என்னும் புலவர். செம்மண் நிலத்திலே விழுந்த நீர் தன்னியல்பு திரிந்து அம்மண்ணோடு இரண்டறக் கலப்பது போல அன்புடைய காதலர் நெஞ்சங்கள் இணைந்து — பிணைந்த உள்ளங்களிடையே பிணக்குகள் உறுவதில்லை — இன்பம் மேலும் பெருகுவதற்கு அந்தச் சிறு பிணக்கும் கருவியாகிறது.

இக்குறட்பா காதலியின் கூற்றாக அமைந்துள்ளது.

''நிலத்தோடு இயைந்த நீர் அந்த நிலத்தின் இயல்பாகவே கலந்தாற்போன்று அன்பினாற் கலந்து இருக்கின்றோம். என்னோடு இணைந்து கலந்துவிட்ட காதலரும் என்னியல்பாகவே மாறிவிட்டார். எனவே, அத்தகைய காதலரோடு நான் ஊடுவதால் பேரின்பமே பெறுகின்றேன். அப்படி நான் பெறுகின்ற இன்பத்தைப் போல இன்பந் தரும் உலகம் வேறில்லை. ஆம்! தேவருலகமும் அத்தகைய இன்பமுடையதோ! இல்லை.'' என்கிறாள் அவள். நிலத்தொடு இயைந்த நீரையும் காதலரின் அன்புள்ளங்களையும் ஒப்பிட்டுக் காட்டுவது எவ்வளவு சிறப்பாக அமைந்துள்ளன!

* * *

அடுத்து,

ஒருவருக்கு உகந்த இடம் இன்னொருவருக்கு உகந்ததாக இராது என்ற உண்மையை உணர்த்த நிலத்தில் ஓடும் நெடுந்தேரையும், கடலில் ஓடும் கப்பலையும் காட்டுகிறார்.

**''கடலோடா கால்வல் நெடுந்தேர்; கடலோடும் நாவாயும் ஓடா நிலத்து''**

என்பது 'இடனறிதல்' என்னும் அதிகாரத் தலைப்பின் கீழ் வரும் குறட்பா.

''வலிய உருளைகளையுடைய நெடுந்தேர்கள், நிலத்தில் மட்டுமே ஓடக்கூடியன; பெரிய கப்பல்கள் கடலில் மட்டுமே ஓடக்கூடியன. நிலத்திலே ஓடும் தேர் கடலிலே ஓடாது — கடலில் ஓடும் கப்பல் நிலத்தில் ஓடமாட்டாது'' என்பது குறட்பாவின் கருத்து.

''ஒவ்வொருவருக்கும் உரிய இடமுண்டு. ஒருவர் இடம் பிறிதொருவர்க்கு உகந்ததாக இராது' என்பதை யுணர்த்த நிலத்திலோடும் பெருந் தேரையும், கடலில் ஓடும் பெருங் கப்பலையும் காட்டி, அவ்வவற்றிற்கு உரிய இடத்திலேயே அவையவை செல்லும் என்று கூறியிருப்பது பெரிதும் நயமுடையதாகும்.

அடுத்து, கண் கண்ணோட்டத்திற்குரியது; கண்ணோட்டத்திற்குரிய கண் பெற்றிருக்கும்

மனிதன், தாட்சண்யம் காட்டுபவனாக இருக்க வேண்டும் என்ற உண்மையை வலியுறுத்த மண்ணோடு பொருந்தியிருக்கின்ற மரத்தைக் காட்டி, நீ தாட்சண்யம் இல்லாதவனாக இருந்தால் உன் கண்ணுக்கும் மண்ணோடு பொருந்திய மரத்தின் கணுவுக்கும் வேறுபாடில்லை. இரண்டும் ஒன்றுதான் என்கிறார் திருவள்ளுவர்.

**"மண்ணோடு இயைந்த மரத்தனையர் கண்ணோடு இயைந்துகண் ஓடா தவர்.**

என்பது குறட்பா. இது ''கண்ணோட்டம்'' என்னும் அதிகாரத் தலைப்பின் கீழ் வருவது :

''கண்ணோட்டத்திற்குரிய கண்ணைப் பெற்றிருந்தும் அதற்குரிய தாட்சண்யம் அல்லது கண்ணோட்டம் இல்லாதவர் மண்ணோடு பொருந்தியிருக்கிற மரத்திற்குச் சமம்'' என்பது குறட்பாவின் கருத்து.

அருள் புரிவதற்கு—அன்பு காட்டுதற்கு வாயிலாக இருப்பன கண்கள். கண்களுக்கு அணிகலம் அன்பு காட்டுவதும்—அருள் புரிவதுமேயாகும். இப்பண்புகள் இவ்வியல்புகள் இல்லையானால் அவை, மண்ணோடு பொருந்தியிருக்கிற மரத்தின் கணுக்கள் போன்றனவேயாகும்! மரத்தின் கணுக்கள் தோற்றத்தால் கண்கள் போன்று விளங்கும். எனினும் அவற்றிற்குப் பார்வையில்லை—அருள்புரியும் இயல்பில்லை—அன்பு காட்டும் பண்பில்லை . கணுக்களைத் தன்னகத்தே கொண்டு மண்ணகத்தே பொருந்தியிருக்கின்ற மரமும், அருள்புரியும் இயல்பில்லாத, அன்பு காட்டும் பண்பில்லாத கண்களையுடைய மனிதனும் ஒன்றுதான் ! இரண்டிற்கும் வேறுபாடு இல்லை. மண்ணோடு பொருந்தியிருக்கிற மரம் மண்ணிலுள்ள ஈரத்தையும், பிற சத்துக்களையும் உறிஞ்சி வளர்கிறது. கண்ணோட்டமில்லாத கண்களைப் பெற்று நடமாடுகிற மனிதன், மனித சமுதாயத்தின் உழைப்பையும் பயனையும் அபகரித்து யாருக்கும் பயனில்லாமல் வாழ்கின்றான்.

* * *

அடுத்து, மனித வாழ்வுக்குக் கல்வி எத்துணை இன்றியமையாதது — எத்துணைச் சிறப்புடையது என்பதனை விளக்கப் புகுந்த திருவள்ளுவர், கல்லாதாரை—கல்வியறிவில்லாதாரை விளையாத—பயன் தராத களர் நிலத்திற்கு ஒப்பிட்டுள்ளார்.

களர் நிலம், பார்வைக்கு நிலம் போலத் தோற்றமளிக்குமே தவிர, நிலம் தரும் பயனைத் தராது ; அது மட்டுமல்ல—விளைநிலத்தை மக்கள் உழுது, பண்படுத்தி, வித்தி, நீர்ப் பாய்ச்சிப் பேணிப் பாதுகாப்பர் ; களர் நிலத்தை மக்கள் அவ்வாறு பேணிப் பாதுகாக்க மாட்டார் — எனவே, களர் நிலம் பேணப்படாமல் சீர்கேடுமேயல்லால் சீர் படாது. இவ்வகையால், களர் நிலம் தனக்கும் பயன்படாமல் — பிறர்க்கும் பயன்படாமல் கெட்டழிந்து போகும். அதுபோலவே, கல்லாதவர், மனிதர் போலத் தோற்றமளிப்பாரே தவிர மனிதராக மாட்டார் ; அவர், தமக்கும் பயன்படார் — பிறர்க்கும் பயன் படார். எனவே, மற்றவர்கள் அவரை மதிக்க மாட்டார். கல்லாதவர், விளைவில்லாக் களர் நிலத்தோடொப்பர் என்பதனை,

**"உளரென்னும் மாத்திரையர் அல்லார் பயவாக் களரனையர் கல்லா தவர்"**

என்னும் குறட்பாவால் தெளிவுறுத்துகிறார் வள்ளுவப் பெருந்தகை.

அடுத்து, நிலத்தை இல்லாளாகவும், நிலத்துக்குரியவனைக் கணவனாகவும் கற்பனை செய்திருப்பது வியந்து பாராட்டத் தக்கதாகும்.

''நிலத்திற்கு உரியவன் உரியகாலங்களில் அவ்வப்போது சென்று நிலத்தைப் பார்வையிட வேண்டும்; அவ்வாறில்லையானால், அவனுடைய அன்புடன் கூடிய பராமரிப்பில்லாத அவன் மனைவியைப் போல அந்த நிலமும் வெறுத்து அவனோடு பிணங்கிவிடும்.'' என்பது குறட்பாவின் கருத்து.

கணவன், மனைவியிடத்து அன்புடையவனாக இருத்தல் வேண்டும். அவளை அன்போடு —ஆதரவோடு பராமரித்து ஆவன செய்ய வேண்டும். இல்லையானால், அவன் அவளுடைய அன்பையோ, அவளிடமிருந்து இன்பத்தையோ—உரிய பயனையோ எப்படிப் பெறமுடியும்? அவளும் அவனோடு பிணங்கி, உரிய பயனைக் கொடுக்காமல் நலங்குன்றிப் போவாள்! அது போலவே, நிலத்திற்கு உரியவன் உரிய காலங்களில் எல்லாம் சென்று நிலத்தைப் பார்வையிட்டுக் கவனித்து ஆவன செய்ய வேண்டும். இல்லையானால், அவனோடு பிணங்கி உரிய விளைவையும், பயனையும் தராமல் வளங்குன்றிப் போகும்! நிலத்தைக் கவனித்து உரிய செயல்களைச் செய்யாத நிலச் சொந்தக்காரனும், மனைவியை அன்பொடு கவனித்துப் பராமரிக்காத கணவனும் பெறத் தக்க பயனைப் பெறாமல் போவார்கள். கணவனின் அன்போடு கூடிய பராமரிப்பில்லாத மனைவியும், நில உரிமையாளனின் கவனிப்பில்லாத நிலமகளும், உரிய பயனைக் கொடுக்காமல் நலங்குன்றி, வளங்கெட்டுப்போவர். இக் கருத்தினை,

**"செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து இல்லாளின் ஊடி விடும்"**

என்னும் குறட்பா நயமுற விளக்குகிறது.

இனி, 'மண்ணுக்குப் பாரமாக இருக்கிறார்கள்' என்று சிலரை வள்ளுவர் சுட்டிக் காட்டுகிறார். அப்படிப்பட்ட சிலரின் உடம்பை—பிண்டத்தைச்—சுமக்கும் நிலம் விளைச்சல் குன்றிக் கெடும் என்றும் கூறுகிறார்.

**"வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா யாக்கை பொறுத்த நிலம்"**

என்பது குறட்பா.

இது 'புகழ் என்னும் அதிகாரத் தலைப் பின்கீழ் வருவது.

''புகழில்லாத உடம்பைச் சுமந்த நிலமானது, குற்றமற்ற—வளப்பத்தையுடைய விளைச்சல் இல்லாமல், குன்றிக் கெடும்'' என்பது குறட்பாவின் கருத்து.

மனிதன் புகழோடு வாழ வேண்டும் என்பது வள்ளுவர் கருத்து. 'வசையொழிய




வாழ்பவரே வாழ்பவர் எனப்படுவர் ; இசை யொழிய வாழ்பவர் வாழாதவர்—இறந்தவர்' என்று பேசுகின்ருர். மனிதன் இசை யோடு—புகழோடு வாழ வேண்டும் என்று கருதுகிற வள்ளுவர்—புகழில்லாத உடம்பைச் சுமந்த நிலம் விளேச்சல் குன்றிக் கெடும் என் கிருர். புகழ் இல்லாதவர்கள் என்று கூடக் கூருமல், 'புகழில்லாத உடம்பு' என்று கூறு வது, புகழில்லாத வாழ்வு வாழ்கின்றவர்கள் மீது அவருக்குள்ள அளவு கடந்த சினத்தைக் காட்டுகிறது. 'மனிதா நீ பூமிக்குப் பாரமாக இராதே ; புகழோடு வாழ்க!' என்று அவர் வலியுறுத்துகின்ருர். புகழ் இல்லாத வாழ்வு டையவளுக இருந்தால் உன்னேச் சுமக்கும் இந்த நிலம் வளம் குன்றிப் போகும்—விளேச்சல் இல்லாமல் போகும் என்று எச்சரிக்கின்ருர்.

* * *

அடுத்து, சான்ருேர் தம் நிலேயிலிருந்து வழுவக் கூடாது என்பதை வலியுறுத்த,

**"சான்றவர் சான்ருண்மை குன்றின் இருநிலந்தான்
தாங்காது மன்னே பொறை"**

என்கிருர்.

''பல நற்குணங்களாலும் நிறைந்த சான் ருேர் தம் தன்மையிலிருந்து குன்றுவராளுல் இந்தப் பெரிய உலகமானது தன்னுடைய பாரத்தைத் தாங்க முடியாத தாகிவிடும்'' என்பது குறட்பாவின் கருத்து.

சான்ருேர் தம் சான்ருண்மையிலிருந்து ஒரு சிறிதும் தவறக்கூடாது. இந்த உலகம் பெரியதுதான்! எனினும், அவர் தம் தன்மை யிலிருந்து குன்றிஞல், இந்த உலகம் அவர்தம் பாரத்தையே தாங்க முடியாமல்அழிந்துவிடும். சான்ருேர் தம் தன்மையிலிருந்து தவறிஞல், இந்த உலகம் அழிவதற்கு அவர்களே காரண மாவார்கள் என்னும் கருத்தை உள்ளடக்கி யுள்ளது.

இறுதியாக,

**"இலமென் றசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்"**

என்னும் குறட்பாவைப் பார்ப்போம்.

இக்குறட்பா 'உழவு' என்னும் அதிகாரத் தலேப்பின் கீழ் வருவது. ''எம்மிடம் சிறிதும் பொருள் இல்லே என்று வயலேக் கவனிக்காமல் சோம்பலாக இருப்பவனேக் கண்டால் நிலம் என்னும் நல்லாள் அவனுடைய அறிவின் மையை எண்ணி ஏளனமாகத் தன்னுள் சிரிப் பாள்'' என்பது இக்குறட்பாவின் கருத்து.

நிலம் இருக்கிறது. அது பரந்து விரிந்து கிடக்கிறது. எத்தனே எத்தனேயோ செல்வங் களேத் தன்னுள்ளே கொண்டு கிடக்கிறது. ''ஏ! மனிதா! இதோ பார்! எண்ணற்ற செல் வங்களே என்னுள்ளே கொண்டு நான் இருக் கிறேன். நீ, 'என்னிடம் எதுவுமில்லேயே, நான் என்ன செய்வேன்' என்று கூறிச் சோம்பிக் கிடக்கிருயே! இது எவ்வளவு அறி வீனம். பயிரிடு! பாடுபடு! உனக்கு வேண்டி யதையெல்லாம் நான் தருகிறேன்' என்று கூறுவது போல, சோம்பேறியைப் பார்த்துச் சொல்கிறதா? இல்லே. சோம்பேறியைப் பார்த்து, ஏளனமாகச் சிரிக்கிறது!' வள்ளுவர் கூறுவது போல நிலமெனும் நல்லாள் நகு கின்ருள்!

எனவேதான் வள்ளுவர் கூறுகின்ருர் :

''என்னிடம் என்ன இருக்கிறது? நான் என்ன செய்ய முடியும்?'' என்று வாளாவிருக் கும் சோம்பேறியே! உழுகிற காலத்தில் ஊர் சுற்றித் திரிந்து விட்டு அறுவடைக் காலத்தில் அரிவாளேத் தூக்கிக் கொண்டு வந்தால் என்ன பயன்? நீ சோம்பேறியாயிராதே! உன் சோம் பலே விடு! எண்ணற்ற செல்வங்களேத் தன் னுள்ளே கொண்டு, தன்னே அணுகுவோரை வாழ வைக்கும் திறன் படைத்த நிலம் இருக் கிறது! நீ நிலத்தில் இறங்கிப் பாடுபடு! நீ உனக்கு வேண்டியு அனேத்தும் பெறுவாய் ! வறுமையிலிருந்து விடுதலே பெறுவாய்!''

மண் மாண்புடையது; மனித குலத்திற்கு வாழ்வூட்டுவது; பல்வகை வளமும் மல்கிச் சிறந்தது; பரந்த இம் மண்ணகத்தை வாழ வைப்பது ; வாழும் மனித சமுதாயத்திற்குப் பல்வேறு படிப்பினேகளேக் கற்றுத் தருவது; மனித குலத்திற்கு இறுதிப் புகலிடம் வழங்கு வது. ''வாழிய வள்ளுவர்! வாழ்க இம்மண் ணகம்'' என்று நாமும் திருவள்ளுவரை வியந்து பாராட்டி, வள்ளுவர் கருத்துக்களே உள்ளத்தே கொண்டு வையத்தே வாழ்வாங்கு வ்ாழ்ந்து சிறப்போமாக!

**—சாமி பழனியப்பன்.**



கிராம வளர்ச்சியில்
பத்தாண்டுச் சாதனை—2

# இந்தியக் கிராமங்களுக்கு மின் வசதி!

இந்தியக் கிராமங்களுக்கு மின்வசதி அளிக்கும் பணியில் மாபெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மின்வசதி பெற்ற கிராமங்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 4 மடங்காக அதிகரித்துள்ளது. 1966-ல் மொத்தம் 45 ஆயிரம்கிராமங்கள் தான் மின்வசதி பெற்றிருந்தன. ஆனால் தற்போது அவற்றின் எண்ணிக்கை 1 இலட்சத்து 70 ஆயிரமாக அதிகரித்துள்ளது. பத்தாண்டுகளுக்கு முன் 5 இலட்சம் பம்பு செட்டுகளுக்கு மட்டுமே மின்விசை கிடைத்து வந்தது. ஆனால் தற்போது 27 இலட்சம் பம்பு செட்டுகளுக்கு மின் விசை வழங்கப்பட்டு வருகிறது. **5-வது திட்டக் கால இறுதிக்குள் 2.50 இலட்சம் கிராமங்களுக்கு மின்வசதி அளிக்கப்படும் 40 இலட்சம் பம்பு செட்டுகள் மின்விசை பெறும்.**

இந்தியாவின் கிராமப் பொருளாதாரம் சிறக்க மின் வசதி சிறப்பான பங்காற்றி வருகிறது. கிராமப்புறங்களின் முதுகெலும்பு விவசாயத்துறை; அது ஒரு தொழில் துறையாகும். ஏனெனில் உற்பத்தி அதிகரிப்புக்கு மின் சக்தி தேவைப்படுகிறது. நாட்டில் சுமார் 3.5 கோடி எக்டேர் நிலப் பரப்புக்குப் பாசன வசதி அளிக்கத் தேவைப்படும் நிலத்தடி நீர் உள்ளது. இது வரை இதில் பாதி அளவு நீரைத்தான் நாம் பயன்படுத்தி இருக்கிறோம். விவசாயத் துறைக்கு நிலத்தடி நீரைப் பயன்படுத்துவதில் எதிர்காலத்தில் ஏராளமான வாய்ப்புகள் இருக்கும். இரண்டாவதாக, கிராமப்புறங்களில் சிறு தொழில் நடத்தவும் மின்வசதி தேவைப்படுகிறது.

நாட்டில் உள்ள மின்வசதி பெற்ற கிராமங்களின் எண்ணிக்கை, மொத்த கிராமங்களில் 30 சதவிகிதமாகும். சில மாநிலங்களில் உள்ள எல்லா கிராமங்களுக்கும் மின்வசதி அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் மற்ற மாநிலங்களில் இது 30 சதவிகிதத்திற்கும் குறைவாகும். சில பகுதிகளில் அது கிட்டத்தட்ட 10 சதவிகிதமாக உள்ளது. இந்த ஏற்றத்தாழ்வைப் போக்க ஐந்தாவது திட்டத்தில் மின்வசதி திட்டத்தில் புதிய நோக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

கிராமப்புற மின்வசதிக்காக குறைந்தபட்சத் தேவைத்திட்டம் ஒன்று வகுக்கப்பட்டது. இத்திட்டத்தின்படி மின்வசதி பெறுவதில் பின்தங்கிய மாநிலங்களையும் முன்னுக்குக் கொண்டு வந்து மொத்தத்தில் குறைந்த பட்சம் 30 முதல் 40 சதவிகிதக் கிராமங்கள் மின் வசதி பெற நிதி ஒதுக்கப்படும்.

அரிஜனக் குடியிருப்புப் பகுதிகளில் மின்வசதி அளிப்பதிலும் குறை உள்ளது. கிராமங்களுக்கு மின்வசதி அளிப்பதில் பெரும் அளவுக்கு நிதி உதவி வழங்கி வரும் கிராம மின்வசதிக் கார்ப்பொரேஷன், ஏற்கெனவே மின்வசதி பெற்ற கிராமங்களுக்கு அருகாமையில் உள்ள அரிசனக் குடியிருப்புப் பகுதிகளுக்கு தெரு விளக்குப் போடுவதற்காக மாநில மின்வாரியங்களுக்குச் சலுகை அடிப்படையில் கடனுதவி வழங்கும் திட்டமொன்றை வகுத்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் 4,126 அரிஜனக் குடியிருப்பு பகுதிகள் பயனடைந்துள்ளன என்பது அண்மைக்கால அறிக்கைகளிலிருந்து தெரிய வருகிறது.

கடந்த பத்தாண்டுகளில்கிராம மின்வசதி திட்டத்திற்காக ஒதுக்கப்படும் நிதி அளவு கணிசமாக அதிகரித்துள்ளது. ஐந்தாவது திட்டத்தில் இத்திட்டத்திற்காக கிட்டத்தட்ட ரூ. 1,100 கோடி ஒதுக்கப்பட்டது. 4-வது திட்ட காலத்தில் ரூ. 445 கோடி நிதி தான் ஒதுக்கப்பட்டது.

கிராமப்புறங்களுக்கு மின் வசதி அளிக்கும் பணியைத்

துரிதப்படுத்துவதற்காக, 1969-ஆம் ஆண்டில் கிராம மின்வசதிக் கார்ப்பொரேஷன் ஏற்படுத்தப்பட்டது. கிராம மின்வசதிக் கூட்டுறவுகளை ஊக்குவிப்பதற்காகவும், கிராம மின்வசதி திட்டங்களுக்கு நிதி உதவி அளிப்பதற்காகவும், இந்தக் கார்ப்பொரேஷன் அமைக்கப்பட்டது. மின்வசதி திட்டங்கள் தகுந்த முறையில் வகுக்கப்பட்டு, அத்திட்டங்கள் மற்ற அபிவிருத்தி திட்டங்களுடன் சிறந்த முறையில் ஒருங்கிணைக்கப்படுவதற்கு வகை செய்வதுஇக்கார்ப்பொரேஷனின் முக்கியப் பொறுப்பாகும். விவசாய உற்பத்தி, தொழில் உற்பத்தி அதிகரிக்கவும் இது உதவுகிறது.

கிராம மின்வசதிக் கார்ப்பொரேஷன், நான்காவது திட்ட காலத்தில் மொத்த திட்ட ஒதுக்கீட்டில் மூன்றில் ஒரு பகுதியை மட்டுமே கிராம மின்வசதிக்காக ஒதுக்கியது. ஆனால் ஐந்தாவது திட்ட காலத்தில், மொத்த திட்ட ஒதுக்கீட்டில் கிராம மின்வசதி திட்டங்களுக்கு மூன்றில் இரண்டு பாகத்தை இக்கார்ப்பொரேஷன் ஒதுக்கியுள்ளது.

இதுவரை இக்கார்ப்பொரேஷன் 21 மாநிலங்களில் ஒரு இலட்சம் கிராமங்களுக்கு மின்வசதி வழங்குவதற்காக 1,216 திட்டங்களுக்கு ரூ. 547 கோடி கடனுதவி வழங்க அங்கீகாரம் அளித்துள்ளது. இத்திட்டங்கள் யாவும் முடிவடைந்தவுடன், 7.50 இலட்சம் பம்பு செட்டுகளுக்கு மின் விசை கிடைக்கும். விவசாய அடிப்படையில் அமைந்த 1.20 இலட்சம் தொழிற்சாலைகளுக்கு மின் இணைப்பு வழங்கப்படும்.

கிராமங்களுக்கு மின்வசதி அளிப்பதற்குப் பெருமளவுக்கு மூலதன நிதி தேவை. இதை மீண்டும் பெற, சிறிது காலம் பிடிக்கும். மூலதனமிடுவதில் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பது, திறமையுடன் திட்டங்களைச் செயல்படுத்துவது ஆகியவை முக்கியமாகும். இத் திட்டங்களுக்கானப் பொருள்களின் தரத்தை நிர்ணயிப்பது; கட்டுமானப் பணிகளைச் செய்வது ஆகியவற்றிற்காகும் செலவில் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். தேவைப்படும் பொருள்களிலும், திட்டக் கட்டுமான பணியிலும் தரங்களை இக்கார்ப்பொரேஷன் நிர்ணயிள்ளது.

கடந்த சில ஆண்டுகளில் கிராமப்புற மின் விநியோக கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தியது, அன்றாட மின்விநியோக அலுவலை நிர்வகிப்பதில் பண்டம் நுகர்வோரைச் சிறந்த முறையில் பங்கு கொள்ளச் செய்வதற்கு வழி வகுத்துள்ளது. இந்த நோக்கத்துடன் மத்திய அரசு 1969-இல் 5 முன்னோடி கிராம மின்வசதிக் கூட்டுறவுகளை ஏற்படுத்தும் பணியைத் துவக்கியது. இந்த பணிகளுக்கு இக்கார்ப்பொரேஷன் நிதி உதவி அளித்தது. இந்த முன்னோடி திட்டத்தையடுத்து மேலும் மூன்று கூட்டுறவுகள் அமைக்கப்பட்டன. மேலும் இரண்டு ஏற்கெனவே பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றின் திட்ட அறிக்கைகள் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றன. அடுத்த சில ஆண்டுகளில்,மேலும் அதிக எண்ணிக்கையில் கூட்டுறவுகள் ஏற்படுத்தப்படும்.

கிராம வளர்ச்சிக்கான அடிப்படை வசதிகளில் மின்வசதியும் ஒன்றாகும். கிராமங்களில் அதிக அளவுக்கு மின்சாரம் பயன்படுத்தப்பட்டால், விவசாய உற்பத்தியும், தொழில் உற்பத்தியும் உயரும். கிராமங்களில் வேலை வாய்ப்பும் அதிகரிக்கும். வேலை வாய்ப்புக்காக கிராமங்களிலிருந்து நகரங்களுக்கு செல்வோரின் எண்ணிக்கையும் குறையும். எனவே, கிராமங்களுக்கு மின்வசதி அளிப்பதில் இந்திய அரசு முனைப்பான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது.

## பேரம்பூர் இணைப்புப் பெட்டித் தொழிற்சாலையின் சாதனை!

**பேரம்பூர்** இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை, ரயில் பெட்டி உற்பத்தியில் 1975-76-ஆம் ஆண்டின் குறியளவைத் தாண்டியுள்ளது.

1975-76-இல் 477 ரயில் பெட்டி மேற்கூடுகளைத் தயாரிக்க வேண்டுமென்ற குறியளவு, ஒரு மாதத்திற்கு முன்னதாக-பிப்ரவரி மாதத்திலேயே-அடையப்பட்டு விட்டது.

இத்தொழிற்சாலை பிப்ரவரி வரை 472 ரயில் பெட்டிகளில் மின் விளக்குகள், விசிறிகள், இருக்கைகள் ஆகியவற்றை பொருத்தியுள்ளது. முழு ஆண்டில் 477 ரயில் பெட்டிகளில் இத்தகையச் சாதனங்களைப் பொருத்த வேண்டுமென்பது குறியளவு.

பிப்ரவரியில், ரயில் பெட்டிக்கான 55 மேற்கூடுகளை இத்தொழிற்சாலை தயாரித்துள்ளது. குறியளவு 39 மேற்கூடுகள் தான். இந்த மாதத்தில் தயாரிக்கப்பட்ட மேற்கூடுகளில் 6, டான்சானியாவுக்கு ஏற்றுமதி செய்வதற்காக அமைந்தவையாகும். இத்தொழிற்சாலை 17 ரயில் பெட்டிகளை அந்நாட்டிற்கு ஏற்றுமதி செய்ய வேண்டும். இதுவரை 10 மேற்கூடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. பிப்ரவரியில் இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை 38 ரயில் பெட்டிகளைத் தயாரித்துள்ளது.

# தஞ்சை மாவட்டத்தில் பழுப்பு நிலக்கரியும் பெட்ரோலும்!



"தஞ்சை மாவட்டத்தில் மாயவரம் அருகே திருமங்கலம் என்னுமிடத்தில் பழுப்பு நிலக்கரி கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

''எண்ணெய், எரிவாயுக் கமிஷன் இதைக் கண்டு பிடித்துள்ளது. இக்கண்டு பிடிப்பு மூலம் பாண்டிச்சேரியிலுள்ள பாகூரிலிருந்து தெற்கே கடலோரமாக பழுப்பு நிலக்கரிப் படிவங்கள் அமைந்திருக்கலாம் என்பதற்கான வாய்ப்புகள் உள்ளன.

''தமிழ் நாட்டில் ஏற்கெனவே நெய்வேலியில் பழுப்பு நிலக்கரி வெட்டி எடுக்கப்பட்டு வருகிறது. நெய்வேலிப் பகுதியிலும் பழுப்பு நிலக்கரி பற்றிய ஆராய்வுகள் தீவிரமாக்கப் பட வேண்டும். ஏனெனில் அங்கு மேலும் அதிக அளவில் பழுப்பு நிலக்கரியும், நிலத்தடி நீரும் இருப்பதாக பூர்வாங்க ஆராய்வுகள் காட்டுகின்றன. நெய்வேலியில் சுமார் 259 சதுர கிலோமீட்டர் பகுதியில் சுமார் 200 கோடி டன் பழுப்பு நிலக்கரிப் படிவுகள் இருப்பதாக முந்தைய மதிப்பீடுகள் காட்டின. ஆனல் அங்கு 480 சதுர கிலோ மீட்டரில் சுமார் 330 கோடி டன் பழுப்பு நிலக்கரி உள்ளதாக இப்போதைய மதிப்பீடுகள் காட்டுகின்றன.

''காவிரி டெல்டாப் பகுதிக்குக் கிழக்கே கடலுக்கடியில் பெட்ரோலிய எண்ணெய் ஊற்றுக்கள் இருப்பதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளன.

## பெட்ரோல் கிடைக்குமா ?

''தமிழ் நாட்டில் நிலத்துக்கடியில் மிகத் தொன்மையான பாறைகளில் பெட்ரோலிய எண்ணெய் ஊற்றுக்கள் உள்ளதா என்று ஆராய அவசியம் உள்ளது என்று தமிழ்நாட்டில் 'ஓ.என்.ஜி.சி. நடத்திய ஆய்வுகள் காட்டுகின்றன. மேற்கு ஆஸ்திரேலியாவில் இதே வகையான பாறைகளில் எண்ணெய் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது என்பதால் இப்பகுதியும் மிக முக்கியமானது என்று நிலஇயல் பௌதிக நிபுணர்கள் கருதுகின்றனர்.

''காவிரி வடிநிலப் பெரும் பகுதியில் — மேற்கு தஞ்சாவூர் பகுதியில்—புதுப்பட்டிக்கு அருகாமையில் எண்ணெய் கிடைக்கும் வாய்ப்புள்ள 2 பகுதிகளும், இராமநாதபுரம் பகுதியில் உச்சிப்புளி அருகில் எண்ணெய் கிடைக்கும் வாய்ப்புள்ள ஒரு பகுதியும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

''பரங்கிப்பேட்டையிலிருந்து கடலூர் வரை கடலுக்கு அடியில் எண்ணெய் ஊற்றுக்கள் இருக்கலாம் என்று ஆய்வுகள் காட்டுகின்றன. ''அஸ்மாரா'' எண்ணெய் கம்பெனிகள் 'பாக் ஜலசந்தி'யில் கடலடி எண்ணெய் ஊற்றுக்கள் பற்றி ஆய்வு நடத்தும் போது மேலும் தகவல்கள் தெரிய வரலாம்.

''காவிரி, படுகைப் பகுதியில் எண்ணெய் வர்த்தக ரீதியில் கிடைக்கவில்லை என்ருலும், எண்ணெய் கிடைக்கும் வாய்ப்புள்ள இடங்களை ஆராய எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மன்னர்குடிக்குக் கிழக்கே கடலடிப் பகுதிகள் எண்ணெய் ஆராய்ச்சிக்கு உகந்தவை. இங்கே, எண்ணெய் ஊற்றுக்கள் இருக்கலாம் என்று கருதப்படுகிறது. மன்னர்குடி—திருத்துறைப்பூண்டி இடையிலும், மன்னர்குடி—மாயூரம் இடையிலும் எண்ணெய் ஆராய்ச்சிக்கான சோதனைக் கிணறுகள் தோண்டப்படும்.

## உருக்குத் தயாரிப்புக்கு உதவும் சுண்ணும்புக்கல் :

''திருச்சி அருகே அரியலூரில் சுண்ணும்புக் கல் படிவுகள் கண்டு பிடிக்கப்பட்டு உள்ளன. இங்கு 2 கோடியே 80 இலட்சம் டன் சுண்ணும்புக் கல் இருக்கலாம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இங்குக் கிடைக்கும் சுண்ணும்புக் கல் ஊதுலை, உருக்குத் தயாரிப்பு ஆகியவற்றுக்கான தரம் கொண்டது.

''தமிழ் நாட்டின் நிலத்தடிப் படிவுகளில் சுண்ணும்புக் கல், பல்வேறு களிமண், பழுப்பு நிலக்கரி ஆகியவை இருப்பதுடன் மிக அரிதான பெட்ரோலியம், யுரேனியம், பொட்டாஷ், பாஸ்பரைட்ஸ் ஆகியவை இருப்பதற்கான வாய்ப்புகளும் உள்ளன. முதலில் நினைக்கப்பட்டதை விட இப்படிமானங்களின் கனம் அதிகமாகவும், நில இயல் பௌதிக ரீதியில் இவை சிக்கலாகவும் உள்ளன. எனவே, நிலத்தடிப் படிவுகள் பற்றி பெரிய அளவில் விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.



## நெய்வேலி நில நீர் :

''நெய்வேலியில் மேலும் அதிக அளவில் நில நீர் கிடைப்பதற்கான வாய்ப்புகள் உள்ளது என்பது மட்டுமல்லாமல் திருவான்மியூர் கோவளம் பகுதியிலும், ஆளியாறு—கோத்தலையாறு பகுதியிலும் நில நீர் வளங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பருவ மழை தவறினால் தமிழ் நாட்டில் தண்ணீர் கிடைப்பது அரிதாகிவிடுகிறது என்பதால் இப் பகுதிகளில் நில நீர் வளங்களைப் பயன்படுத்துவது அவசியமாகும்.''

''18-வது வட அட்சரேகைக்குத் தெற்கே கரையோரக் கனிவளப் படிவுகள்'' என்னும் பொருள் பற்றி எண்ணெய் எரி வாயுக் கமிஷனும் (ஓ.என்.ஜி.சி.), இந்திய நில இயல் ஆய்வு அமைப்பும் (ஜி.எஸ். ஐ) சென்னையில் நடத்திய 2 நாள் கருத்தரங்கின் முடிவில் இந்தியநில இயல் பௌதீக ஆய்வு துணை தலைமை இயக்குநர் டாக்டர் எம்.பி.என். மூர்த்தி அவர்கள் மேற்கூறியவாறு குறிப்பிட்டுள்ளார்கள்.

# நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம்

''நெய்வேலியில் தற்போது பழுப்பு நிலக்கரி உற்பத்தி 30 இலட்சம் டன்னாக உள்ளது. 1979—80-ஆம் ஆண்டில் இந்த உற்பத்தி 65 இலட்சம் டன்னாக அதிகரிக்கக்கூடும்.

சுரங்கத்தை நவீனப்படுத்துவதற்கும், விரிவுபடுத்துவதற்குமான கருவிகளுக்கு ஏற்கெனவே வழங்குதல் ஆணை கொடுக்கப்பட்டுள்ளது. விரிவுபடுத்தும் பணி 1979-ஆம் ஆண்டில் பூர்த்தியாகும்.

நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் நிதி நிலையானது 1972—73-ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது தற்போது நன்றாக உள்ளது.

1972—73-ஆம் ஆண்டில் நட்டம் ரூ. 12 கோடியாக இருந்தது. 1975 76-ல் இது ரூ. 3 கோடியாகக் குறைந்தது. இந்த நட்டம் மேலும் குறையக்கூடும்.

1976—77-ஆம் ஆண்டில் பழுப்பு நிலக்கரி உற்பத்தி 34 இலட்சம் டன்னாக அதிகரிக்கப்படும். தற்போது தமிழ்நாடு கிரிட்டுக்கு நெய்வேலியில் இருந்து 200 கோடி யூனிட் மின்சாரம் கிடைக்கிறது. இது 1976—77-ல் 220 கோடி யூனிட்டாக உயரும் என்றார்.

இரண்டாவது சுரங்கத்தை வெட்டுவதற்குப் பொருளாதார ரீதியில் கட்டு படியாகக் கூடியதாக இருக்குமா என்பதற்கான அறிக்கை மத்திய அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது சுரங்கத்தை வெட்டுவதற்குத் திருத்தப்பட்ட மதிப்பீடு செலவு ரூபாய் 408 கோடி. மின்சார நிலையத்துக்கு ரூபாய் 260 கோடி. முதலில் இரண்டாவது சுரங்கத்துக்கு மதிப்பிடப்பட்டது ரூ. 168 கோடி. மின் நிலையத்துக்கு ரூ. 260 கோடி.

நெய்வேலியில் மிகப் பெரிய அனல் மின் நிலையத்தை அமைப்பதற்கு, செலவு குறைவாகவே இருக்கும். தமிழ் நாட்டின் மின்சார தேவைகளை இப்பெரிய அனல் மின் நிலையத்தை கொண்டே சமாளிக்க முடியும்.''

இவ்வாறு நெய்வேலி லிக்னைட் (பழுப்பு நிலக்கரி) கார்ப்பரேஷன் தலைவர் திரு. எஸ். யக்ஞேஸ்வரன் அவர்கள் 31—3—'76 அன்று பத்திரிகைச் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.





# மாமல்லபுரத்தில் மற்றுமோர் சுற்றுலா மாளிகை

**மா**மல்லபுரம் கடற்கரைக் கோவிலிலிருந்து சுமார் ஒரு மைல் வடக்கில், தமிழ்நாடு சுற்றுலா வாரியத்தினால் கட்டப்பட்டுள்ள 'நவீனக் குடில்களை'க் குடியரசுத் தலைவர் திரு பக்ருதீன் அலி அகமது அவர்கள் 18—4—'76 அன்று காலை திறந்து வைத்தார்.

அப்பொழுது அவர் பேசுகையில் சுற்றுலாத் துறையின் வசதி வாய்ப்புக்கள், மத்திய தர, ஏழை மக்களுக்குக் கிடைக்கும் வகையில் அத்துறையை மாற்றியமைக்க மத்திய, மாநில அரசுகள் முன் வர வேண்டும். இவ்விஷயத்தில் மத்திய, மாநில அரசுகள் ஒரு கூட்டு முயற்சியில் ஈடுபட்டால் கூட நல்லது'' என்று குடியரசுத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில், தமிழ்நாடு சுற்றுலா வாரியம், வெளிநாட்டுப் பயணிகளைக் கவர்வதற்காக இதுவரை மேற்கொண்டுள்ள பல்வேறு முயற்சிகளைப் பாராட்டினார்.

''உலகிலேயே இரண்டாவது இடத்தை வகிக்கும், மிக நீண்ட கடற்கரையை உடைய தமிழ்நாட்டில், வெளிநாட்டுப் பயணிகளைக் கவரக் கூடிய விதத்தில் இன்னும் பல வசதிகளைச் செய்ய வேண்டும்'' என்று அவர் கூறினார்.

''ஐரோப்பாக் கண்டத்தில் உள்ள பல நாடுகள், தங்கள் வருமானத்திற்குப் பெரும்பாலும் சுற்றுலாத் துறையையே நம்பியுள்ளன. இயற்கை வசதிகள் கூட அந்த நாடுகளுக்கு அதிகம் கிடையாது. ஆனால் இந்தியாவில் இயற்கை அள்ளிக் கொடுத்துள்ள வளங்கள் ஏராளம். ஏன் இவற்றை நாம் முழுமையாகப்பயன்படுத்தி, கொள்ளக் கூடாது'' என்று குடியரசுத் தலைவர் அவர்கள் கேட்டார்.

''கலை நிகழ்ச்சிகள் என்று கூறிக் கொண்டு, வெறும் கிராமிய நடனங்களை மட்டும் நடத்தக் கூடாது என்றும், பல்வேறு விளையாட்டு அரங்கங்களை நிறுவ வேண்டும்'' என்றும் அவர் கூறினார்.

சுமார் ரூபாய் 40 இலட்சம் செலவில் இதே பகுதியில் கட்டப்படவிருக்கும் நவீன ஹோட்டலுக்குக் குடியரசுத் தலைவர் அவர்களால் கடைக்கால் இடப்பட்டது.

ஆரம்பத்தில் ஆளுநரின் ஆலோசகர் திரு ஆர். வி. சுப்ரமணியன் அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.

சென்னை நகரிலிருந்து மாமல்லபுரம் வரையுள்ள கடற்கரைப் பகுதியை அழகு படுத்தும் முயற்சியில், மாநில அரசு ஈடுபட்டு வருகிறது என்று அவர் சொன்னார்.

விழாவிற்குத் தலைமை வகித்து உரையாற்றிய தமிழ்நாடு ஆளுநர் திரு கே. கே. ஷா அவர்கள் சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்காகத் தமிழக அரசு எடுத்து வரும் பல்வேறு நடவடிக்கைகளை விவரித்தார். சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஆலோசனையின் பேரில் உதகமண்டலம், கொடைக்கானல், ஏர்க்காடுபோன்ற கோடை வாசஸ்தலங்கள் மேலும் அழகு படுத்தப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி வாரியத்தின் தலைவர் திரு. சி. ராமச்சந்திரன் நன்றி கூறினார்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி வாரியத்தின் சார்பில், குடியரசுத் தலைவருக்கும், ஆளுநரின் துணைவியாருக்கும் நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டன.

தமிழ்நாடு சுற்றுலா வாரியத்தினால் ''ஜப்பான் விசிறி'' போன்ற வடிவத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 20 நவீனக் குடில்களும் மாமல்லபுரத்தின் அழகைக் காணவரும் சுற்றுலாப் பயணிகளை மகிழ்விக்கும் என்பதில் ஐயமில்லை.



# அம்பத்தூரில் புதிய பால்பண்ணை

''தமிழ் புத்தாண்டு பூத்துள்ள பருவம் இது. மங்கலமான இக் கட்டத்தில் அம்பத்தூரில் இப் புதிய பால் பண்ணையை இன்று தொடங்கி வைப்பது மிகவும் பொருத்தமானதாகும். இந்நன்னாளில் தமிழக மக்களுக்கு என் மனமார்ந்த நல் வாழ்த்துக்களையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

### பால் வெள்ளத் திட்டம்

''சென்னைப் பெருநகரின் பால் தேவைகளை நிறைவு செய்வதில், இப்புதிய பால் பண்ணை மூலம் பெரும் முன்னேற்றம் ஏற்படுமென்று நம்பலாம். நமது நாட்டில் ஆங்காங்கு நிறுவப்படும் பால் பண்ணைகள் தனித்து இயங்குபவை அல்ல; ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தையொட்டி மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளே ஆகும். சிற்றூர்களைச் சார்ந்த 20 இலட்சம் பால் உற்பத்தியாளர்களிடமிருந்து பாலைச் சேகரித்தல்; நமது முக்கிய நகரங்களுக்கு அன்றாடம் 27.5 இலட்சம் லிட்டர் பாலைக் கொண்டு வந்து விநியோகம் செய்தல்; குழந்தை உணவு, வெண்ணெய் போன்ற ஊட்டப் பொருள்களை உற்பத்தி செய்வதற்காக மேலும் 25 இலட்சம் லிட்டர் பாலைப் பதப்படுத்துதல்; ஆகியவை **'பால் வெள்ள'**த் (Operation Flood) திட்டத்தின் அம்சங்களாகும்.

''தேசியப் பால் பண்ணை மேம்பாட்டு வாரியத்தில் பணியாற்றுகின்ற டாக்டர் குரியனும், அவருடைய சகாக்களும் ஆற்றி வரும் சிறந்த பணிக்கு நான் என் ஆழ்ந்த பாராட்டுதலைத் தெரிவிக்க விரும்புகிறேன். 'பால் வெள்ளம்' என்ற இந்த மகத்தான திட்டத்திற்குத் தொடர்ந்து நல்லாதரவை நல்கி வரும் இந்தியப் பால் பண்ணை மேம்பாட்டுக் கழகத்திற்கும், தமிழ்நாடு உலக உணவுத் திட்ட நிறுவனம், 'யுனிசெப்' நிறுவனம், உணவு வேளாண்மை நிறுவனம் போன்ற உலக நிறுவனங்களுக்கும் நமது நன்றி உரியதாகும்.

### ''அமுல்'' பால் பண்ணைத் திட்டம்

''நகர மக்களுக்குத் தரமான பாலை நியாயமான விலையில் விற்பனை செய்வது நடைமுறையில் சாத்தியமே என்பதை நமது முக்கிய நகரங்களிலுள்ள நவீன பால் பண்ணைகள் நிரூபித்துள்ளன. இத்துறையில் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாகவே, பம்பாய் பெருநகரப் பால் பண்ணைத் திட்டம் முன்னோடியாகச் செயல்பட்டு வருகிறது. கிராமங்களில் பால் உற்பத்திக்கும், நகரங்களில் பால் தேவைக்கும் ஓர் இணைப்பை ஏற்படுத்துவதில் 'அமுல்' பால் உற்பத்தித் திட்டம் நல்ல முன்மாதிரியாக இயங்குகிறது. இதை பின்பற்றி பிற இடங்களிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. புதுடில்லியிலும் ஒரு நவீன பால் பண்ணையை நாம் அமைத்துள்ளோம். தரமாக்கப்பட்ட பால் பதமாக்கப்பட்ட பால், குளிர்பதனம் செய்யப்பட்ட பால், ஆகியவற்றை உற்பத்தி செய்ய இப்பண்ணையில் வசதிகள் உள்ளன. மொத்தமாகப் பாலை விற்பனை செய்யும் ஏற்பாட்டு முறையும், கொண்டு வரப்பட்டுள்ளது.

### இருபது ஆண்டு கால முயற்சி

''இன்றியமையாத இந்த பால் வளப் பெருக்கத் தொழிலில் நமது தேவைகளுக்கேற்ப, நாம் மேம்பாடு காணக் கொண்டுள்ள ஆர்வத்துக்கும், உறுதிக்கும் இச் சாதனைகள் சான்றாக அமைகின்றன. கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக நாம் மேற்கொண்டு வருகின்ற இத்தகைய முனைப்பான முயற்சிகளின் பயனாக ஆராய்ச்சி, கல்விப் பயிற்சி ஆகிய துறைகளுக்குத் தேவையான அமைப்பை நாம் இப்போது உருவாக்கியுள்ளோம். வருங்காலத்தின் அறைகூவல்களை ஏற்க, நமது தேசியப் பால்பண்ணை ஆராய்ச்சி நிறுவனமும், இந்தியக் கால்நடை ஆராய்ச்சி நிறுவனமும், இத்துறைக்குத் தேவையான அறிவியல் அறிஞரையும், ஆசிரியர்களையும், தொழில் வல்லுநர்களையும் உருவாக்கித் தருகின்றன. இதுதவிர, விலங்கியல் விஞ்ஞானம், பால் பண்ணைத் தொழில் நுட்பம் போன்ற துறைகளில் நமது நாட்டின் தேவைகளை நிறைவு செய்திட மாநில அளவில் வேளாண்மைப் பல்கலைக் கழகங்களும் ஆராய்ச்சி நிறுவனங்களும் பரவலாக நிறுவப்பட்டுள்ளன.

''கிராமங்களில் பால் உற்பத்தி செய்யும் எளிய உழவர் பெருமக்களும் இப்பால் பண்ணைத் திட்டங்களில் பங்கு கொள்ளச் செய்து, முன்னேற்றத்தில் அவர்களும் முதலீடு செய்ய வழி வகுப்பதே, இத்திட்டங்களின் வெற்றிக்கு இன்றியமையாத தேவை என்பது அனைத்து நாடுகளும ஏற்றுள்ள கருத்து. நம் நாட்டு

அனுபவமும் இந்த உண்மையையே உணர்த்தியுள்ளது.

**பால் உற்பத்தியாளரின் வருவாயை இரட்டிப்பாக்க......**

''பால் வெள்ளத் திட்டத்தின் கீழ் **'ஆனந்த்'** அமைப்பு முறையில் 18 புதிய கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. இந்தக் கூட்டுறவுச் சங்கம் ஒவ்வொன்றும் சமூகப் பொருளாதார மாற்றத்தை உருவாக்கும் கருவியாகும். இத்தகைய பால் பண்ணைக் கூட்டுறவுச் சங்கம், நாட்டுப்புறத்தில் உள்ள சிறிய எளிய பால் உற்பத்தியாளரின் வருவாயை இரட்டிப்பாக்குவதுடன், நவீன விஞ்ஞான வசதிகளையும், பயன்களையும் நமது நாட்டுப்புற மக்கள் பெறுவதற்கான வாய்ப்பையும் வழங்குகின்றது. பெரும்பாலும், 'ஆனந்த்' முறைக் கூட்டுறவு சங்கம் ஒரு கிராமத்தில் தொடங்கும்போது தான், விஞ்ஞானத்துறையின் பிரதிநிதி ஒருவரை முதன் முறையாக அக்கிராமம் காணமுடிகிறது. கிராம மக்களுக்குத் தொண்டாற்ற வரும் கூட்டுறவுச் சங்கக் கால்நடை மருத்துவர் தான், இந்த முதல் பிரதிநிதியாக விளங்குகிறார்.

**பயன்தரும் பால் கூட்டுறவுச் சங்கங்கள்**

''முக்கியமான பால் உற்பத்தித் தளங்கள் அனைத்திலும் இந்தக் கூட்டுறவு அமைப்பு முறை இப்பொழுது பரவி வருகிறது. தமிழ் நாட்டில் மட்டும் கோவை, சென்னை, மதுரை, உதகை, வேலூர் ஆகிய மாநகரங்களில், பால் கூட்டுறவுச் சங்கங்கள் 'ஆனந்த்' அடிப்படையில் உருவாகியுள்ளன. ஈரோடு பகுதியில் ஏற்கெனவே 5,000-க்கும் மேற்பட்ட சிறு உழவர்களும், நிலமற்ற உழவுத் தொழிலாளர்களும் தாங்கள் உற்பத்தி செய்யும் பாலைத் தங்கள் கிராமக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்று ஆதாயம் அடைகிறார்கள். இக் கூட்டுறவுச் சங்கங்கள், உழவரின் ஆவினங்களை உயர்தரக் காளைகளுடன் இனப் பெருக்கம் செய்யவும், எருமை இனங்களை வளப்படுத்த்வும், சீர்முறை நிருபண மாதிரிப் பாற்பண்ணைகள் அமைக்கவும் அவர்களுக்கு உதவி செய்கின்றன. மேலும் பால் வெள்ளத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு 'ஆனந்த்' அமைப்பு முறை கூட்டுறவுச் சங்கத்திற்கும் கால்நடைத் தீவனத் தயாரிப்பு ஆலை ஒன்று தனியாக நிறுவப்படும். இத்தகைய மூன்று



**புதிய பால்பண்ணையைக் குடியரசுத் தலைவர் திறந்து வைக்கிறார்.**

ஆலைகள் நிறுவப்பட்டுவிட்டன. மேலும் 8 ஆலைகள் நிறுவப்பட்டு வருகின்றன.

**பாமர மக்களின் வருவாயை உயர்த்திடுவோம்!**

''பால் வெள்ளத் திட்டங்களை நிறைவேற்றுவதில், தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கு இணையாக விரைவில் முன்னேறும் என்பதற்கு இன்று தொடங்கப்படுகிற இப்புதிய பால் பண்ணை ஓர் அறிகுறியாகும் என்று நம்புகிறேன். இன்று தமிழ்நாட்டில் புதியதோர் எழுச்சி ஏற்பட்டுள்ள சூழ்நிலையில் ''பால்வெள்ளம்'' போன்ற ஆக்கத் திட்டங்களை மேலும் ஊக்கத்துடனும், உறுதியுடனும், செயற்படுத்த முடியும்; பால் உற்பத்தி அளவை உயர்த்தும் வகையிலும், நகரப் பாமர மக்கள் நாட்டுப்புறப் பாமர மக்கள் ஆகிய இரு சாராரின் உண்மை வருவாய் நிலையை உயர்த்தும் வகையிலும் செயல்படுத்த முடியும்.

**பால் வளம் பெருக்கிப் பயன் மிகு பெறுவோம்!**

இக்கருத்தைப்பெருமிதத்தோடு நினைவில் இருத்திக் கொள்ளும் படிக் இங்கு கூடியுள்ள அனைவரையும், பால்பண்ணை நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் கேட்டுக் கொள்கிறேன். தமிழ்நாட்டுப் பால் பண்ணை இயக்கத்திற்கு வளர்ச்சிப் பொறுப்பேற்றுள்ள தலைவர்கள், இம்மாநிலத்தின் பால்பண்ணை உற்பத்தியாளர்கள், பாலைப் பயன்படுத்தும் பொதுமக்கள் ஆகியோரின் சேவைக்கு மீண்டும் தங்களை அர்ப்பணித்துக் கொள்ளும் நன்னாளாக இந்நாள் அமைய வேண்டுமென்று நான் விரும்புகிறேன். பால்வளப் பெருக்கப் பணியினை ஓர் அறைகூவலாக மட்டுமல்ல, ஒரு நல் வாய்ப்பாகவும் நாம் கருதுவோமாக. நகர்ப் புறங்களில் பாலைப் பயன்படுத்துவோரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த இது ஒரு நல் வாய்ப்பாகும். நாட்டுப்புறங்களில் உள்ள பால் உற்பத்தியாளர்கள் நவீன, விஞ்ஞான முறைகளை மேற்கொள்ளவும், சமுதாய நீதியின் நடைமுறைப் பலன்களை அவர்கள் பெறவும், இது ஓர் அரிய வாய்ப்பாகும்.

''புதிதாக உருவாக்கப்பட்டுள்ள இந்த அம்பத்தூர் பால் பண்ணையைத் தொடங்கி வைப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். சென்னை மாநகரில் பாலைப் பயன்படுத்தும் பொது மக்களின் நலனுக்காகவும், தமிழ் நாட்டிலுள்ள கிராமபால் உற்பத்தியாளர் அனைவரின் நலனுக்காகவும் தொண்டாற்ற இப் பண்ணை தன்னை அர்ப்பணித்துக் கொள்ளட்டும். இப்பண்ணை, தொண்டுக்குத் தன்னைக் காணிக்கையாக்கும் என்ற நம்பிக்கையில் பெருமகிழ்ச்சியுடன் இப்பால் பண்ணையைத் தொடங்கி வைக்கின்றேன்.''

வணக்கம்.
ஜெய்ஹிந்த்.

**[சென்னைக்கு அருகில் உள்ள அம்பத்தூரில் தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் இரண்டாவது பால் பண்ணையை 16-4-1976 அன்று**

**இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. பக்ருதீன் அலி அகமது அவர்கள் திறந்து வைத்து ஆற்றிய ஆங்கில உரையினைத் தமிழ்நாடு அரசின் உணவுத் துறை செயலாளர் திரு. க. திரவியம் ஐ. ஏ. எஸ். அவர்கள் தமிழாக்கம் செய்தார்.]**



. *அம்பத்தூரில் ரூபாய் 2.55 கோடி செலவில் நிறுவப்பட்டுள்ள புதிய பால் பதனிடும் நிலையத்தை* **இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. பக்ருதீன் அலி அகமது அவர்கள்** *16—4—76 அன்று காலை துவக்கி வைத்தார்.*

தமிழ்நாடு பால் வள நிறுவனத்தின் சார்பில், மாதவரம் பால் பண்ணையோடு இது இரண்டாவதாக அமைக்கப்பட்ட நிலையமாகும்.

இந்த நிலையம் நாள்தோறும் 2 இலட்சம் லிட்டர் பாலைப் பதனிடும் திறன் கொண்டது. மாதவரத்தில் உள்ள நிலையம் இப்போது நாள்தோறும் 1.60 இலட்சம் லிட்டர் பாலை பதனிட்டு வழங்கி வருகிறது.



**அம்பத்தூரில் அமைக்கப் பெற்றுள்ள புதிய பால் பண்ணையின் வெளித் தோற்றம்.**

''பால் வெள்ளம்'' என்ற உலக உணவுத் திட்டத்தின் கீழ் இந்தியா முழுவதற்கும் 1970—77-க்கு மொத்தம் அளிக்கப்பட்ட 100 கோடி ரூபாயில், 8.87 கோடி ரூபாய் தமிழ் நாட்டிற்கு ஒதுக்கப்பட்டது. இந்த நிதியைக் கொண்டு தமிழ் நாட்டில் பால் வளம் பெருக்கப்பட்டு, இந்த இரண்டாவது நிலையம் உருவாக்கப்பட்டுள்ளது.

அம்பத்தூர் பால் பண்ணைத் துவக்க விழாவிற்குத் தலைமை வகித்த **தமிழக ஆளுநர் திரு. கே. கே. ஷா அவர்கள்** பேசுகையில், இப்புதிய பால் நிலையம், மொத்தமான அளவில் பதனிட்டு விற்பனைக்கு அனுப்பும் விதத்தில் இங்கு இயந்திர முறை உருவாக்கப்பட்டிருக்கின்றன என்றும், மொத்த இயந்திரத்தில் 60 சதவிகிதக் கருவிகள் நம் நாட்டிலேயே தயாரிக்கப்பட்டவை என்றும், 40 சதவிகித பாகங்கள்தான் வெளி நாட்டிலிருந்து (ஸ்வீடன்) இறக்குமதி செய்யப்பட்டவை என்றும் தெரிவித்தார்.

நிலமில்லா ஏழைகளும், வேளாண்மைத் தொழிலாளர்களும் அதிக வருவாய்ப் பெறுவதற்கு மாடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு ஆகிய துறைகளை இலாபகரமாக்க வேண்டும் என்பதே அரசின் நோக்கம் என்றும் அவர் சொன்னார்.

கிராமப் பால் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கம் அளிப்பதன்மூலம் கால்நடை வளர்ப்பில் பலர் ஈடுபட்டு, அதன் மூலம் வேலைவாய்ப்பும், வருவாய்ப் பெருக்கமும் ஏற்பட்டு, அவர்களுடைய வாழ்க்கைத்தரமும் உயர வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும் என்றும் ஆளுநர் அவர்கள் கூறினார்.

**ஆளுநரின் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள்** குடியரசுத் தலைவர் அவர்களையும், ஆளுநர் அவர்களையும், மற்றவர்களையும் வரவேற்றார். வரவேற்புரை ஆற்றுகையில் அவர், பால் உற்பத்தியாளர் — வாடிக்கையாளர் ஆகிய இரு சாராருக்கும் நியாயமான விலையில் பால் விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்றும் கூறினார்.

ஆரம்பத்தில் குடியரசுத் தலைவருக்கு இந்த பால் பண்ணையின் மூத்த தொழிலாளர்கள் மாலையிட்டு வரவேற்றனர்.

இந்த நிலையத்தின் சார்பில் இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களுக்கு தஞ்சாவூர் பஞ்சலோகத் தட்டை தமிழக ஆளுநர் திரு கே. கே. ஷா அவர்கள் பரிசளித்தார்.

நிருவாக இயக்குநர் திரு. எல். எம். மெனிஸிஸ் அவர்கள் நன்றி கூறினார்.

புதிதாகத் துவக்கப்பட்டுள்ள அம்பத்தூர் பால் பண்ணை கிராமப்புறங்களின் வருவாயைப் பெருக்கவும், சென்னை நகர மக்களின் பால் தேவையை ஈடு செய்யவும் உதவிடும் என்பது திண்ணம்.




# "மக்களை ஒருங்கிணைக்கவே மொழிகள் பயன்பட வேண்டும்"

தமிழ், சமஸ்கிருதம், மற்ற இந்திய மொழிகளை ஆராய்வதற்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ள இந்த ஆராய்ச்சிக் கழகத்தின் புதிய கட்டடத்தைத் திறந்து வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இரண்டு ஆண்டுகளுக்கும் குறைவான காலத்துக்கு முன்பு, மதிப்புமிக்க முன்னாள் ராஷ்டிரபதி திரு வி. வி. கிரி இந்தக் கட்டிடத்துக்கான அடிக்கல் நாட்டினார். இக்கழகத்தின் நிர்வாகத் தலைவர் திரு கே. கே. ஷாவையும் மற்ற உறுப்பினர்களையும், அவர்கள் இக்கழகத்தின் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் ஆவலுடன் நிறைவேற்றுதற்காகப் பாராட்டுகிறேன். இந்திய மொழிகளை ஒப்பிட்டுப் பார்க்கும் ஆராய்ச்சியை மேற்கொள்ள அவர்கள் தீர்மானித்திருப்பதையும், அம்மொழிகளின் தோற்றம், வளர்ச்சி ஆகியவற்றைத் தீவிரமாக ஆராய்வதையும் வரவேற்கிறேன்.

'மக்களின் வாழ்க்கையில், மொழிகள் சக்திவாய்ந்த அம்சங்களாக உள்ளன. எனவே, அந்த மொழிகள், மக்களை ஒருங்கிணைக்கும் வழியாகப் பயன்படுத்தப்பட வேண்டுமேயன்றி, அவர்களைப் பிரிக்கக்கூடாது. வெறும் பாரபட்ச உணர்வு அல்லது தப்பெண்ணம் காரணமாகவே ஒருவரின் சொந்தமொழியில் அவருக்குள்ள பற்றுதல், சில நேரங்களில் குறுகிய, மொழிவெறிப் போக்காகக்கூட உருமாறிவிடுகிறது. மொழிகள், மொழி வரலாறு பற்றிய அறிவியல்பூர்வ ஆராய்ச்சி, சகிப்புத் தன்மையை வளர்க்கும் என்று நான் நம்புகிறேன்; ஒருவர் தமது சொந்த மொழியைப் பற்றி மட்டுமல்லாமல் மற்ற மொழிகளையும் அதைப் போலவே அறிந்து கொள்ள இதனால் இயலும்.

''அருமையான இலக்கியப் பாரம்பரியம் கொண்ட குறிப்பிடத்தக்க மொழிகள் சிலவற்றில் தங்களது கழகம் ஆய்வு மேற்கொள்ள உத்தேசித்துள்ளது. தமிழ்மொழி, அதன் தொன்மையான நீண்டகால செழுமைக்காக உலக மொழிகளுக்கிடையே முழுமையான தனிச் சிறப்புக்கொண்டிருக்கிறது. தமிழ்மொழி, பழைமையானதும் நவீனமானதும் ஆகும். மகத்தான பண்டையச் சிறப்புக்களுடன்கூட அது என்றும் புதியதாகவும், இளமையானதாகவும் ஊக்கமிக்கதாகவும் தொடர்ந்து விளங்குகிறது. தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தின் ஆழமும் அளவும், அதன் பரந்த மனப்பான்மை, பொது நோக்குத் தன்மை ஆகியவற்றைப் போலவே உள்ளன.

''பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே மாபெரும் சங்க காலத் தமிழ்க் கவிஞர் ஒருவர் ''**யாதும் ஊரே; யாவரும் கேளிர்**'' என்று அறிவித்தார். உலக மனப்பான்மை கொண்ட இதே செய்தியை, ஞானியும் கவியுமாகிய வள்ளுவர் உறுதிப்படுத்தினர். அவர் ''**ஒத்த தறிவான் உயிர் வாழ்வான்**'' என்று கூறுகிறார். நவீன காலத்துக்கு வருவோமானால், நவீன தமிழ் மறுமலர்ச்சித் தந்தையாகிய மகாகவி சுப்பிரமணிய பாரதி ''**செப்பு மொழி பதினெட்டுடையாள்; எனின் சிந்தனை ஒன்றுடையாள்**'' என்று பாரதத் தாயைப் போற்றுகிறார். மற்றவர்களின் மொழியில் புலமை பெற்ற ஒரு மொழிக் குழுவின் கவிதை ஓவியம் ஒன்றை அவர் வரைந்துள்ளார். நம்முடைய இப்பெரும் நிலத்தில் மக்கள் அனைவரும் அமைதியுடனும ஒற்றுமையுடனும் வாழ்கிறார்கள். இந்த மாபெரும் கவிஞர்கள்— தீர்க்கதரிசிகளின் கனவுகளை நிறைவேற்ற வேண்டியது நமது கடமையாகும்.

''நீங்கள் ஆழ்ந்து ஆராயும் இன்னொரு மொழி சமஸ்கிரும் என்று அறிந்து மகிழ்கிறேன். நமது சிந்தனையிலும் கலாசாரத்திலும் முழுமையாக ஊடுருவும் சக்தி கொண்டது இந்த மொழி. பல்லாண்டுக் காலமாக இந்தியாவை இணைக்கும் ஒரு மாபெரும் சக்தியாக அது விளங்கியுள்ளது. கேரளத்திலிருந்து காஷ்மீர் வரையில் நாடு முழுவதிலுமுள்ள கல்வித்துறை நிபுணர்களும், தத்துவ மேதைகளும், கவிஞர்களும் சமஸ்கிருத மொழியின் வளர்ச்சிக்கும் இலக்கியத்துக்கும் பங்காற்றியுள்ளனர். வட இந்திய மொழிகள் சமஸ்கிருத மொழியிலிருந்து தோன்றியவையாகும். தென்னிந்திய மொழிகளில் பல சமஸ்கிருத மொழியால் வளமடைந்தன.

''பல்வேறு மொழி, கலாச்சார மண்டல, மதக் குழுவினருக்கிடையே நல்லெண்ணப் பாலம் கட்டி, தேச ஒற்றுமையைப் பலப்படுத்துவதே தற்போதைய தேவையாகும், தமிழ், சமஸ்கிருதம், மற்ற மொழிகளின் ஆராய்ச்சி, அந்த மொழிகளுக்கிடையே நல்லெண்ண உணர்வை மேம்படுத்தி, எல்லா மொழிகளின் செழிப்புக்கும் வகை செய்யும் என்று நான் நம்புகிறேன்

வாழும் உயிர்களைப் போலவே நமது மொழிகளும் அவற்றின் சுற்றுப்புறச் சூழ்நிலைகளிலிருந்தே உயிர் வாழ்கின்றன. அவை ஒற்றுக்கொன்று தாராளமாகக் கடன் வாங்கியுள்ளன. அவ்வாறு அவை தம்மின் தற்போதைய மாபெரும் நிலைக்கு வளர்ந்துள்ளன. நமது இந்திய மொழிகளின் தீவிர வளர்ச்சி, அண்மைக் காலத்தில் அடைந்துள்ள குறிப்பிடத்தக்க சாதனைகளில் ஒன்றாகும். கேரள மாநில மொழிகள் கழகம் பிரசுரித்த 444-ஆவது புத்தகத்தைத் திருவனந்தபுரத்தில் வெளியிடும் பேறு நேற்றுஎனக்குக் கிட்டியது. பல்வேறு விஞ்ஞானப் பாடப் புத்தகங்களை அவர்கள் வெளியிட்டுள்ளதையும் மேலும் அத்தகைய புத்தகங்கள் பலவற்றை வெளியிட அவர்கள் திட்டமிட்டிருப்பதையும் அறிந்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். மொழிகள் பற்றிய தோல்விகரமான கருத்து வேறுபாடுகள் பலவற்றையும் புதைத்துவிட்டு, நமது மொழிகள் அனைத்தையும் வளப்படுத்தும் ஆக்கப்பணியில் நாம் முனைந்து ஈடுபடும் நேரம் வந்துவிட்டது. நவீன விஞ்ஞானச் சிந்தனைகளை அறிவிக்கும் தகுதி வாய்ந்த சாதனமாக மொழிகள் ஆக்கப்படவேண்டும்.

''நமது மொழிகள் பற்றிய நம் கொள்கை தெளிவானது. தாய்மொழிக்கே முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. அதுவே கல்வி போதனைக்குரிய மொழியாகும். எல்லா மண்டல மொழிகளும் அந்தந்தப் பகுதிகளின் சட்டமன்றம் மற்றும் நீதிமன்ற மொழியாக ஆக்கப்படும். நம் நாட்டைப் போன்ற பல மொழிகள் கொண்ட பரந்த ஒரு நாட்டில் தேச ஒற்றுமையை வளர்ப்பதற்கு ஒரு பொதுவான இணைப்பு மொழியை அபிவிருத்தி செய்ய வேண்டியது அவசியமாகும். வட இந்தியாவில் பெரும் எண்ணிக்கை மக்களால் பேசப்பட்டு, நாட்டின் இதர பெரும்பகுதி மக்கள் புரிந்து கொள்ளும் இந்தி அல்லது இந்துஸ்தானி மொழி ஒரு பொது மொழியாக விளங்க மிகவும் பொருத்தமானது என்பதில் அபூர்வ தீர்க்க தரிசனம் கொண்ட மகாத்மா காந்தி திருப்தியடைந்தார். அவர் 1920 ஆம் ஆண்டுவாக்கில் தட்சிண பாரத் இந்திப் பிரச்சார சபையைத் தோற்றுவித்தார். கடந்த அரை நூற்றாண்டுக் காலத்துக்கும் மேலாக அந்த சபை நல்ல பணி ஆற்றிவருவதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். இந்தி மொழியைப் பரப்பும் பணிக்கு ஆழ்ந்த பரஸ்பர நல்லெண்ண உணர்வும் எல்லையற்ற பொறுமையும் தேவையாகும்.

உலகின் முதலாவது அனைத்துலக மொழியாக ஆங்கிலம் விரைந்து முன்னேறி வருகிறது. அதுவே நவீன விஞ்ஞான—தொழில்நுட்பத் துறைக்கான மொழியாகவும் உள்ளது. நமது அறிஞர் சமுதாயம், ஆங்கில மொழியில் நல்ல புலமை கொண்டிருக்கிறது. எனவே அந்த மொழியை நாம் கைவிட இயலாது. எனினும், நமது ஆங்கில அறிவை நமது சொந்த மொழிகளின் அபிவிருத்திக்காக நாம் உபயோகிக்க வேண்டும். அவற்றின் வளர்ச்சிக்கு நாம் அணை போடக்கூடாது.

# குடியரசுத் தலைவர் கருத்துரை

''கவிஞர் ரவீந்திரநாத் தாகூர், பல்வேறு இந்திய மொழிகளையும் ஒரு மலரின் இதழ்களுக்கு ஒப்பிட்டார். இதழ்கள் தனித்தனியாக இன்னமும் இருந்தபோதிலும், மலரின் ஒருங்கிணைந்த பகுதியாக அவை உள்ளன; மலரின் அழகுக்கு அவை ஒன்றுகூடி அழகூட்டுகின்றன.

''நாட்டின் அறிவியல் தலைநகரம் என்று மதிக்கப்படும், வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தச் சென்னை மாநகரில் துவக்கப்பட்டுள்ள இந்த மொழி ஆராய்ச்சிக் கழகம், நமது மொழிகளுக்கிடையே நல்லெண்ணத்தையும் ஒற்றுமையையும் மேம்படுத்தும் தேச நிர்மாண முயற்சியை மேற்கொண்டுள்ளது. உங்கள் பணியால் நீங்கள் நமது மொழிகளின் சிறப்புத் தன்மைகளை நெடுந்தொலைவு பரவலாகப் பரப்புவீர்கள் என்று நான் நம்புகிறேன். இம்முயற்சியில் தாங்கள் முழு வெற்றி காண எனது வாழ்த்துக்கள்.''

"ஜெய்ஹிந்த்."

**சென்னை எழும்பூரில் தமிழ், சமஸ்கிருதம் மற்றும் இதர இந்திய மொழிகளுக்கான ஆராய்ச்சி நிலையத்திற்காகக் கட்டப்பட்டுள்ள கட்டடத்தை 15-4-'76 அன்று மாலை 4-30 மணிக்குத் திறந்து வைத்து இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. பக்ருதீன் அலி அகமது அவர்கள், ஆற்றிய உரை.**

விழாவிற்குத் தலைமை வகித்த தமிழ்நாடு ஆளுநர் திரு. கே. கே. ஷா அவர்கள் பேசுகையில் தமிழ் மொழிக்கும், சமஸ்கிருத மொழிக்கும் உச்சரிப்பு — அர்த்தங்கள் ஆகிய பல அம்சங்களில் ஏராளமான ஒற்றுமை இருப்பதை தமிழ் கற்றுக் கொண்டிருக்கும்போது கண்டுபிடித்ததாகக் கூறினார்.

நமது மொழிகளின் தொன்மை, கலாச்சாரம் பற்றி வெளிநாட்டினர் கூறி வரும் தவறான எண்ணங்களை நீக்கவும், உண்மையைக் கண்டுபிடிக்கவும், குழப்பங்களை நீக்கவும் பண்டிதர்களும், உண்மையை விரும்புபவர்களும் பாடுபட வேண்டும் என்று ஆளுநர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

இந்த நிறுவனத்திற்கு திரு. எம். ஏ. முத்தையா செட்டியார் ரூபாய் 3 இலட்சம் நன்கொடை வழங்கியுள்ளதாகவும், ஆண்டு தோறும் ரூபாய் 20,000 வருவாய் கிடைக்கும்படியாக ஒரு அறக்கட்டளையை நிறுவ முன் வந்துள்ளதாகவும் ஆளுநர் அவர்கள் தன் உரையில் தெரிவித்தார்.

இந்திய விடுதலைப் போராட்ட வீரர் டாக்டர் என். சந்திரகாந்த் அவர்கள் இந்தி மொழியில் எழுதிய தமிழ் பக்தி நூலை ஆளுநர் அவர்கள், குடியரசுத் தலைவர் அவர்களிடம் அளித்தார்.

குடியரசுத் தலைவர் அவர்களுக்கும் அவரது மனைவி திருமதி பீகம் பக்ருதீன் அலி அகமதுக்கும் கீதா உபதேச உருவச் சிலையும், புல்லாங்குழல் ஊதும் கிருஷ்ணன் உருவச் சிலையும் அன்பளிப்பாக அளிக்கப்பட்டன.

இந்த நிறுவன தலைவர் திரு. பி.வி. ராஜமன்னார் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், எந்த விதமான பாரபட்சமோ வேறுபாடுகளோ இன்றி இந்த நிறுவனம் உண்மையான ஆராய்ச்சிக்காகப் பாடுபடும் என்றார்.

திரு வைத்திய சுப்பிரமணியம் அவர்கள் வாழ்த்துச் செய்திகளை வாசித்தார். திரு முத்தையா செட்டியார் அவர்கள் நன்றியுரையுடன் விழா முடிந்தது.

**அட்டைப்பட விளக்கம்**

தமிழ்நாடு ஆளுநர் திரு. கே. கே. ஷா அவர்கள் திருநெல்வேலி மாவட்டச் சுற்றுப் பயணத்தின்போது வேளாண்மைத் தொழிலாளர்களின் குறைகளைக் கேட்டறிகிறார்.



# முஸ்லிம் பெருமக்களுக்கு குடியரசுத் தலைவரின் வேண்டுகோள்!

"காலமாற்றம், தேவைகளுக்கு ஏற்ப நவீன கண்ணோட்டத்துடன் இஸ்லாமியக் கோட்பாடுகளை முஸ்லீம்கள் கடைப்பிடிக்க வேண்டும்'' என்று இந்தியக் குடியரசுத் **தலைவர் திரு. பக்ருதின் அலி அகமது** அவர்கள் கூறினார்.

சென்னை, தேனாம்பேட்டையில் உள்ள எஸ். ஐ. ஈ. டி. மகளிர் கல்லூரியில் 25 இலட்சம் ரூபாய் செலவில் ஓராண்டுக் காலத்திற்குள் கட்டப்படவிருக்கும் புதிய பல அடுக்கு மாடிக் கட்டிடத்திற்கு 16—4—'76 அன்று காலை நடைபெற்ற கால்கோள் விழாவில் இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் பேசுகையில் முஸ்லிம் சமுதாய மக்களுக்குப் பின்கண்ட அறிவுரைகளை வழங்கினார். ''வெளிப்படையாகப் பேசிப் பழக்கப்பட்டவன்'' என்று கூறித் தமது பேச்சை அவர் துவக்கினார்.

"முஸ்லிம்கள் இணக்கமில்லாத பிடிவாத குணத்தவர்கள் ; மாறுதலை விரும்பாமல் தேக்க நிலையில் இருப்பவர்கள் என்ற வகையில் இருக்கவோ, செயல்படவோ கூடாது. அப்படி அவர்கள் இருந்தால் அவர்கள் இஸ்லாமிய நெறிக்குச் சேவை செய்தவர்களாக ஆக மாட்டார்கள்; இந்தியாவுக்கும் சேவை செய்தவர்கள் ஆகமாட்டார்கள்.

''கல்வி அறிவு பெறுவது, ஒரு வர்க்கம்—ஒரு இனத்திற்கு மட்டும் உரியதல்ல. ஆண்—பெண் என்ற இன வேறுபாடு அல்லது பாகுபாடின்றி, அனைவருக்கும் கல்வி அறிவு கிட்ட வேண்டும் என்பதுதான் இஸ்லாமியக் கோட்பாடு. பண்டித நேரு அவர்கள் அடிக்கல் நாட்டிய இந்தக் கல்லூரி இன்று இவ்வளவு மகத்தானதாக வளர்ந்துள்ளது. இன்று நேரு அவர்கள் உயிருடனிருந்திருந்தால் மிக்க மகிழ்ச்சி அடைந்திருப்பார்.

''முஸ்லிம் சட்டத்தைத் திருத்த உத்தேசமில்லை என்று பல முறை நானும், பிரதம மந்திரியும் தெளிவு படுத்திக் கூறிய பிறகும், இந்தச் சந்தேகம் ஏன் எப்படி பஷீர் அகமதுக்கு வந்தது என்று எனக்குப் புரியவில்லை. ஜாதிக் கட்சிகள், ஒரு சில அரசியல் வாதிகளின் பிரச்சாரம் இவரையும் பிடித்துக் கொண்டு விட்டதோ என்று ஐயுறுகிறேன்.

கல்விக் கூட விழாவில் இது போன்ற தேவையில்லாத, சர்ச்சைக்கிடமான சங்கடமான பிரச்சினை கிளப்பப்பட்டது குறித்துக் குடியரசுத் தலைவர் மனக்குறை தெரிவித்து,'பிரச்சினை கிளப்பப்பட்ட காரணத்தால் இதற்குத் தான் பதிலளிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது'. என்று குறிப்பிட்டார்.

''நாம் முஸ்லீம் என்றோ — சிறுபான்மையினர் என்றோ முஸ்லிம்கள் எண்ணக் கூடாது. இந்து மக்களானாலும் சரி, முஸ்லிம்களானாலும், வேறு எந்த மதத்தினரானாலும் அவர்கள் அனைவரும் இந்திய நாட்டுக் குடி மக்கள் என்று உணர்ந்து கடமை ஆற்ற வேண்டும். அரசியல், பொருளாதார விவகாரங்களில் இந்து-முஸ்லிம், மெஜாரிட்டி-மைனாரிட்டி என்ற பாகுபாடுகளுக்கு இடம் கிடையாது''

இதே போல வாரிசுச் சட்டம் பற்றியும், குடியரசுத் தலைவர் குறிப்பிட்டார் : ''இது முஸ்லிம்களுக்குப் பொருந்தும். கட்டாயம் இல்லை; பின்பற்றித்தான் ஆக வேண்டும் என்ற நிர்பந்தமில்லாத போது தேவையில்லாத சந்தேகங்கள் கிளப்பப்படுவானேன்? இந்து-முஸ்லிம் பிரச்சினைகள் இழுக்கப்படுவானேன்'' என்று குடியரசுத் தலைவர் கேட்டார்.

இந்திய நாட்டு வளர்ச்சியில் பங்கு கொண்டு உழைக்கும்படி முஸ்லிம்களை அவர் கேட்டுக் கொண்டார். மொழி அல்லது இனத்தின் பெயரால் ஏற்படும் எந்த நாடும் சுவர்க்க பூமி அல்ல என்பதைக் கடந்த கால நிகழ்ச்சிகள் நிரூபித்துக் காட்டுவதாகச் சொன்னார். இந்தியாவில் வாழும் நாம் அனைவரும் இந்தியர்கள் என்றும், ஏழ்மை, அறியாமை ஆகியவற்றை ஒழிப்பதில் ஒன்றுபட்டுச் செயல்படுவோம் என்றும் குடியரசுத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்.

# தெரிந்து கொள்வோம்!



## மாணவர் அரங்கம்

விலங்குகள், பறவைகள், மற்றும் சிற்றுயிர்ப் பிறவிகள் ஆகியவற்றில் சிலவற்றை நாம் பார்த்திருக்கிறோம். பலவற்றைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம்; சிற்சிலவற்றின் சிறப்பியல்புகள் நமக்குத் தெரிந்திருக்க நியாயம் இல்லை. அத்தகைய சிறப்பியல்புகள் இங்கே தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

மாணவர்களுக்குப் பயன் தரும் பொது அறிவுச் செய்திகள் இவை! படித்துப் பயன்பெறுக!

*பிறக்கும் போது ஒரே ஒரு பவுண்டு எடையுள்ள கரடிக் குட்டி, ஒரு வயதை அடையும் போது ஏறக்குறைய 100 பவுண்டு எடைபெற்று விடுகிறது.

*யானையின் துதிக்கையில் எலும்பே கிடையாது; முழுதும் தசைதான். அது, துதிக்கை நுனியில் உள்ள கூர்மை மிகுந்த பகுதியைக் கொண்டு, கீழே விழுந்த ஊசியைக் கூட எடுத்துவிடும். யானையால் நூறாண்டுகள் உயிர் வாழ முடியும்.

*ஆந்தையால் தனது விழிகளை அங்கும் இங்கும் அசைக்க முடியாது.

*முள்ளம்பன்றி, ஒன்றை ஒன்று குத்திக் கொள்ளாது சண்டையிட்டுப் பழகிக் கொள்ளும் திறமை பெற்றுள்ளது.

*ஒட்டகத்தின் முதுகு பார்ப்பதற்கு வளைந்திருப்பது போலத் தோன்றினாலும் அதனுடைய முதுகெலும்பு நேராகத்தான் உள்ளது. சதைதான் கோணலாக உள்ளது. நாலுகால் கொண்ட விலங்கினத்தில் ஒட்டகத்திற்கு மட்டும்தான் நீந்தத் தெரியாது. உப்பு நீரைக் குடிப்பதில் ஒட்டகத்திற்கு விருப்பம் அதிகம்.

*தனக்குப் பின் புறம் உள்ள பொருள்களை, கழுத்தைத் திருப்பாமல் பார்க்கும் திறமை ஒட்டைச் சிவிங்கிக்கு உண்டு.

*ஒரு குட்டித் திமிங்கிலம் ஒரே ஒரு ஆண்டில் தன் தாயின் வடிவத்துக்கு இணையாக வளர்ந்து விடுகிறது.

*பூனை தனது தலையைச் சொறிந்து கொள்வதற்குத் தனது பின்னங்கால்களைத்தான் பயன்படுத்துகிறது.

*பொதுவாக விலங்குகள் வாயைத் திறந்தால் கீழ்த் தாடைகள்தாம் கீழ்நோக்கி அசையும்; ஆனால் முதலை வாயைத் திறந்தால் மேல் தாடை மேல் நோக்கி உயரும். அது மட்டுமல்ல; முதலை கண்களைத் திறந்து வைத்துக் கொண்டு தூங்கும்.

*புலி, தான் அடித்துக் கொன்ற மிருகத்தை மட்டுமே உண்ணும். ஏற்கெனவே செத்துப்போன விலங்குகளையோ பிறவற்றால் கொல்லப்பட்டவற்றையோ அது சாப்பிடாது.

*ராகூன் என்னும் விலங்கு, தான் சாப்பிடும் பொருளைத் தண்ணீரில் கழுவிச் சுத்தம் செய்த பின்னர் தான் சாப்பிடும்.

*கங்காருவின் வால், தரையில் படாமல் தூக்கி வைக்கப்பட்டு இருந்தால், அதனால் தாவிக் குதிக்க முடியாது.

*ஆமை வருடத்துக்குக்கு ஒரு முறை தனது ஓட்டின் மேல் பகுதியைக் கழற்றி விடுகிறது ; புதுப் பகுதி அதன் ஓட்டில் தோன்றுகிறது.

*பறவையின் கண்கள் நீளமாக இரா. அவை வட்டவடிவமாகவே இருக்கும். பறவைகள் உணவுடன் சேர்த்துக் கற்களை விழுங்குவதும் உண்டு. கற்கள், அவற்றின் வயிற்றில் பற்களைப் போலப் பயன்பட்டு, உணவை மாவாக அரைக்க உதவுகின்றன.

*மரங்கொத்திப் பறவையின் அலகும் மண்டை ஓடும் ஒரே எலும்பால் ஆனவை. அதனால் தான் அது எத்தகைய மரத்தையும் தனது அலகினால் கொத்தித் துளை போட்டு விடுகிறது.

*புறாக்கள் தூங்குவதில்லை ; உடல் நலக் குறைவான புறாக்கள்தாம் தூங்குகின்றன.

*'கிவி' என்னும் பறவைக்கு இறக்கைகள் கிடையா.

*வாத்துக்கள் நீரில் நீந்திக் கொண்டே தூங்கும் ஆற்றல் பெற்றுள்ளன.

*நீல நிறத்தைக் கண்டால் ஈக்களுக்குப் பிடிக்காது; அவற்றிடம் அவை அணுகுவதில்லை. ஈ, ஒரு வினாடியில் 330 முறை தனது இறக்கையை மடக்கி, நீட்டி, அடித்துக் கொள்கிறது.

*கொசுக்கள் நீல ஒளியைக் கண்டால் நெருங்கும்; சிவப்பு ஒளியைக் கண்டால் விலகிச் செல்லும்.

*ஜாவாவில் உள்ள ஒருவகைத் தவளைகள் பறக்கும் ஆற்றல் பெற்றவை; அவற்றின் கால்கள் பறக்கும் காலத்தில் இறக்கைகள் போலப் பயன்படுகின்றன.

*சுவர்க் கோழி வாயால் சத்தம் இடுவதில்லை ; தனது பின் கால்களை உரசுவதன் வாயிலாக 'கிறீச்' என்னும் ஒலியை எழுப்புகிறது.

*ஒரு சிப்பியில் முத்து வளர்வதற்கு ஏறக்குறைய 15 ஆண்டுகளுக்கு மேலாகும்.

*வெட்டுக் கிளிகளின் இரத்தம் வெண்மையாக இருக்கும்.

*நண்டுக்கு அதன் வயிற்றில் தான் பற்கள் அமைந்திருக்கின்றன.

*மண் புழுக்களில் ஆண், பெண் என்று தனித் தனி இனம் கிடையாது.

*பூச்சி இனத்தில் 'தட்டாம் பூச்சி' ஒன்றிற்குத்தான் ஒரே இடத்தில் நின்று பறக்கும் ஆற்றல் உண்டு.

தொகுப்பு:

—எஸ். சண்முகசுந்தரம்

# கோ-ஆப்டெக்ஸ் மக்கள் விரும்பும் வகைகள்! நியாயமான விலைகள்!



கோ-ஆப்டெக்ஸ் சேலைகள்,

## அழகு மிளிரும் ஆரணங்குகள்!

ஆரணி, கும்பகோணம், காஞ்சிபுரம் அசல் பட்டுச் சேலைகள், உறையூர், கோயமுத்தூர், சேலம், மதுரை பருத்தி கைத்தறிச் சேலைகள், அச்சிட்ட சுங்கடி சேலைகள் மற்றும் சின்னாளப்பட்டி சேலைகள்.



கோ-ஆப்டெக்ஸ்

## படுக்கை விரிப்புகள், மலர்ப் படுக்கைகள்!

நேர்த்தியான நெசவு கைத்தறிப் படுக்கை விரிப்புகள் மற்றும் தலையணை உறைகள், உங்களுக்கு சொகுசு அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்

## லுங்கிகள், வசதியானவை நீடித்துழைப்பவை!

உங்கள் விருப்பத்துக்குகந்த சாதா, கோடிட்ட அல்லது கட்டமிட்ட பல வகைகளில்.



கோ-ஆப்டெக்ஸ்

## துவாலைகள், தூய்மையான துவாலைகள்!

சாதா, டர்கிஷ் வகைகள், மென்மையான மற்றும் ஈரத்தை உறிஞ்சும் வகைகள். உங்களது சுகாதாரத்துக்கு இன்றியமையாதவை!

மற்றும் கைத்தறிப் பருத்தி வகைகள், வேட்டிகள், உடுப்புகளுக்கான துணிகள், அலங்காரத் துணிவகைகள்—குடும்பத்தினர் அனைவருக்குமே உகந்த முழுதும் புதிய வகைகள்.

கோ-ஆப்டெக்ஸ்

கைத்தறியே வண்ண

பதிவு எண். M. 8676

# ந்தியப் பிரதமரின்

# 20

## அம்சத் திட்டம்



உழவர் வாழ்வு
உயர்ந்திட...

மாணவர் வருங்காலம்
வளம்பெற...

வழிகாட்டுகிறது!

நின்று தோள் கொடுப்போம்!
பெற உழைத்திடுவோம்!!